21 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
For All your Real Estate & Investments Needs!
HOMELIFE HIGHER STANDARDS
•Independently owned and operated
HomeLife/GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 29, Mississauga
416.321.6969 / 905.712.2666

Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

நதி 21 | பாலம் 04 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | FEBRUARY 15, 2011

# எகிப்து அதிபர் ஹஸ்னி முபாரக் பதவி துறப்பு

பதினெட்டு நாட்கள் மக்கள் போராட்டத்தின் பின்னர் எகிப்து அதிபர் ஹஸ்னி முபாரக் தனது 30 ஆண்டு கால அதிகார ஆட்சியை விட்டு பெப்ரவரி 11, 2011 இல் பதவி விலகினார்.

1928 மே 4 இல் பிறந்த முபராக் இராணுவத்தில் சேர்ந்து ஒரு போர் விமானம் ஓட்டுபவராக பயிற்சி எடுத்து எகிப்தின் விமானப்படையில் ஒரு விமானியானார். 1975 இல் எகிப்தின் அதிபர் அன்வர் சாகாத் முபாரக் ஐ உதவி அதிபராக்கினார். 1981 இல் இஸ்லாமிய ஆயுததாரிகள் அன்வர் சாகாத்தைக் கொலை செய்தபோது ஹஸ்னி முபாரக் எகிப்தின் அதிபராக பதவியேற்றார்.



எகிப்தின் சரித்திரப் பிரசித்திபெற்ற இஸ்ரேலுடனான சமாதான உடன்படிக்கை 1979 இல் ஏற்படக்காரணமாக இருந்தவர் முபாரக் என்பது குறிப்பிடத்தக்கது. முபாரக்கின் பதவி விலகலை தொடர்ந்து இராணுவம் பதவி ஏற்றது. இராணுவம் வெளியட்ட அறிக்கையில் நாட்டின் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதாகவும் தாங்கள் ஆறுமாதம் பதவி வகிக்கப் போவதாகவும் அதற்குள் ஜனநாயகமுறையில் நாடுதளுவிய அதிபருக்கான தேர்தல் நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் முக்கிய பிரிவுகளின் தளபதிகளும் எகிப்தின் பாதுகாப்பு அமைச்சரான Hussein Tantawy யை கொண்டதுமான ஒரு இராணுவ சபையே தற்போது எகிப்தை ஆள்கின்றது. இந்த இராணுவசபை மக்கள் போராட்டத்தையும் வேலை நிறுத்தத்தையும் உடனடியாக முடிவுக் கொண்டுவருமாறு கேட்டுள்ளது. ஹஸ்னி முபாரக் உம் அவரது இரண்டு மகன்மார்களான அலா (Alaa) உம் ஹாமல் (Gamal) உம் சேர்ந்து $40 பில்லியன் டொலர் சொத்துக்களை வைத்திருக்கிறார்கள் என கணக்கிடப்பட்டுள்ளது.

## ஏமனில் போராட்டம் தொடங்கியது

எகிப்து மக்கள் 18 நாட்களாக பெரும் போராட்டத்தில் ஈடுபட்டு அதிபர் ஹஸ்னி முபாரக்கை பதவியை விட்டு துரத்தியதை தொடர்ந்து மத்திய கிழக்கில் பல இடங்களிலும் போராட்டம் தொடங்கியுள்ளன.

ஏமன் நாட்டில் 30 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி செய்து கொண்டிருப்பவர் சலேவ் (Ali Abdullah Saleh). இவருக்கு எதிராக மக்கள் போர்க்குரல் எழுப்பத்தொடங்கியுள்ளனர். அதிபர் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி பெருந்திரளானோர் ஆர்ப்பாட்டத்தில் குதித்துள்ளனர். மக்கள் வெள்ளத்தை கட்டுப்படுத்த பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். துனிசியா மற்றும் எகிப்தில் பாவிக்கப்பட்ட அதே சுலோகங்களுடன் மக்கள் ஏமனின் தலைநகரான Sanaa இல் உள்ள நாடாளுமன்றத்தை நோக்கி ஊர்வலமாக செல்கிறார்கள்.

## அல்ஜீரியாவிலும் போராட்டம் வெடித்தது

எகிப்தின் மக்கள் போராட்டத்தை தொடர்ந்து, அல்ஜீரியாவிலும் ஞாயிற்றுக்கிழமை போராட்டம் வெடித்தது. இதனால் பொலீசுக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. கலவரத்தில் 400 பேர் கைது செய்யப்பட்டனர். வட ஆபிரிக்க நாடான துனிசியாவில் உருவான அரசுக்கு எதிரான போராட்டம், எகிப்தில் நிலை கொண்டு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி விட்டு தற்போது அல்ஜீரியாவில் குடிபுகுந்துள்ளது.

அல்ஜீரியாவில் 1999 முதல் அப்துல் அஜீஸ் புட்டாபிளிக்கா அதிபராக இருக்கிறார். எகிப்தை போலவே அங்கும் 20 ஆண்டகளாக அவசரநிலை சட்டம் அமலில் இருக்கிறது. இதனால் தலைநகர் அல்ஜெயர்ஸ் உள்ளிட்ட பல முக்கிய நகரங்களில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் வேலையில்லாத்திண்டாட்டம், வறுமை, அரசியல், சுதந்திரம் மறுப்பு போன்ற பல்வேறு பிரச்சினைகளிலும் அல்ஜீரியா எகிப்தை போன்றுதான் உள்ளது. எகிப்தில் போராட்டம் தீவிரம் அடைவதற்கு முன்பே, கடந்த ஜனவரியில் அல்ஜீரியாவில் பெருமளவில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர் (Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

GSF Golden Store Fixtures
Friend for your Business
905-565-6555
1 877-565-6554
Store Planning, Design & Installation
» Acrylics
» Counter Top Displays
» Gift Bags & Ribbons
» Glass Displays
» Grid Panels & Accessories
» Mannequins
» Pegboard & Accessory
» Racks
» Shopping Cart & Baskets
» Showcases
» Sign & Sign Holders
» Slatwall & Accessories
» Steel Shelving
» Wood Displays
And Much More..........
நீங்கள் புதிதாக ஆரம்பிக்கும் வியாபார நிலையத்தை எங்கள் கைவண்ணத்தால் அழகுற வடிவமைத்து பொருத்துவதற்கும், உங்கள் வியாபார நிலையத்துக்குத் தேவையான பொருட்களை பெற்றுக் கொள்வதற்கும் நீங்கள் நாடவேண்டிய தமிழரின் ஒரே ஒரு ஸ்தாபனம்.
355 Admiral Blvd, Unit #5
Mississauga, Ont, L5T2N1
www.goldenstorefixtures.com
sales@goldenstorefixtures.com

RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கெள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
8 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

துரித பணமாற்றுச் சேவை
• 53 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 20 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# எகிப்து அதிபர்...



இந்நிலையில் எகிப்து மக்கள் வெற்றியை சந்தித்தது அல்ஜீரியர்களை உற்சாகப் படுத்தியுள்ளது. ஞாயிற்றுக்கிழமை தலை-நகர் அல்ஜெயாசில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் கூடி அதிபரை பதவி விலகக் கோரியும், அவசரநிலை சட்டத்தை நீக்கக்கோரியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நகருக்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் நுழையும் வழிகளை பொலிஸார் அடைத்து விட்ட போதிலும் அதையும் மீறி மக்கள் குவிந்து விட்டனர். இதனால் பல இடங்களிலும் மக்களுக்கும், பொலிஸாருக்கும் மோதல் ஏற்பட்டது. தொடர்ந்து 400 பேர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 10 ஆண்டகளில் இதைப் போன்று மிகப்பெரிய அளவில் அங்கு ஆர்ப்பாட்டங்கள் எதுவும் நடக்கவில்லை என்பதால் இந்த ஆர்ப்பாட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

## ஈரானிலும் போராட்டம் தொடங்கியது

ஈரானின் தலைநகரான தெகரானில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பெப்ரவரி 14 ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். இதனை அடக்குவதற்காக ஈரானின் இராணுவம் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசியும் பொல்லுகளால் அடித்தும் இவ்வெழுச்சியை அடக்க முற்பட்டது. இதனால் பலர் காயமடைந்தும் சிலர் இறந்தும் உள்ளார்கள். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கிட்டத்தட்ட 30 வருடமாக ஆட்சி செய்யும் ஈரானிய அதிபரைப் பதவி விலகுமாறு கோசங்கள் எழுப்பினார்கள். ஈரானிய அரசு செல்போன்களையும், இணையத்தள தொடர்புகளையும் தடை-செய்ய முற்பட்டாலும் அவற்றையும் மீறி செய்திகளும் படங்களும் இணையத்தளங்களினூடாக வெளிவந்துகொண்டிருக்கின்றன.

## குடிவரவாளர் அனுமதியை 5 வீதத்தால் கனடா குறைப்பு

கனேடிய அரசு கனடாவிற்குள் குடிவரவாளர்களை அனுமதிப்பதை 5 வீதத்தால் குறைக்க உள்ளது. இதில் மிகவும் பாதிக்கப்பட உள்ளவர்கள் பெற்றோரையோ அல்லது தாத்தா, பாட்டிமார்களையோ கனடாவிற்கு அழைக்க முற்படுபவர்கள் ஆவர். குடும்ப உறவுகள் என்றவகையில் பெற்றோரையோ அல்லது தாத்தா, பாட்டிமார்களையோ குடிவரவாளர்களாக அழைப்பதற்கு விண்ணப்பித்திருந்தால் அவர்கள் இனி நீண்டகாலம் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கவேண்டும். பெற்றோர் மற்றும் தாத்தா, பாட்டிமார்களை அடக்கும் குடும்ப உறவுகள் என்ற வகையான குடிவரவாளர்கள் கடந்த வருடம் 16 ஆயிரம் பேர் நாட்டினுள் அனுமதிக்கப்பட்டனர். இவ் எண்ணிக்கை எதிர்வரும் ஆண்டில் 11 ஆயிரமாக குறைக்கப்படும். வன்கூவரை சேர்ந்த குடிவரவாளர்களுக்காக வாதிடும் சட்டத்தரணி Richard Kurland தெரிவிக்கையில் இப்போது 140,000 விண்ணப்பங்கள் தேங்கிக் கிடக்கின்றன. இதனால் இப்போது ஒருவர் தனது பெற்றோரை அழைப்பதற்கான குடிவரவு பத்திரங்களை நிரப்பி அனுப்பினால் அவர் தனது பெற்றோரை கனேடிய மண்ணில் காண 13 வருடங்கள் காவல் இருக்கவேண்டும் என்றார்.

## மிசிசாக்கா நகரபிதா 90ஆவது பிறந்தநாளைக் கொண்டாடினார்




மிசிசாக்கா நகரபிதா ஹேசல் மக்கலியோன் (Hazel McCallion) பெப்ரவரி 14ஆம் திகதி தனது 90 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவர் முதன்முறையாக 1978ல் நகரசபைக்கு தெரிவுசெய்யப்பட்டார். இவர் 12ஆவது முறையாக மிசிசாக்க நகர-சபைக்கு நகரபிதாவாக கடந்த தேர்தலில் தெரிவுசெய்யப்பட்டார். மக்கலியோன் அடுத்த முறை நகரசபைத் தேர்தலில் போட்டியிடமாட்டார் எனத் தெரிவித்துள்ளார்.

## வாசகர் எண்ணம்

**தவறான தகவல்:** மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் 1992 ஆம் ஆண்டில் தொடங்கப்படவில்லை. மாறாக 1994 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் நாள் சென்னை தியாகராய நகரில் உள்ள நடிகர் சங்க கட்டடத்தில் தொடங்கப்பட்டது. மற்றும் இந்திய - தமிழக சாக்கடை அரசியலில் பணத்தாலும், அதிகாரத்தாலும், அராஜகத்தாலும் கருணாநிதி - சோனியா-ஜெயலலிதா போன்றவர்களை எதிக்க கண்டிப்பாக அவருக்கு எதிரானவர்களின் துணை வைகோவுக்கு அவசியமானது. இதில் ஒரு வேறுபாடு முன்னர் ஜெயலலிதா வைகோவை எதிரியாக எண்ணி அழிக்க முயன்றார், ஆனால் கருணாநிதியோ அரவணைத்து அழிக்க முயன்றார், காங்கிரசோ வைகோவுக்கு பரம எதிரி. பொடா சிறைவாசத்தின் முடிவில் ஜெயலலிதாவை எதிர்க்க திமுக - காங்கிரசுடன் அணிசேர வேண்டிய ஒரு தர்ம சங்கடமான நிலை வைகோவுக்கு. பின் நடந்த 2006 தேர்தலில் முன்னணி தலைவர்களான ரத்தினராஜ் போன்றவர்களை வெளிப்படையாகவே கருணாநிதி வைகோவிடம் இருந்து பிரிக்க முற்பட வைகோ மதிமுகவை காப்பாற்ற அதிமுகவுடன் அணி சேர வேண்டிய சூழ்நிலை. இந்த பண, அதிகார, அராஜக பலங்கொண்ட எதிரிகளை சமாளிக்க ஒரு கொள்கை பிடிப்புள்ள நேர்மையான படித்த அரசியல் வாதியான வைகோவுக்கு விரும்ப தகாதவர்களுடன் கூட்டணி வைக்க வேண்டி நிர்பந்தம் மாறி மாறி ஏற்படுகிறது. இதனாலயே கட்சி ஆரம்பித்து காணாமல் போனவர்கள் வரிசையில் வைகோ போகாமல் இன்றும் விசுவாசம் - உறுதி மிக தொண்டர்களுடன் மதிமுக கொடி தாயகத்தில் (தலைமை அலுவலகம் - எழும்பூர் ) கம்பீரமாக பறக்கிறது.

அன்புடன்,
தொண்டன்
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம்.

## நினைவாற்றல் - 3

அகணி அவர்களின் நினைவாற்றல் -3 கட்டுரையை வாசித்தேன். நிறைவடைந்தேன். பயன் பெற்றேன். ஆரம்பக்கல்வியில் இருந்து பல்கலைக்கழகம் வரை கற்பவற்றை தெளிவாக ஞாபகம் வைத்து சிறப்படைய நல்லதொரு வழிகாட்டல் முறையே மைன்ட் மப் என்பதைத் தெரிந்துகொண்டேன். அகணியின் இந்த நுட்ப மூலம் வழிகாட்டல் பெற்ற பல்கலைக்கழக மாணவி தரண்யா கெங்காதரனின் இணைக்கப்பட்ட மைன்ட் மப் நல்ல உதாரணமாக அமைந்துள்ளது. கதை. கட்டுரைகள். சுய விபரக்கோவை தயாரிப்பவர்களுக்கும். கற்பனை வளம் உள்ள நாவல்களை மூலக் கருத்து சிதையாமல் எழுதி முடிப்பதற்கும் எழுத்தாளர்களுக்கும் சிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ளது. என் பாராட்டுக்கள் அகணிக்கும். விளம்பர பத்திரிகைக்கும் உரித்தாகுக. நன்றி.

- ராஜ்குமார் பிறேமினி.

விளம்பரம்
VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

| | |
|---|---|
| **பதிப்பாளர்:** | ராஜா மகேந்திரன் |
| **பத்திரிகை ஆசிரியர்:** | சத்தியா மகேந்திரன் |
| **ஊடகப்பொறுப்பாளர்:** | விஜே பாலன் |
| **தட்டச்சு:** | கலா |
| **அலுவலக முகாமையாளர்:** | நிலானி |
| **பதிப்பு:** | *Can Media Publishing Inc.* |


*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059* *FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca* *Web: www.vlambaram.com*

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*1. Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
*2. Tel.: 416.282.8059*
*3. Fax: 416.282.4978*
*4. email: vlambaram@sympatico.ca*
*5. web: vlambaram.com*

# அடங்க மறுத்த முபாரக் இறங்கிய பின் எகிப்து?



நாம் முன்னர் குறிப்பிட்டது போல் அமெரிக்கா முபாரக்கை இறங்கச் சொன்னது. முபாராக் தனது இறுதி நாட்களில் சி.என் ஊடகவியலாளருடன் மாத்திரமே பேட்டி கொடுத்திருந்தார். அடங்க மறுத்த முபாரக்கை மக்கள் எழுச்சி மிரளச் செய்தது. தொடர்ச்சியாக அமெரிக்காவும் சர்வதேச நாடுகளும் கொடுத்த அழுத்தம் இன்று எகிப்தில் தற்காலிக மாற்றம் ஒன்றிற்கு வழிகோலியுள்ளது.

முபாரக்கின் வெளியேற்றம் முக்கியமாக இரண்டு நாடுகளை பெருமளவு பாதிக்கும். ஒன்று இஸ்ரேல், இரண்டாவது அமெரிக்கா. இஸ்ரேல் கடந்த காலங்களில் மூன்று போரைச் சந்தித்துள்ளது. (எகிப்துடன்) 1948. 1967 1973. இந்தப் போர்களில் இஸ்ரேலின் முக்கிய எதிரியாக இருந்தது எகிப்து. இஸ்ரேல் எகிப்தைக் கண்டு மிரண்டது. பாலஸ்தீனிய முஸ்லீம் நாடுகளின் கூட்டணி எகிப்தின் தலைமைத்துவமின்றி இந்தப் போர்களை சந்தித்திருக்க முடியாது. இதன் பின்னர் அமெரிக்காவும், இஸ்ரேலும் எகிப்துடன் சமரசம் செய்து கொண்டன. இதன் பின்னர் ஹமாசை தனிமைப்படுத்து வதில் முபாரக் முக்கியபங்களித்தார். அமெரிக்கா வருடாவருடம் 1.5 பில்லியன் டொலர்களை உதவியாக வழங்குகின்றது. இதில் பெரும் பகுதி இராணுவ முன்னேற்றத்திற்கே பயன்படுத்தப்படுகின்றது. அமெரிக்க உதவியுடன் 468,500 இராணுவ வீரர்களைக் கொண்ட பெரும் படையையே எகிப்து உருவாக்கியுள்ளது. மத்திய கிழக்கில் அமெரிக்காவின் ஆதிக்கம் எகிப்தின் அனுசரணையுடனே நடந்தேறியது. சவூதி அரேபிய அரசும் அரசர்களும் அமெரிக்க அடிமைகளாக மாறிவிட்டனர். இது அமெரிக்காவிற்கு ஆப்கானிஸ்தான், ஈராக் என அரங்கேற உதவுகின்றது.

**- ரதன் -**

இன்று முபாரக்கின் வெளியேற்றம் அமெரிக்க இஸ்ரேலின் முன்னேற்றத்தைப் பாதிக்கும். தனக்கு சார்பான தலைவருக்கு காத்திருந்த அமெரிக்காவிற்கு மக்கள் எழுச்சியும் எகிப்தை சுற்றியுள்ள ஜோர்டான், யேமன், அல்ஜீரியா போன்ற நாடுகளின் மக்கள் எழுச்சியும் ஒரு உலக போராட்டத்தை உருவாக்கிவிடுமோ என்ற அச்சத்தை கிளப்பியது. இது உலக அரங்கில் அமெரிக்காவின் நிலையை கேள்விக் குறியாக்கும். போராடும் நாடுகளில் உள்ள மக்கள் அமெரிக்க தூதரகத்தின் முன்னாலோ அல்லது அமெரிக்காவையோ அவர்கள் கேட்கவில்லை. இது இந்த மக்கள் தங்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையும் இந்தப் போராட்டம் எந்த அரசியல் பின்னணியுமற்று வெறும் மக்கள் எழுச்சியாகவே அமைந்திருந்தது என்பதையும் சுட்டிக் காட்டுகின்றது.

எகிப்தில் முபாராக் ஆண்ட நீண்ட முப்பது வருடங்களில் பொருளாதார நிலையைப் பார்த்தால் இது தெளிவாக விளங்கும்.

- 2005ம் ஆண்டு 15க்கும் 25வயதுக்குமிடைப் பட்டோரில் வேலையற்றோர் 34 வீதம். இதில் 25-30 க்குமிடைப்பட்டோர் 16 வீதம்
- மொத்த சனத்தொகையில் 40 வீதமானோரின் நாளாந்த வருமானம் 2 டொலருக்கும் குறைவானது.
- 87 வீதமானவர்களின் வருடாந்த வருமானம் 1000 டொலர்களுக்கும் குறைவானது.
- 2010 ல் Inflation Rate 12 வீதம்
- இதே வருடம் உணவுப் பொருட்களின் விலை 20 வீதத்தால் அதிகரிக்கப்பட்டது. ஒருவரது நாளாந்த செலவில் 40 வீதம் உணவுப் பொருட்களுக்கே செல்கின்றது.

வறுமையும் நாட்டை பொருளாதார நிலையில் முன்னேற்றமால் போனதும் முபாரக்கின் முக்கிய தோல்விகள். முபாரக்கின் முக்கிய வெற்றி 70 பில்லியன் சொத்துக்களை சேர்த்ததும் அடம்பிடித்தலுமாகும்.

மக்கள் எழுச்சியின் ஆரம்பம் இரண்டு முக்கிய காரணிகளால் ஊக்கப்படுத்தப்பட்டது. ஒன்று ரியுனிசியாவில் மக்கள் புரட்சி பெற்ற வெற்றி. இரண்டாவது கட்டுப்படுத்தப்பட்ட ஊடக சுதந்திரத்தையும் மீறி நவீன தொழில் நுட்பங்களான பேஸ்புக், இன்ரநெட் போன்றவற்றிக் கூடான பிராச்சாரங்கள். இதில் செல் போன்களும் அடங்கும். April 6 Youth Movement என்றழைக்கப்படும் நவீன தொழில் நுட்ப அமைப்பு 2008 ன் பின் பனிக்காலத்தில் உருவாக்கப்பட்டது. 2008 ஏப்ரல் 06ல் மேற்கொள்ளப்பட்ட பொது வேலை நிறுத்தத்தின் வெற்றியைத் தொடர்ந்து இப்பெயர் நிலையானது. இந்தக் குழுவின் சில உறுப்பினர்களை கிளரி கிளின்டன் சந்தித்துள்ளார். இவர்களுக்கும் தாங்கள் ஆதரவு எனத் தெரிவிக்கும் வகையில் பல மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற சந்திப்பின் படங்களை இப்பொழுது அமெரிக்க ஊடகங்கள் பிரசுரித்துள்ளன. Facebook, Twitter, Flickr, blogs போன்றவற்றினூடாக பிராச்சாரங்களை மேற்கொள்கின்றனர். இதன் ஆரம்பஸ்தர்களுள் ஒருவரான Ahmed Maher பல தடவைகள் கைது செய்யப்பட்டுள்ளார். நவீன ஊடகங்களை மூடுமாறும் உத்தரவிடப்பட்டது. இவர்களின் ஊடகங்களில் 70,000 பேர் வரையில் அங்கத்தவர்களாக உள்ளனர்.

இவற்றுடன் Mohamed ElBaradei போன்ற எகிப்திய தலைவர்களும் மக்களுடன் இணைந்து கொண்டது ஒரு காரணியாக இருந்தாலும் பலர் இவரை மறந்து விட்டனர். மேற்கத்திய நாடுகள் கூறுவது போல் முஸ்லீம் தீவிரவாதிகளோ அமைப்புக்களோ இப்போராட்டத்தின் பின்னணியில் இல்லை.

கடந்த பல நாட்களாக இராணுவம் அமைதி காத்தது பலருக்கும் ஆச்சரியத்தை அளித்துள்ளது. முபாரக் இராஜினாமா செய்வதற்கு முதல் நாள் இராணுவ உயர் அதிகாரிகள் சந்தித்துள்ளனர். இக்கூட்டத்திற்கு முபாராக் செல்லவில்லை. இராணுவ ஆட்சி வருமோ என்ற அச்சமும் பலரிடமிருந்தது. ஆனால் அதுவே தற்காலிக

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL



# மனதை எப்படி கட்டுப்படுத்துவது?

சத்குரு, என் மனம் தேவையில்லாததை எல்லாம் நினைக்கிறது. என் மனத்தை நான் எப்படிக் கட்டுப்படுத்துவது? மேலும் குறிப்பாக தியானம் பழக வேண்டுமென்றால் மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சொல்கிறார்களே?

சத்குரு: முதலில் உங்கள் மனதை ஏன் கட்டுப்படுத்த முயற்சிக்கிறீர்கள்? உங்கள் சிறு வயதிலிருந்தே, குறிப்பாக ஆன்மீக வாதிகள் என்று சொல்லப்படுபவர்கள் சொல்லி வந்திருக்கிறார்கள், கெட்ட விடயங்களை நினைக்கக்கூடாது, உங்கள் மனதை நீங்கள் கட்டுப்படுத்தப் பழக வேண்டும் என்றெல்லாம். ஆனால் அப்படிச் செய்யும்போது மனம் அந்த விடயங்களைத்தான் முழு நேரமும் நினைக்க ஆரம்பிக்கிறது. உங்கள் மனத்தின் செயலைப் பொறுத்தவரையில் வகுத்தல், கழித்தல் எல்லாம் கிடையாது. அங்கே கூட்டல், பெருக்கல் மட்டும்தான். உங்கள் மனதிலிருந்து அதிரடியாக ஒரு எண்ணத்தையாவது உங்களால் நீக்க முடியுமா? முடியவே முடியாது, இல்லையா?


ஏதாவது ஒன்றைக் குறித்து இன்று நினைக்கக்கூடாது என்று நீங்கள் முடிவு செய்தால் அன்று அதுதான் நடக்கிறது. நீங்கள் முயற்சித்துப் பாருங்கள். இன்று சிகப்பு நிறத்தைப் பற்றி சிந்திக்கக் கூடாது என்று முடிவு செய்யுங்கள். திடீரென்று உங்கள் அக்கம்பக்கம் எல்லாம் பலவும் சிகப்பு நிறமாக இருப்பதைப் பார்க்கலாம். மனத்தின் அடிப்படைத் தன்மைகளை புரிந்து கொள்ளாமல் நாம் இப்படியே பலவாறு முயற்சித்துக் கொண்டிருக்கிறோம்.

தியானத்தில் உட்காரும் போது, என் இதயம் துடிப்பதை நிறுத்த வேண்டும் என எண்ணுகிறீர்களா? என் சிறுநீரகம் தனது செயலை நிறுத்த வேண்டும் என எப்போதாவது நினைத்திருக்கிறீர்களா? கிடையாது. அவையெல்லாம் தனது செயலை தொடர்ந்து நடத்த அனுமதித்தீர் கள்தானே? பிறகு மனத்தையும் அது தனது வேலையை செய்ய ஏன் நீங்கள் அனுமதிக்கக்கூடாது? ஆனால் தியானம் செய்ய உட்காரும்போது மட்டும் மனம் நின்று விட வேண்டும் என நினைக்கிறீர்கள். இது மிகவும் தவறான அணுகுமுறை. மக்கள் எப்போதும் உங்களுக்கு சொல்லி வந்திருக்கிறார்கள், மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று. உங்களால் எப்போதும் அப்படி மனதைக் கட்டுப்படுத்த முடியாது. மற்றவர்கள் யாராவது தன் மனதைக் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள் என்று நீங்கள் நம்புகிறீர்களா? யாரும் அப்படி செய்ததில்லை, தெரியுமா? இயல்பாகவே அப்படிச் செய்ய முடியாது.

இந்த மனம் ஒரு புழுவிலிருந்து, ஒரு பூச்சியிலிருந்து, ஒரு குரங்கிலிருந்து, தற்போது மனிதன் வரை இத்தகைய பரிணாம வளர்ச்சி அடைய இலட்சக் கணக்கான வருடங்கள் எடுத்திருக்கிறது. இவ்வளவு மகத்தான முயற்சிக்குப்பின் இத்தகைய மனம் உங்களுக்குக் கிடைத்திருக்கும்போது, அதை கட்டுப்படுத்த ஏன் முயற்சிக்கிறீர்கள்? அது முழுத் தீவிரத்துடன் இருக்கவேண்டும் என்றுதான் நான் விரும்புகிறேன். ஆனால் அற்புதமாக இருக்க வேண்டிய மனம் தற்போது உங்களுக்கு துன்பத்தை உற்பத்தி செய்கிற இயந்திரமாக மாறிவிட்டது.

உங்களின் எல்லாத் துன்பங்களும் உங்கள் மனத்தில்தானே உற்பத்தியாகின்றன? அப்படியென்றால் அதை எப்படி இயக்குவது என்று உங்களுக்குத் தெரியவில்லை. இந்த மனத்தை வைத்து ஆனந்தம் எப்படி உற்பத்தி செய்வது என்று தெரிந்துவிட்டால் பிறகு அதை கட்டுப்படுத்த எண்ணுவீர்களா? ஒருபோதும் மாட்டீர்கள். எனவே உங்கள் மனத்தை எப்படி சரியாக இயக்கவேண்டும் என்பதைத்தான் நீங்கள் முதலில் கற்றக் கொள்ள வேண்டும்.

யோகாவில் உங்கள் மனதை கட்டுப்படுத்தத் தேவையில்லை. சில எளிமையான பயிற்சிகள் உள்ளன.




## சத்குரு வாசுதேவ்

அவற்றை கடைப்பிடித்தால் போதும். அப்போது “நான்” என்னும் தன்மை உங்கள் உடல், உங்கள் மனம் ஆகியவற்றிலிருந்து சிறிது விலகியிருப்பதை பார்க்கமுடியும். அந்த இடைவெளியை நீங்கள் உருவாக்கிவிட்டால், பிறகு உங்கள் துன்பங்கள் அனைத்தும் நிரந்தரமாக முடிவுக்கு வந்துவிடும்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.ort /
www.ishayoga.org
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org



# மகாவம்சத்திலிருந்து சிங்கள தேசியவாதத்தை நோக்கி - 3



18 ஆம் நூற்றாண்டில் டச்சுக்காரர்களது வருகைக்குப் பின்னர் கத்தோலிக்கம் தீவிரமாகப் பரவ முடியாத நிலை ஏற்படுகின்றது. ஏனெனில் டச்சுக்காரர்கள் கத்தோலிக்கர்கள் அல்ல. பல நுற்றாண்டு களாகப் பல்வேறு சமூகக்குழுக்கள் இங்கு குடிபெயர்ந்து வந்துள்ளன. இவர்களில் அநேகர் இந்தியாவிலிருந்து குறிப்பாகத் தென்னிந்தியாவிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள். இவர்கள் அனைவரும் ஒன்று கலந்து உருவான அடையாளம் சிங்கள அடையாளமாக உருப் பெறுகிறது.

**நடராஜா முரளிதரன்**

இங்கு இவர்களின் ஒன்றிணைதலுக்கான கருவியாக விளங்கியது சிங்கள மொழியே. இது பௌத்தம் என்ற கருத்தாக்க வரையறைக்கு அப்பாலும் அமைவதை நோக்கலாம். சிங்கள அடையாளத்தில் பௌத்தம் தீர்மான-கரமான பங்கை ஆற்றிவந்தாலும் அது ஆதிக்கம் செலுத்தும் வகைக்குள் அடங்கவில்லை என்பதே கட்டுரையாளரின் (குணரட்ணா) வாதம்.

இக்கருதுகோளைத் தமிழர்களாகிய தளத்தில் நாம் விவாதிக்கவும், உரையாடவும் வேண்டிய அவசியம் உள்ளதாகவே நான் கருதுகின்றேன். மகாவம்ச காவியத்தைப் பொறுத்தவரையில் அங்கு நிகழ்ந்த போராட்டங்கள் யாவும் பௌத்தர்களுக்கும், அதனை விசுவாசிக்காதவர்களுக்கும் இடையில் நடைபெற்ற போராட்டங்களே. ஆனால் தற்போதைய சமகாலச் சூழல் அத்தகையதா? என்ற கேள்வி எழுப்பப்படுகை யில் அதனை நாங்கள் விவாதத்திற்கு உட்படுத்தியே ஆக வேண்டும்.

அண்மைக் காலங்களில் சிறிலங்கா அரச தலைவர்களாகப் பணியாற்றிய அனைவருமே பௌத்த மதத்தைப் பேணுபவர்களாக இருந்துள்ளார்கள். அவர்களில் சிலர் கிறீஸ்தவர்களாக இருந்து அதிகாரத் தலைமைக்கு இட்டுச் செல்லப்படுகையில் பௌத்த மதத்தைத் தழுவுவதன் மூலம் தங்களை மேலும் பலப்படுத்துவதையும் காணலாம். இதன் மூலம் பௌத்த, சிங்களத் தேசியவாதத்திற்குத் தங்களை மேலும் விசுவாசிகளாகக் காட்டிக் கொள்ளுதல் இவர்களின் அக்கறையாக அமைந்துள்ளது. குறியீட்டு ரீதியிலான இவர்களது அடையாளப்படுத்தல் மேலும் செயற்பாட்டுத் தளத்தில் தீவிரமாகச் சிங்கள மயமாக்குதலுக்குள் சமூகத்தை இழுத்துச் செல்வதில் முடிகிறது. 1920களில் பல் தேசியச் சமூகங்களின் வாழ்விடமான இலங்கையில் சமஸ்டி ஆட்சிமுறையினை நடைமுறைக்கு உள்ளாக்குவதன் அவசியத்தை வரலாற்றில் முதன்முதலாக வற்புறுத்திய பண்டாரநாயக்கா எவ்வாறு இனவாதச் சேற்றில் புதையுண்டார் என்பதையும் இங்கு நோக்க வேண்டும்.

எனவேதான் அதிகார அரசியலில் தலைமை தாங்குவோர் தங்கள் பிடி பலவீனமடைவதற்கான எத்தகைய செய்முறைகளிலும் தங்களை உள் ஆழ்த்திக் கொள்ள மாட்டார்கள். காலனித்துவ காலகட்டத்தில் ஆங்கிலக் கல்வியற்றிருந்த தென்னிலங்கைச் சிங்களச் சமூகம் சுதந்திரத்திற்குப் பிந்தைய இலங்கையில் இயல்பாகவே முன்னுக்கு வரத் துடிக்கின்றது. அவ்வாறு வேகம் கொண்டு எழுகின்ற சிங்கள சமூகத்திற்கு தனிச் சிங்களச் சட்டம் மூலம் இரை போடுவதற் கான சாத்தியத்தை பண்டாரந-ாயக்கா ஏற்படுத்துகின்றார்.

## பிரித்தானிய காலகட்டம்

இக்காலகட்டத்திலே நிலப்பிரபுத்துவம் சிறிது சிறிதாக மாற்றம் பெற ஆரம்பிக்கிறது. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் உற்பத்திச் சாதனங்களின் கட்டுப்பாட்டைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் உள்ளூர் முதலாளி வர்க்கம் உருவாகியது. ஆங்கிலக் கல்வியைக் கற்றவர்கள், கிறீஸ்தவத்திற்கு மாறியவர்கள் என இம்மேட்டுக்குடியானது இன, மத, சாதீய வேறுபாடுகளை ஊடறுத்துக் கொண்டு செல்வதை நாம் அவதானிக்கலாம்.

மிசனறிக் கல்வியை பெற்றுக்கொள்கிறது இந்த மேட்டுக்குடி. ஆங்கில மொழி,

**தொடர்ச்சி 10ஆம் பக்கம்**





**உங்கள் பொறுப்புகளை அறியுங்கள்**

உங்கள் பணித் தராதர உரிமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றி மேலும் கற்றுக்கொள்ளுங்கள்.

ontario.ca/employmentrights • 1-800-531-5551

ஒன்றாறியோ அரசினால் நிதி வழங்கப்பட்டது

Ontario

# உலக கிண்ண திருவிழா கிரிக்கட் - 2011

## விளையாட்டுத் தகவல்கள் 299

உலக கிண்ணப் போட்டி வருகிற 19 ம் திகதி தொடங்கி, ஏப்ரல் 2 ம் திகதி வரை நடக்க உள்ளது. இந்தியா, இலங்கை, வங்காளதேசம் ஆகிய 3 நாடுகளில் உள்ள 13 மைதானங்களில் இந்தப் போட்டி நடக்கிறது. இதில் 14 நாடுகள் பங்கேற் கின்றன. அவை 2 பிரிவாக பிரிக்கப் பட்டுள்ளன. "ஏ" பிரிவில் ஆஸ்திரேலியா, இலங்கை, பாகிஸ்தான், நியூசிலாந்து, ஜிம்பாப்வே, கென்யா, கனடா அணிகளும், "பி" பிரிவில் இந்தியா, தென்ஆப்பிரிக்கா, இங்கிலாந்து, வெஸ்ட்இண்டீஸ், வங்காள தேசம், அயர்லாந்து, நெதர்லாந்து ஆகிய அணிகளும் இடம்பெற்றுள்ளன.

உலக கோப்பை போட்டிக்கு முன்பு 14 அணிகளும் பயிற்சி ஆட்டத்தில் விளையாடுகின்றன. ஒவ்வொரு அணியும் 2 பயிற்சி ஆட்டத்தில் விளையாடுகிறது. கென்யா, நெதர்லாந்து, ஜிம்பாப்வே, அயர்லாந்து அணிகள் ஏற்கெனவே ஒரு பயிற்சி ஆட்டத்தில் விளையாடி விட்டன.

உலக தர வரிசையில் 2-வது இடத்தில் இருக்கும் அணியும், 1983-ம் ஆண்டு உலக கோப்பையை வென்ற அணியுமான இந்தியா 2 பயிற்சி ஆட்டத்தில் விளையாடுகிறது. இந்திய அணி தனது முதல் பயிற்சி ஆட்டத்தில் "நம்பர் ஒன்" அணியான ஆஸ்திரேலியாவை எதிர் கொள்கிறது. இந்திய அணி சமீபத்தில் தென்ஆப்பிரிக்கா வுக்கு எதிரான தொடரை இழந்தது. ஆஸ்திரேலியா அணி இங்கிலாந்தை வீழ்த்தி இருந்தது. இந்த பயிற்சி ஆட்டத்தில் சிறப்பாக விளையாடினால் இந்திய வீரர்களுக்கு மிகுந்த நம்பிக்கை ஏற்படும். நடைபெறும் மற்ற பயிற்சி ஆட்டங்களில் வெஸ்ட்இண்டீஸ் - கென்யா (கொழும்பு), நியூசிலாந்து - அயர்லாந்து (நாக்பூர்), கனடா - வங்காளதேசம் (சிட்டாகாங்), இலங்கை - நெதர்லாந்து (கொழும்பு) அணிகள் மோதுகின்றன.

### அதிரடி மாற்றங்களுடன் களமிறங்கும் தென்னாபிரிக்கா

இந்த உலகக் கிண்ணப் போட்டிக்கு தென்னாபிரிக்க அணி சிறப்பாகத் தயாராகி யிருக்கிறது என்று கப்டன் ஸ்மித் தெரிவி த்துள்ளார். இந்த நிலையில் தென்னாபிரிக்க அணி கப்டன் ஸ்மித் அளித்த ஒரு பேட்டியில் கூறியிருப்பதாவது. கடந்த முறையை விட இந்த உலகக் கிண்ணப் போட்டிக்கு தென்னாபிரிக்க அணி சிறப்பாகத் தயாராகியிருக்கிறது. 2007 உலகக் கிண்ணப் போட்டியில் நாங்கள் கிண்ணத்தை வெல்வோம் என்ற எதிர்பார்ப்பு நிலவியதால் எங்களுக்கு அளவுக்கு அதிகமாக நெருக்கடி ஏற்பட்டது. உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்பது எங்களது விருப்பமாகும். அதுதான் எங்கள் மனதில் உள்ளது. அப்படி இல்லாவிட்டால் போட்டிக்குச் செல்வதில் அர்த்தம் இல்லையே?

இந்த முறை நாங்கள் கடந்த முறைபோல் அல்லாமல் மிகவும் நெருக்கடி இல்லாமல் செயல்பட வேண்டும் என்று விரும்புகிறோம். படிப்படியாக முன்னேற முயற்சி செய்வோம். இறுதிப் போட்டிக்குள் நுழைய வேண்டும் என்பது எங்கள் இலக்காகும். கடந்தமுறை நாங்கள் இறுக்கமான மனநிலையுடன் செயல்பட்டோம். ஆனால், இந்த முறை அது இருக்காது. கடந்த முறை ஒரே மாதிரியான வீரர்கள் அதிகம் இருந்தோம். கடந்த முறையை விட அனுபவம் வாய்ந்த வீரர்கள் குறைவு என்றாலும் இந்த முறை பல்வேறு விதமான திறமை கொண்ட வீரர்கள் அணியில் இடம்பெற்றுள்ளனர். சுழற்பந்து வீச்சில் கூட சிறந்த வீரர்கள் உள்ளனர். இதனால் வீரர்களைப் பயன்படுத்துவதில் நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. கடந்த முறை ஒரே மாதிரியான ஆட்டப் பாணியைக் கடைப்பிடித்தோம். ஆனால், இந்த முறை வித்தியாசமான ஆட்டத்தை வெளிப்படுத்து வோம். பவர் பிளேயை சரியாக அடித்து விளையாடத் திட்டமிட்டு இருக்கிறோம். பந்து வீச்சாளர்கள் ஆக்ரோஷமாகச் செயற்பட்டு விக்கெட்டை வீழ்த்த முடிவு செய்துள்ளோம். இந்த முறை உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கு மிகவும் சிறப்பாகத் தயாராகியிருக்கிறோம்.

### இறுதி உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடும் முன்னணி வீரர்கள்

உலக கிண்ணப் போட்டியில் பங்கேற்கும் 14 அணிகளில் நிறைய வீரர்கள் தங்களது கடைசி உலகக் கிண்ணப் போட்டியில் ஆட இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சில முன்னணி வீரர்கள் பற்றிய விபரம் வருமாறு: சச்சின் டெண்டுல்கர் (இந்தியா) - கிட்டத்தட்ட துடுப்பாட்டத்தில் எல்லா சாதனைகளையும் தன்னகத்தே வைத்துள்ள 37 வயதான டெண்டுல்கரின் சாதனைப் பட்டியலில் விடுபட்டது உலகக் கிண்ணம் மட்டும் தான். அவர் உலகக் கிண்ணத்தில் பங்கேற்பது இது 6 ஆவது முறையாகும். அடுத்த உலகக் கிண்ணத்துக்குள் அவரது வயது 42 ஆகிவிடும். எனவே இது தான் அவரது கடைசி உலகக் கிண்ணமாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

ஷகீர்கான் (இந்தியா) - 32 வயதான வேகப்பந்து வீச்சாளர் ஷகீர்கான் அடிக்கடி காயமடைகிறார். அதுமட்டுமன்றி அணியில் அவருக்கு சுமை அதிகம். எனவே 2015 ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் வரை அவர் உடல்தகுதியுடன் இருப்பது கடினம் தான்.

சந்தர்போல் (மேற்கிந்தியா) - 36 வயதான நடுத்தர வரிசை துடுப்பாட்ட வீரர் சந்தர்போலுக்கு இது 5 ஆவது உலகக் கிண்ணமாகும். 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தின் போது மேற்கிந்திய அணியை இறுதிப் போட்டிக்கு அழைத்துச் செல்லும் போராட்டத்தில் (80 ஓட்டங்கள்) கடைசிக் கட்டத்தில் நழுவிப் போனது. அதன் பிறகு உலகக் கிண்ணத்தில் அவரது செயற்பாடு திருப்தி கரமாக இல்லை. இது அவரது கடைசி உலகக் கிண்ணப்போட்டி.



முரளிதரன் (இலங்கை) - 38 வயதான சுழற்பந்துவீச்சு ஜாம்பவான் முரளிதரன் உலகக் கிண்ணத்துடன் ஓய்வு பெறுவதாக அறிவித்து விட்டார். 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை அணியில் இடம் பெற்றிருந்த முரளிதரன் மீண்டும் ஒரு முறை சொந்த மண்ணில் விளையாட இருக்கிறார்.

டில்ஷான் (இலங்கை) - 34 வயதான தொடக்க ஆட்டக்காரர் டில்ஷான் கடந்த சில ஆண்டுகளாக துடுப்பாட்டத்தில் எதிரணிக்கு அபாயகரமான வீரராக விளங்கி வருகிறார். அவருக்கு இதுதான் கடைசி உலகக் கிண்ணமாக இருக்கக்கூடும்.

ஜேக் கலிஸ் (தென்னாபிரிக்கா) - உலகின் சிறந்த சகலதுறை ஆட்டக்காரர்களில் ஒருவரான 35 வயதான கலிஸுக்கு இதுவரை உலகக் கிண்ணங்களில் அதிர்ச்சிகளே மிஞ்சியுள்ளன. 1996 இல் கால் இறுதி, 1999 மற்றும் 2007 இல் அரையிறுதி, 2003 ஆம் ஆண்டு மழையால் சொந்த மண்ணில் முதல் சுற்றுடன் வெளியேற்றம் என்று இதுவரை மோசமான அனுபவங்களையே அவர் சந்தித்துள்ளார்.

ரிக்கி பொண்டிங் (அவுஸ்திரேலியா) - 36 வயதான அவுஸ்திரேலிய கப்டன் ரிக்கி பொண்டிங் 1999, 2003, 2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணங்களை ருசித்துள்ளார். சமீப காலமாக துடுப்பாட்டத்தில் தடுமாறி வருகிறார் என்றாலும் காயத்துக்கு சிகிச்சை பெற்று புத்துணர்ச்சியுடன் களம் திரும்பியிருக்கிறார்.

பிரெட்லீ (அவுஸ்திரேலியா) - 35 வயதான புயல் வேகப்பந்து வீச்சாளர் பிரெட்லீ காயம் காரணமாக உலகக் கிண்ண அணியில் இடம்பெறுவாரா என்ற சந்தேகம் நிலவியது. ஆனால் காயத்தில் இருந்து தேறி தனது இடத்தை உறுதிப்படுத்தி விட்டார்.

போல் கொலிங்வூட் (இங்கிலாந்து) - 20 ஓவர் உலகக் கிண்ணத்தை இங்கிலாந்துக்கு வென்று தந்த 34 வயதான கொலிங்வூட் துடுப்பாட்ட வீரர் மட்டுமன்றி, மிதவேகப்பந்து வீச்சாளரும் கூட. ஒரு நாள் போட்டி உலகக் கிண்ணத்தை இதுவரை இங்கிலாந்து வென்றதில்லை என்ற சாபக்கேட்டை முறியடிக்க அவருக்கு கிடைத்துள்ள கடைசி வாய்ப்பு இது தான்.


சொயிப் அக்தர் (பாகிஸ்தான்) - உலகின் அதி வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவர் அக்தர். காயத்தாலும் ஒழுங்கீனமான நடவடிக்கையாலும் அவரது கிரிக்கெட் வாழ்க்கை முடிந்து விட்டதாக நினைத்த சமயத்தில் பழைய நிலைக்குத் திரும்பி ஒரு வழியாக அணியில் இடம்பிடித்துள்ளார். 35 வயதான அவருக்கு இதுதான் கடைசி உலகக் கிண்ணம் என்பதில் சந்தேகமில்லை.

ஸ்காட் ஸ்டைரிஸ் (நியூஸிலாந்து) - 35 வயதான ஸ்டைரிஸ் சிறந்த சகலதுறை ஆட்டக்காரர். உலகக் கிண்ணத்தில் அவரது சாதனைகள் சிறப்பாக உள்ளன. 18 ஆட்டங்களில் விளையாடி 69.2 சராசரி வைத்துள்ளார்.

ஸ்டீவ் டிகோலா (கென்யா) - 39 வயதான கென்ய கப்டன் டிகோலாவுக்கு இது 5 ஆவது உலகக் கிண்ணம். அவரது தலைமையில் தான் 2003 ஆம் ஆண்டு கென்யா அரை இறுதிவரை முன்னேறி ஆச்சரியப்பட வைத்தது. தனது கடைசி உலகக் கிண்ணத்தில் ஆடும் அவர் இந்த முறையும் சில அதிர்ச்சித் தாக்குதலை தொடுக்கும் வியூகங்களை அமைத்து வருகிறார்.

### உலக கிண்ண போட்டிகளில் சவால் நிறைந்த அணியாக இலங்கை

உலகக் கிண்ண போட்டிகளை நடத்தும் நாடு வென்றதில்லை என்ற நிலையை 1996ஆம் ஆண்டு மாற்றி சாம்பியன் ஆனாது இலங்கை அணி. கடந்த கிண்ண கோப்பையில் இறுதிப்போட்டிக்கு முன்னேறிய அணி என்ற கர்வத்துடன் இந்த உலகக் கோப்பை போட்டிகளில் களமிறங்குகிறது. கோப்பையை வெல்ல அதிக வாய்ப்புகள் உள்ள அணி என்று இலங்கை கருதப்படுகிறது. ஆனால் இந்த முறை அதிரடி வீரர் சனத் ஜெயசூரியா இல்லை. ஆனால் உலகச் சாதனையாளர் முரளிதரன் உள்ளார். அனுபவமிக்க சிறந்த கேப்டன் சங்கக்காரா உள்ளார். இவரது துடுப்பாட்டம் அந்த அணிக்கு பெரிய பலம். ஜெயவர்தனேயுடன், அதிரடி வீரர் தில்ஷானின் ஆட்டமும் கைகொடுத்து பெரிய ரன் எண்ணிக்கையை பெறும் பட்சத்தில் பந்து வீச்சில் மலிங்கா, முரளிதரன் ஆகியோர் வெற்றியை உறுதி செய்து விடுவார்கள் என்ற பலம் இந்த அணிக்கு உள்ளது.



எஸ். கணேஷ்

YARL WINDOW
BLINDS & DRAPERY
Since 1991
Tel: 416.806.5397
905.201.7733
WE ARE SPECIALIZED IN CUSTOM MADE Drapery & Blinds
VENETIAN/VERTICAL/ROLLER
WOOD/FORMWOOD
BLINDS
WOOD & VINYL SHUTTERS
We have experience to make your home more beautiful
CALL: N.SELVAM

# அடமானக்கடன்வட்டிவீதம் VS வீட்டு விலை இறக்கம்

அடமானக்கடன் வட்டிவீத அதிகரிப்பு, வீட்டின்விலை இறக்கம், அடமானக் கடனைத் திருப்பி கொடுக்கும் காலம் (Amortization Period) போன்றவையே ஆதன விற்பனையில் இன்றைய நேரத்தில் முக்கிய கருப்பொருளாகக் காணப்படுகின்றது.

பெப்ரவரி 07, 2011 அன்று CIBC, மற்றும் TD Canada Trust போன்ற நிதி நிறுவனங்கள் மாறாத வட்டிவீதத்தை (Fixed Rate or Closed Mortgage Rate) அதிகரித்துள்ளன. 25 புள்ளிகளால் (100 புள்ளிகள் = 1 வீதம்) 1/4%) அதிகரித்துள்ளன. இருந்தபோதிலும் அண்மைக்காலத்தில் முதன்மை வட்டி வீதத்தில் மாற்றம் ஏற்படவில்லை.



பொதுவாக இன்றைய ஆதனத்தின் சராசரி விலையைக் கணக்கில் எடுக்கும் போது, வட்டிவீத அதிகரிப்பானது, வீட்டின் விலை இறக்கத்தைவிட பாதிப்பு அதிகமானது. அதாவது அதிகளவு மாதாந்த கட்டுப்பணம் செலுத்த வேண்டிவரும்.

இன்று ஆதனம் வாங்குபவர்கள் மாறுகின்ற வட்டிவீதத்தை தேர்ந்து எடுப்பதோ அல்லது மாறாத வட்டிவீதத்தை (Fixed Rate) தேர்ந்து எடுப்பதோ சிறந்தது என்பதைக் கவனமாக கருத்தில் கொள்வது நல்லது. அண்மையில் Capital Economics என்ற நிறுவனம் எதிர்வரும் சில ஆண்டுகளில் வட்டிவீதத்தின் அதிகரிப்பால் (குறிப்பிடத்தக்களவு அதாவது 25%) வீட்டுவிலை வரை இறக்கம் ஏற்படும் என வெளியிட்டது. இதற்கு முக்கிய காரணம் வட்டிவீத அதிகரிப்பு இருந்தபோதிலும், Canadian Real Estate Association (CREA), இந்த வருடத்தில் (2011) கனடாவில் வீட்டின் விலை 1.3% இனால் குறையலாம் என எதிர்வு கூறியுள்ளது.

CREA நிறுவனம் கனடாவில் வீட்டு விற்பனையில் முக்கிய பங்கு வகிக்கும் நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிறுவனம் கனடாவில் ஆதனம் விற்று வாங்கும் பட்டியலை தன்னகத்தே கொண்டுள்ளது. ரொறொன்ரோவிலும் Toronto Real Estate Board (TREB) போன்றது.

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 335**

உதாரணமாக, இந்த வருடத்தில் வீட்டுவிலை 5% இனால் குறைகின்றது எனக் கொள்வோம். கனடாவில் டிசம்பர் 2010 சராசரி விலை $344,550 இலிருந்து $327,322 ஆகக் குறையும் எனக்கொள்வோம். 5 வருட மாறா வட்டிவீதம் 3.9% எனவும் 10% முதலீடு $32,732 எனவும் 25வருட Amortization இல் கடனை திருப்பி கொடுப்பதாகவும் கொள்வோம்.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்


**HomeLife / GTA Realty Inc., Brokerage***

"கனவு உங்களுடையது
பொறுப்பு எங்களுடையது"

1711 Mccowan Rd. #206, Toronto - Tel: 416.321.6969
145 Trades Blvd #29, Mississauga - Tel: 905.712.2666



Raja M. Mahendran, P. Eng
(Broker/Owner)

**SPACE AVAILABLE FOR LEASE**
About 3000 sqft.
in Finch & Middlefield.
2nd Floor. Avail. for insurance office, school, Real Estate.........
Rent $3000
Vacant property

**STORE FOR SALE OR LEASE**



**FINCH & MIDDLEFIELD**
Main floor unit in GTA Square Shopping Mall. Unit is close to a main entrance, high traffic area & plenty of surface and underground parking available. 1 Parking and locker included in the price



**METROGATE (KENNEDY & HWY 401)**
Completion (2011, 2012)
Price starts from $249,900

**BRAND NEW CONDO. FOR SALE**



**BLOOR & SHEBOURNE**
2 Bedroom + den in downtown.
Avail. March 2011. 1 Parking.
Further details please Call

**BRAND NEW CONDO. AVAILABLE**

**HWY 401 & YONGE**
1 Bedroom, 1 + den, 2 bedroom, 2 + den condo avail. Closing in 2014 for special package.
Call: 416.315.9397



**CENTRO**
(Close to Scarborough Town Centre)
Completion (2011). Price starts $239,000 (Special conditions)

**BRAND NEW CONDO. FOR SALE DOWNTOWN (SPADINA & WELLINGTON)**
Completion (2013) price starts to $249,900.00. Special package available for the buyers

**DOWNTOWN**
2 Level Town house for lease in downtown. Close to Rogers Center & CN tower.
2 Washrooms, 1 parking & locker.
Avail. immediately

*Independently Owned & Operated



Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
*Cell: 613 850 9931*

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

**Buying or Selling**

**Relocation Service**
Ottawa>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

*Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555*

# அடங்க மறுத்த...

### 03ஆம் பக்கத்தொடர்ச்சி

தீர்வாகவும் அமைந்துள்ளது.

புதிய தற்காலிக அரசுக்கு பல சவால்கள் உள்ளன. மக்கள் நம்பிக்கையை பெற பல பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். ஜனநாயக முறையில் தேர்தல்கள் நடத்த ஆவன செய்யப்பட வேண்டும். முஸ்லீம் சகோதர நாடுகளுடனான நல் உறவைப் பேண வேண்டும். அதே சமயம் இஸ்ரேலுடனான உறவை துண்டிக்க வேண்டும். புதிய அரசு பதவியேற்றவுடன் இஸ்ரேலுடனான உறவு பேணப்படும் என அறிவித்துள்ளது. இது அமெரிக்கா போன்ற நாடுகளின் பகையை வளர்க்கும். ஹமாசுடனான நல்லுறவை மீள பேண வேண்டும். இது எகிப்துக்கு முஸ்லீம் சகோதர நாடுகளின் ஆதரவைப் பெற்றுத்தரும். எகிப்தின் அரசியல் மாற்றத்தை ஹமாஸ் வரவேற்கின்றது. ஹமாஸ் பேச்சாளர் புதிய அரசு எல்லையை துறந்து விடவேண்டும் என அறிவித்துள்ளார். இந்த விடயத்தை புதிய அரசு எவ்வாறு கையாளப் போகின்றது என்பது முக்கியமான விடயம். ஏப்ரல் 06 இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட போது இஸ்ரேலுக்கான எண்ணெய் ஏற்றுமதி நிறுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருந்தது.

அடுத்து மிக முக்கியமாக கருத்துச் சுதந்திரம், ஊடக சுதந்திரம் போன்றன உடனடியாக வழங்கப்படவேண்டும். தற்சமயம் பொறுப்பெடுத்துள்ள அமைச்சரவை முபாராக்கின் நண்பர்களே. எனவே இவர்கள் மேற் சொன்னவற்றை நிராகரித்து இராணுவ ஆட்சியை நீடிக்கத் தான் செய்வார்கள். இது மீண்டும் ஒரு மக்கள் புரட்சிக்கு வித்திடும். 1940களின் பின்னர் எகிப்தில் நடைபெற்ற மிகப் பெரிய போராட்டமிது. பிரான்சில் 1789ல், ருசியாவில் 1917ல், ஈரானில் 1979ல் மக்கள் புரட்சிகள் வெற்றி பெற்றுள்ளன. இப்புரட்சிகளை விட எகிப்திய புரட்சியை வழிநடத்துவோர் இளைஞர்கள். இதனை புதிய இராணுவ அரசு கவனிக்கத் தவறின் கவலைக்கிடம் அவர்களுக்கே.

துனிசியா, எகிப்தைத் தொடர்ந்து எந்த நாடு என்ற கேள்விக்கு பின்வரும் அட்டவணையில் இருந்தே பதில் தேடலாம். இந்த நாடுகள் அனைத்தும் பொருளாதாரத்தில் மிக மோசமான நாடுகள்

## அதிபர் பதவியேற்ற ஆண்டு

| | | | |
|---|---|---|---|
| Alegria | Abdelaziz Bouteflika | 1999 | |
| bahrain | Hamad ibn Isa Al Khalifa Bahrain | 1999 | King |
| Djibouti | Ismail Omar Guelleh | 1999 | |
| Jordan | Abdullah II bin al-Hussein | 1999 | |
| Libya | Mummar Qaddafi | 1969 | |
| Morocco | King Mohammed VI | 1999 | |
| Oman | Sultan Qsboos | 1970 | |
| Syria | Bashar Assad | 2000 | |
| Yemen | Ali Abdullah Saleh | 1978 | |

**மொரொக்கோ** - மத்திய தரைக்கடலை அண்மித்து அத்திலாந்திக் சமுத்திரத்தில் அமைந்துள்ள வட ஆபிரிக்க நாடு இது. 1956ம் ஆண்டு பிரான்சிடமிருந்து சுதந்திரம் பெற்றது மொரோக்கோ. மொரொக்கோவின் பெரும்பான்மையினர் முஸ்லீம்கள்.

**யேமன்** - இங்கும் போராட்டங்கள் ஆரம்பித்து விட்டன.

**அல்ஜீரியா** - போராட்டங்கள் தொடர்கின்றன.

**ஜோர்டான்** - அரசருக்கு எதிராக மக்கள் குரல் கொடுக்கத் தொடங்கிவிட்டனர்.

மேற்குறிப்பிட்ட நாடுகளில் அடுத்து வரும் சில வாரங்களில் மக்கள் போராட்டங்கள் பெருமளவு ஏற்பட சந்தர்ப்பங்கள் உள்ளன. இந் நாட்டு மக்கள் எகிப்தைப் போல் பெருமளவு மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். உலகமயமாதலின் விளைவும் சர்வாதிகாரத்தின் கொடூரமும் உலகெங்கும் மக்கள் போராட்டங்களை ஏற்படுத்தவுள்ளன. அதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல.



# MEGA MATH PROGRAM

STARTS

MARCH 2011

GROUP ONE G6 & G7

Bringing up their knowledge to G9 standard.
Get High scores in all university. Math contests.
Best opportunity to get in IB program + others enrich Math G9

GROUP TWO G9 & G10

High score in Math & Physic G11 & g12.
creating an excellent Math average at 1st year university

Purpose, course details, parents questions, plus other detauls will be discussed

Parents Meeting
Time & Date
9.30am to 11.30am

Feb 5 Saturday
Feb 6 Sunday
Feb12 Saturday
Feb 13 Sunday
Feb 19 Saturday
Feb 20 Sunday
Feb 26 Saturday
Feb 27 Sunday

"WEEKEND CLASSES ONLY"

******************************************************

More Than

15

Years

## MATH & PHYSIC

கணிதம், பௌதீகம் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

* For the 2nd semester Classes starts in

**February 2011**

FOR ALL GRADE UP TO 1ST YEAR UNIVERSITY.

* Seperate classes for: **IB Programm**

G9, G10, G11, G12

**Sharma: 416.666.5515**
**416.878.3215**

# அடமானக்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

இரண்டு கிழமைகளிற்குரிய கொடுப்பனவு $823 (மோட்கேஜ் காப்புறுதி உட்பட) ஒரு வருடத்திற்கு பின்பாக
வட்டி வீதம் 4.9% இற்கும் வீட்டுவிலை $327,322 எனக் கொண்டால் இரு கிழமைகளிற்குரிய கொடுப்பனவு $865.

5 வருடத்திற்குரிய மேலதிக கொடுப்பனவு $5460 இனால் ஆக அதிகரிக்கும்.

**குறிப்பு:-** குறைந்த வட்டி வீதம் உள்ள காலத்தில் மேலதிக பணத்தை அடமானக் கடனிற்கு எதிராக செலுத்த முடியும் என்றால் அவ்வாறு செய்வதால், எதிர்காலத்தில் வட்டிவீதம் அதிகரிக்கும் போது ஏற்படும் பாதிப்பை ஓரளவு சரி செய்ய முடியும்.

**March 18, 2011 இல் வர இருக்கும் அடமானக்கடன் சம்பந்தமான மாற்றங்கள்**

1. 35 வருடமாக இருந்தால் கடனைத் திருப்பிக் கொடுக்கும் காலம் (Amortization) 30 வருடமாக



குறைக்கப்படுகின்றது.

(குறிப்பு:- இவ்வாறு Amortization ஐ குறைப்பதால் வட்டிவீதத்தை அதிகரிப்பதற்கு நிகராகக் கொள்ளலாம். உதாரணமாக $300,000 அடமானக் கடனை 56 புள்ளிகளால் ஆன வட்டிவீதத்தை அதிகரிப்பதற்கு சமம். (100 புள்ளிகள் = 1 வீதம்)
வீட்டைப் பாவித்து திருப்பி பெறும் கடன்

2. (Refinancing), 90% இலிருந்து 85% ஆகக் குறைக்கப்படுகின்றது.

3. Home Equity Line of Credit (HELOC) என அழைக்கப்படும் கடனிற்கு அரசு வழங்கிவந்த காப்புறுதி நீக்கப்படுகின்றது.

**ஆதனம் சம்பந்தமான தகவல்கள்**

1. ஜனவரி 2010 இல் கனடாவில் இருந்த மொத்த அடமானக்கடன் $468 பில்லயன் நவம்பர் 2010 இல் கனடாவில் இருந்த அடமானக்கடன் $ 506 பில்லியன்

2. பெப்ரவரி 07, 2011இல் 5 வருட வட்டிவீதம் 5.44% ஆக 25 புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டுள்ளது. (5 வருட அடமானக் கடனைப் பெறும்போது நிதி நிறுவனங்கள் மேலதிக கழிவு தரும் என்பதனை கவனிக்க)

3. ஜனவரி 2010 இலிருந்து வாழ்வதற்காக கட்டப்படும் இல்லம், மனைகளிற்கான Permits இன் பெறுமதி 21.2% இனால் அதிகரித்துள்ளது. குறிப்பிட்ட காலத்தில் வியாபாரம் சம்பந்தப்பட்ட பெறுமதி 22% இனால் இறங்கியுள்ளது.

**2010 இல் வழங்கப்பட்ட *Permits* அளவு**

Residential Permit $ 44.3 Billion
Non Residential Permit $ 28.8 Billion


# மகாவம்சத்திலிருந்து...

05ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆங்கிலேய பழக்க வழக்கங்கள், ஆங்கிலேயச் சிந்தனைகள் , ஆங்கிலேய உடைகள் என அனைத்தையும் கடைப் பிடித்தாலும் ஆங்கிலேயர்களாக இவர்களால் மாறிவிட முடிவதில்லை. பிரித்தானியத் தரகு முதலாளிகளுக்குக் கீழ்ப்பட்டவர்களாகவே இவர்கள் அமைந்தார்கள்.

1736இல் ஒல்லாந்தர்கள் முதன் முதலாக நிறுவுகிறார்கள் சிங்கள அச்சகமொன்றை. ஆனாலும் அவற்றைக் கூடுதலாகப் பயன்படுத்தியது பிரித்தானிய மிசனறிமார்கள். 40 வருடங்களாகப் பிரசுரங்கள், வெளியீடுகள் எனப் பௌத்தர்களிடமிருந்து எந்தப் போட்டி யுமில்லாமல் மிசனறிமார்களால் இயங்க முடிந்தது.

முடிவில் கிறீஸ்தவத்தின் இத்தகைய பிரச்சார முனைப்புக்களை, தாக்குதல்களைப் பௌத்தர்களும் எதிர்கொள்ள ஆரம்பிக்கின் றார்கள். இந்தக் காலகட்டத்திலே பௌத்த மதப் பிரச்சாரங்களுக்கெனத் தனியாக இரு அச்சகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. பௌத்த கல்வி, பிரசுரங்கள், பிரசங்கங்கள், விவாதங்கள் வாயிலாகக் கிறீஸ்தவத்திற்கு எதிர்நிலையெடுத்து பௌத்தம் செயற்பட ஆரம்பிக்கும் தருணங்களே பௌத்த மறுமலர்ச்சியின் தோற்றுவாய் எனலாம்.



இங்கு பௌத்த மறுமலர்ச்சியை முன்னெடுத்த பிக்குகள் பிரசுர வாயிலான பிரச்சாரங்களோடு மாத்திரம் தணிந்து விடாது பகிரங்கமான தொடர் விவாதங்களை மிசனறி மார்களோடு நிகழ்த்தியமை குறிப்பிடத் தக்கது. இவ்வாறான விவாதங்களை முன்னெடுத்த பௌத்த பிக்குமார்களில் மிகுந்த அறிவுஜீவிகளான குணானந்த தேரர், சிறிசுமங்கல தேரர் ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்கள்தான் பௌத்த மறுமலர்ச்சியின் போற்றுதற்குரியவராகக் கருதப்படும் அநகாரிக தர்மபாலாவின் வழிகாட்டிகளாகக் கருதப்படுபவர்கள்.

கல்வி என்பது பௌத்தர்களின் பலவீனமான பகுதியாக இருந்தது. பௌத்த கோயில்களில் அமைந்திருந்த சில பாடசாலைகள் பெரிய மிசனறிப் பாடசாலைகளுடன் அந்தஸ்து அளவில் போட்டியிட முடியாதனவாக இருந்தன. அக் காலத்தில் பலரும் தேடிச் சென்ற விஞ்ஞானபூர்வமான கல்வியை இவற்றால் வழங்கவும் முடியவில்லை. 1880 இல் பிரம்மஞான சமூகத்தைச் சேர்ந்த கேர்ணல் ஒல்கொட் என்பவரும், மெடம் பிலாவட்ஸ்கி என்பவரும் இலங்கைக்கு வரும் வரையில் இந்த நிலைமைகளில் அதிகம் மாற்றம் ஏற்படவில்லை. 1873 இல் பாணந்துறையில் நடைபெற்ற பிரபல்யமான பகிரங்க விவாதமே கேர்ணல் ஒல்கொட் அவர்களை பௌத்த மதத்தைத் தழுவும் படி ஆழமாகச் செல்வாக்குச் செலுத்திய அம்சமாக இருந்தது. கேர்ணல் ஒல்கொட் அவர்கள் இலங்கையில் 12 கல்லூரிகளை யும், 400க்கும் அதிகமான பாடசாலைகளை யும் நிறுவியதாகக் கூறப்படுகிறது (கீர்த்திசிங்கவும், அமரசூரியவும் 1981:11, ஆதாரம் : வியூகம் இதழ் -2 பக்-45).

இங்கு சிங்களக் குட்டி முதலாளித்துவத்தின் எழுச்சிக்கான விருப்பு, வெறுப்புத் தள அமைவுகளுக்கப்பால் வேறு விடயங்களும் நோக்கப்பட வேண்டியனவாக உள்ளன. அவ்வாறான நோக்குதலில் ஆசிரியர்கள், ஆயுர்வேத சித்த வைத்திய மருத்துவர்கள், கீழ்நிலை அரச அதிகாரிகள், பௌத்த பிக்குகள் ஆகியோரை உள்ளடக்கிய பிரிவினர் தென்னிலங்கையில், கிராமங்களில் கருத்தியல் ஆளுமை செலுத்துபவர்களாக விளங்கினார்கள் என்பதும் ஒன்று.

இங்கேதான் அநகாரிக தர்மபாலா சிங்கள மக்களுக்கு ஆரிய மாயை ஊட்டுபவராக, பெருமித உணர்வைப்படைப்பவராக பௌத்த சிங்களம் தொடர்பான விழிப்புணர்வை சாதாரண மக்கள் மத்தியில் உருவாக்கினார்.

1930களில் கிறீஸ்தவர்கள் உட்படப் பெருமளவான சிங்கள மக்கள் தமது பிள்ளைகளுக்குச் சிங்கள, பௌத்த பெயர்களை வைத்தனர். அநகாரிக தர்மபாலா மேற்கத்தேயச் சிந்தனைகளை தேச அரசு என்பதன் அடிப்படையில் தனித்துச் சிங்கள மக்களுக்கு மட்டுமே பொருத்தினார். மண்ணின் மைந்தர்களான தூய சிங்கத்தின் வாரிசுகளான சிங்களவர் மாத்திரமே இந்தத் தீவுக்கு உரித்துடையவர்கள் என்பதை எந்தவித விட்டுக்கொடுப்புமின்றி வலியுறுத்துகிறார்.

இந்த மண்ணில் பிறந்த மற்றைய சிறுபான்மைச் சமூகங்களுக்கு உரித்தான சமத்துவ உரிமையை அநகாரிக தர்மபாலா சில சமயங்களில் வெளிப்படையாகவும், பல சந்தர்ப்பங்களில் மறைமுகமாகவும் மறுத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அந்நிய மேற்கத்தேய கிறீஸ்தவத் தாக்குதல்களிலிருந்து பௌத்த மதத்தைப் பாதுகாப்பது என்ற வகையில் ஆரம்பிக்கப் பட்ட பௌத்த மறுமலர்ச்சி அமைப்பானது பௌத்த சிங்களம் என்ற பிரக்ஞையை உருவாக்கும் சாதனமாக மாற்ற மடைந்துள்ளது. (இன்னும் வரும்)




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough


# மனித குலத்தினை ஏன் வாழவைக்க கூடாது?

## 'உடல் உறுப்புகளின் தானம்' (Organ & Tissue Donation)

எங்கள் வாழ்வின் முடிவு! என்றோ ஒரு நாள் என்பது நிச்சயிக்கப்பட்டுவிட்டது!

அந்தமுடிவு! அன்று எதிர்கொள்ளும் மரணத்தின் பின்பு மின்தீயினுள் அல்லது மண்ணினுள் என்றோ ஒருநாள் சங்கமமாகப் போகும் எம் உடலின் சில உறுப்புகள் வாழ்விற்காகத் துடிக்கும் இன்னொரு ஜீவாத்மாவை ஏன் வாழவைக்கக்கூடாது?

(கனடாவில், ஒன்ராரியோ மாகாணத்தில் மட்டும் சுமார் 1700 நோயாளிகள் உடல் உறுப்பு மாற்று சத்திர சிகிச்சைக்காக ஏங்கி காத்துக்கொண்டு இருக்கிறார்கள் என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன). பொருத்தமானவர்களின் உடல் உறுப்புகளை பொருத்திக் கொள்ள வேண்டிய நோயாளிகளுக்கு தக்க சமயத்தில் சத்திர சிகிச்சை மூலம் பொருத்தி (Organ Transplant) பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு ஒரு வாழ்வினை வழங்கவென கனடாவின் வைத்திய நிலையங்கள் என்றும் தயார் நிலையில் உள்ளன. இவ்வாறு தேவைப்படும் நோயாளிகளுக்கு உடல் உறுப்புகள் தானம் செய்ய விரும்புவர்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும். அவர்களின் உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டு அதனை மருத்துவ நிறுவனங்களுடன் சேர்ந்து நிறைவேற்றும் அரச நிறுவனம் ஒன்று இயங்கிக் கொண்டிருப்பது பற்றி அறிந்து கொண்டீர்களா?



தங்கள் மரணத்தின் பின்பு மற்றவர்களை வாழவைப்போம் என்ற நல்எண்ணங்களை மனதில் கொள்பவர்கள் அதற்குரிய நடவடிக்கைகளை முன் எடுத்தீர்களா? இவ்வாறு இதுவரை முன் எடுக்காவிட்டால் உடனடியாக நிறைவேற்றி கொள்ள இதோ தகவல்கள்!

**கனடாவில் உடல் உறுப்புகளை தங்கள் மரணத்தின் பின்பு தானம் செய்ய விரும்புபவர்கள் எவ்வாறு? எப்படி உடன்படிக்கை செய்து வைப்பது?**

தானம் செய்ய விரும்புபவர்களின் விண்ணப்பங்கள், விபரங்களை ஏற்று அதனை பதிவில் வைத்திருந்து உடல் உறுப்பு மாற்றங்களுக்காக காத்திருக்கும் நோயாளிகளுக்கும் அவர்களோடு சம்பந்தப்பட்ட வைத்திய நிலையங்களுக்கும் வழங்க என கனடாவின் ஒவ்வொரு மாகாணத்திலும் அதற்குரிய நிறுவனங்கள் செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றன.

எம்மவர் பலர் வசிக்கும் ஒன்ராரியோ மாகாணத்தில் மாகாண சுகாதார அமைச்சின் கீழ் கடந்த 2000ஆம் ஆண்டிலிருந்து ஒரு நிறுவனம் பதினாறு வயதுக்கு மேற்பட்டவர்களிடம் மட்டும் இத்தகைய உடன்படிக்கைகளை அவரவர் மாகாண மருத்துவ சுகாதாரகாப்புறுதி அட்டை (Ontario Health Card) அடையாளத்தினை அடிப்படையாக வைத்து திரட்டி எடுத்து அவற்றினை தங்கள் மின்கணினி தகவல் மையத்தில் கவனமாக வைத்திருந்து சம்பந்தப்பட்ட நோயாளிகள்

தொடர்ச்சி 23ஆம் பக்கம்


**SEARCHING FOR FAMILY PHYSICIAN**

To staff a brand new clinic within a new medical building. Amazing opportunity to build your own practice. Competitive split.


**EMR Ready**
In-house ECG, PFT, Allergy test, event monitor.
Easy access to pharmacy, lab, specialists within the medical building.

Contact: DR. VUKIET TRAN
Mobile : 647.688.2907
Email : unimedicofamilypractice@hotmail.com

**குடும்ப வைத்தியர் தேவை**

புதிதான ***Medical*** கட்டிடத்தில் தொடங்க இருக்கும் புதிய சிகிச்சையகத்துக்கு வைத்தியர்கள் தேவை.

தங்களது சொந்தமான சேவைகளை கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பம். நியாயமான சலுகைகள்.



# திருவள்ளுவர் ஆண்டு தமிழ் புத்தாண்டு ஆகுமா?

கடந்த இரண்டு விளம்பரம் இதழ்களிலும் திருவள்ளுவர் பிறந்த திகதி என ஒரு கற்பனை திகதியை 1921 இல் சில தமிழ் அறிஞர்கள் அறிவித்ததையும் அதன் பின்னர் வந்த தமிழக அரசு திருவள்ளுவருக்கு ஒரு கற்பனை உருவம் அமைத்ததையும் தற்போதைய தமிழக அரசு 2008 இல் இருந்து இந்த இரண்டு கற்பனை நிகழ்வுகளின் உச்சக்கட்டமாக இவற்றை தமிழ் புத்தாண்டாக அறிவித்ததையும் பார்த்தோம். இவ் இதழில் ஏன் திருவள்ளுவர் ஆண்டு தமிழ் புத்தாண்டாக வரமாட்டாது என்று சில கேள்வி பதில்கள் மூலம் தெளிவுபடுத்துவோம்.

**(1) திருவள்ளுவர் பிறந்ததிகதி கி.மு 31 ஆம் ஆண்டு ஜனவரி 15 என்பது பிழையா?**

திருவள்ளுவர் பிறந்த ஆண்டை சரித்திர பூர்வமாக ஆராய்ந்தவர்கள் பலர். கி.மு 300 இல் இருந்து கி.பி 300 வரை இருக்கும் எந்த ஒரு ஆண்டாகவும் இருக்கலாம் என்னும் போது எவ்வாறு வள்ளுவர் பிறந்தது இப்படி ஒரு திகதி எனக்கூறமுடியும். இது வள்ளுவர் பிறந்தது எனக்கூறப்படும் கற்பனைத் திகதியாகும்.

**(2) மறைமலை அடிகள் போன்ற தமிழ் அறிஞர்கள் ஏன் கி.மு 31 ஜனவரி 15ஐ வள்ளுவர் பிறந்த திகதியாக1921 இல் தேர்ந்து எடுத்தார்கள்?**


அப்பொழுது ஆங்கில ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருந்தது. தனித்தமிழ் இயக்கங்கள் என்று கூறினாலும் அவர்கள் அரசியல் காரணங்களுக்காகவும் ஆங்கில மோகத்தாலும் ஆங்கில வருடப் பிறப்பிற்கு கிட்ட தமிழ் வருடப்பிறப்பு வரவேண்டும் என்பதற்காகவே கி.மு 31ஐயும், ஜனவரி மாதத்தையும், 15ஆம் திகதியையும் தெரிவு செய்தார்கள்.

**(3) தமிழ் அறிஞர்கள் பலர் சேர்ந்து 1921இல் எடுத்த முடிவு தவறா?**

அவர்கள் தமிழ் மொழியில் ஆழ்ந்த அறிவு உடையவர்கள். ஆனால் அவர்களிடம் தகுந்த வானசாத்திர, விஞ்ஞான மற்றும் கணித அறிவு இருக்கவில்லை. அவர்கள் குழுவில் ஒரு அகழ்வாரய்ச்சியாளரோ, தொழில்நுட்பவியலாளரோ மற்றும் விஞ்ஞானிகளோ இருக்கவில்லை. இதனால் அவர்களால் விஞ்ஞான வானசாத்திர நிகழ்வுகள் பற்றி சரியான முடிவு எடுக்கமுடியவில்லை. அதனால் அரசியல் சார்பான முடிவையே எடுத்தார்கள்.

**(4) மறைமலை அடிகளும் மற்றைய தமிழ் அறிஞர்களும் 1921 இல் வள்ளுவர் பிறந்தது பற்றி ஒரு கற்பனை திகதியை எடுக்கவேண்டி வந்ததற்கான அரசியல் காரணம் என்ன?**

ஆங்கிலேயர் பிரித்தாளுவதில் வல்லவர்கள் என்று உங்கள் எல்லோருக்கும் தெரியும். 1921 இல் தமிழ்நாட்டில் வ.உ. சிதம்பரப்பிள்ளை (கப்பலோட்டிய தமிழன்), சுப்பிரமணிய சிவம் போன்ற பழுத்த அரசியல்வாதிகள் இந்தியாவிற்கு சுதந்திரம் வேண்டி ஆங்கில அரசுக்கு எதிராக இந்திய தேசிய காங்கிரஸ் (Indian National Congress) என்ற அமைப்பின் மூலம் பொதுமக்களை திரட்டி போராடி வந்தார்கள். ஆங்கில அரசு இவர்கள் எல்லோரும் பிராமணர்களாக இருப்பதைத் தெரிந்துகொண்டு இவர்களுக்கு எதிராக பிராமணர்கள் அல்லாதவர்களான மறைமலை அடிகள், கல்யாணசுந்தர முதலியார் போன்றவர்களை ஆங்கில அரசிற்கு சார்பாக "Justice Party" மூலம் தூண்டுவதற்காக செய்ய முற்பட்டதே இந்த "வள்ளுவர் ஆண்டு" முயற்சியாகும். ஆகவே இதனால் தான் இந்த முயர்சி 1921 இல் செய்யப்பட்டாலும் தமிழ்மக்களிடம் செல்வாக்கு பெறவில்லை. இது ஆங்கிலேய ஆட்சியை ஆதரிப்பதற்காக பிராமணர்களுக்கெதிராக எடுக்கப்பட்ட நிகழ்வே அல்லாமல் தமிழ் மக்களுக்காக எடுக்கப்பட்ட முடிவு அல்ல.




**(5) 1921 இல் கூடி வள்ளுவர் ஆண்டு பற்றி முடிவெடுத்தவர்களான மறைமலை அடிகள் மற்றும் தமிழ் அறிஞர்கள் இந்திய சுதந்திர பேராட்டத்திற்கு எதிரானவர்களா?**

ஆம், இவர்கள் ஆங்கில அரசிற்கு சார்பாக இந்திய சுதந்திரத்திற்காக பேராடிய பிராமணர்களை எதிர்ப்பதற்காக பிராமண எதிர்ப்பு போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்கள்.

**(6) தற்போதைய தமிழக அரசு 2008 இல் மீண்டும் இந்த வள்ளுவர் ஆண்டு முறையை ஏன் அமல்படுத்தியது?**

M.G. இராமச்சந்திரன் அவர்கள் தமிழ் எழுத்து சீர்திருத்ததை அமல்படுத்தி தனது பெயரை வரலாற்றில் இடம் பெறவைத்துவிட்டார். தற்போதைய தமிழக முதல்வர் தனது பெயரை வரலாற்றில் இடம்பெற வைக்க எடுத்த ஒரு அவசர அரசியல் முயற்சிதான் இது.

**(7) 1921 இல் தமிழ் அறிஞர்கள் எடுத்ததும் 2008 இல் தமிழக அரசு எடுத்ததும் ஒரே தீர்மானமா?**

நிச்சயமாக இல்லை. 1921 இல் தமிழ் அறிஞர்கள் எடுத்தது, ஜனவரி 15 ஆம் திகதி வள்ளுவர் பிறந்ததினமும் தமிழ் வருடபிறப்பும் கொண்டாடப்பட வேண்டும் என்பதாகும். ஆனால் 2008 இல் தமிழக அரசு எடுத்ததோ தை மாதத்தின் முதலாம் திகதியை (தைப்பொங்கல்) தமிழ் வருடப்பிறப்பாக கொண்டாடப்பட வேண்டும். ஆனால் வருடங்களை வள்ளுவர் பிறந்த கற்பனை ஆண்டான கி.மு 31இல் இருந்து கணிக்க வேண்டும் என்பதாகும்.

**(8) 1921 இல் தமிழ் அறிஞர்கள் எடுத்தமுடிவும் 2008 இல் தமிழக அரசு எடுத்த முடிவும் எவ்வாறு வேறுபடுகின்றது?**

உதாரணமாக 2011 ஆம் ஆண்டை எடுத்துக்கொள்வோம். தமிழ் அறிஞர்களின் முடிவின்படி ஜனவரி 15, 2011 தமிழ் வருடம் 2042 பிறந்தது. தமிழக அரசின் முடிவின்படி தை மாதம் முதலாம் திகதி ஜனவரி 14, 2011 (பொங்கல் நாள்) தமிழ் வருடம் 2042 பிறந்தது. அதாவது தமிழக அரசின் தமிழ் வருடப்பிறப்பு பொங்கல் நாளிற்கு ஏற்ப மாறுபடும். ஆனால் 1921 இல் எடுத்த தீர்மானத்தின்படி தமிழ்வருடப்பிறப்பு ஜனவரி 15 ஆம் திகதி வரும். அதற்கும் பொங்கலுக்கும் ஒரு தொடர்பும் இல்லை.

**(9) சித்திரையில் பிறக்கும் வருடம் 60 ஆண்டுகள் சுற்றிச் சுற்றி வருகின்றனவே இதை தவிர்க்கவே வள்ளுவர் ஆண்டு தேவை என்கிறார்களே?**

இது ஒரு தவறான தகவல். வருடங்களின் பெயர்கள் தான் 60. ஆனால் அவை தொடர்ந்தே எண்ணப்பட்டு வருகின்றன. சித்திரை 2010 இல் பிறந்த விகிர்த்தி வருடம் கலியுகத்தின் 5112 ஆம் ஆண்டு ஆகும். சித்திரை 2011 இல் பிறக்க இருக்கும் கர வருடம் 5113 ஆம் ஆண்டு ஆகும்.

**(10) வருடங்களின் 60 பெயர்களும் தமிழில் இல்லையே?**

இது ஒரு பிரச்சினை என்றால் இப்பெயர்களை தூயதமிழில் மொழி பெயர்க்கலாமே? தமிழில் ஏற்கெனவேயுள்ள சொற்களுக்கு (புதன், சனி) புதிய தமிழ் சொற்களை (அறிவன், காரி) உருவாக்குபவர்கள் ஏன் இவ்வருடங்களுக்கு தமிழ் பெயர்களை உருவாக்க முடியாது.

**(11) தைப்பொங்கல் தினம் தமிழ் மக்களுக்கு உரியது, ஆனால் சித்திரை புத்தாண்டு தினம் இந்துக்களுக்குரிய நாள் என்பது சரியா?**

இதைவிட நகைப்பிற்கிடமான விவாதம் வேறு ஒன்றும் இருக்கமுடியாது. தைப்பொங்கலும், சித்திரை வருடப்பிறப்பும் ஒரே மாதிரியான வானவியல் நிகழ்வை கொண்டு கணிப்பது ஆகும். அதாவது சூரியன் மகரராசிக்கு செல்லும் முதல் நாள் தைப்பொங்கல், சூரியன் மேடராசிக்கு செல்லும் முதல் நாள் சித்திரை வருடப்பிறப்பு. இதனால் இரண்டும் தமிழர்களுக்கு உரியது அல்லது இரண்டுமே இந்துக்களுக்குரியது அல்லது இரண்டுமே ஒரு விஞ்ஞான நிகழ்வு சம்பந்தப்பட்டது. ஒன்றில் இருந்து மற்றொன்றை பிரிக்கமுடியாது.

**(12) வள்ளுவர் ஆண்டுப்படி 2042 வருடங்கள். அதற்கு முன்னர் தமிழ் இருக்கவில்லையா?**

கல் தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய மூத்தமொழிக்கு 2042 வயதா என்று யோசியுங்கள். வள்ளுவர் ஆண்டை விட்டு தமிழில் தற்போதுள்ள மிகத்தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியத்தை தொல்காப்பியர் எழுதிய காலத்தில் இருந்து தமிழ் ஆண்டை எண்ணினால் கூட தமிழ் வருடம் தற்போது 7330 ஆம் ஆண்டாக இருக்கும்.

**(13) வள்ளுவர் ஒரு மதமும் சார்ந்தவர் இல்லையா?**

வள்ளுவர் எந்தவொரு மதத்தையும் சார்ந்தவர் இல்லை என்பது தமிழக அரசு கட்டிவிட்ட கதை. இதை பரப்பவே அவர்கள் வள்ளுவர் என்று ஒரு கற்பனை உருவத்தை வரைந்துள்ளார்கள். வள்ளுவர் பற்றி ஆராய்ச்சி செய்யும் பலர் எடுத்த முடிவு 200 வருடங்களுக்கு முன்னர் சென்னை அரசாங்கம் (ஆங்கில அரசு) வெளியிட்ட தங்கக்காசில் உள்ள சமணமுனிவருடைய வடிவமே வள்ளுவரின் உண்மையான வடிவம் என்பதாகும்.

**(14) தமிழக அரசினை ஆளும் "திராவிட" இயக்கங்கள் ஏன் தமிழ் புத்தாண்டு பற்றி முடிவு எடுத்தார்கள். அவர்கள் திராவிட புத்தாண்டாக (தென் இந்திய மொழிகள் எல்லாவற்றிற்கும் பொதுவாக) வள்ளுவர் பிறந்ததினத்தை அறிவித்திருக்கலாம் தானே?**

"திராவிட" இயக்கங்கள் என எல்லா தென் இந்தியமொழிகளை சேர்த்து கூறுபவர்கள் தமிழர் அல்லாதவர்கள். இவர்கள் தமிழர்களை ஆளுவதற்கு உபயோகிக்கும் தந்திரம் இதுவாகும். இவர்களால் மற்றைய திராவிட மொழிபேசுபவர்களை ஏமாற்ற முடியவில்லை. ஆனால் தமிழர் அல்லாதவர்களால் தொடர்ந்து ஆளப்பட்டுவரும் தென்னிந்திய தமிழர்களை ஏமாற்றுவது சுலபம் என்பதால் அவர்கள் தமிழ் மொழியுடனும் தமிழர்களுடனும் விளையாடுகிறார்கள்.

**(15) தமிழ் பெரியார்களான திருவள்ளுவர், தொல்காப்பியர் போன்றவர்களின் உண்மையான பிறந்த ஆண்டு, திகதி போன்றவற்றை கண்டுபிடிக்க முடியாதா?**

தமது சொந்தமேற்படிப்பிற்காக சொந்தச் செலவில் தமிழ் ஆராய்ச்சி செய்பவர்களாலேயே பலவற்றை கண்டுபிடிக்க இயலுமாக உள்ளபோது தமிழக அரசு ஏன் அரசசெலவில் ஆராய்ச்சி செய்து இவற்றை காணமுடியாது. அவர்கள் "திராவிட" அரசுகள் தமிழ்மொழியில் அக்கறை இல்லாதவர்கள். இதனால் அரச செலவில் பெரிய தமிழ் ஆராய்ச்சி எதுவும் செய்ய முற்படவில்லை. தற்போது விஞ்ஞானம் வெகுவிரைவாக முன்னேறுகின்றது. எமது வருங்கால சந்ததியினர் DNA போன்ற அதிநவீன விஞ்ஞான வசதிகளை உபயோகித்து இவற்றை கண்டுபிடிப்பார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. நாம் அதுவரையும் எமது தமிழர் பண்பாட்டில் விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளை (தைப்பொங்கல், சித்தரை புத்தாண்டு) கற்பனை நிகழ்வுகளாக சந்தர்ப்பவாதிகள் மாற்றவிடாமல் பாதுகாத்தல் வேண்டும்.



சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca

# மாமி ஆமியா? - 2

## ஓடும் நீர் உறைவதில்லை 18
## இரண்டாம் பாகம்

ஒரு பெண்ணின் வாழ்க்கை மகள் என்பதிலிருந்து ஆரம்பித்து மருமகள், மனைவி, தாய், மாமி, அம்மம்மா அல்லது அப்பம்மா எனப் பல பாத்திரங்களாக அமைவதுடன் ஒவ்வொரு பாத்திரமும் வெவ்வேறு வாழ்வியல் நிலைகளில், படிமுறைகளில், உள்ளும் புறமுமாகச் சேகரித்துக்கொண்ட அனுபவங்களின் பிரதி-பலிப்பாக அமைகின்றது. இங்கு மாமி என்ற பாத்திரம் மட்டுமே எனது கவனத்துக்கு எடுக்கப்படுவதால், கூறப்படும் கருத்துக்கள் ஒட்டுமொத்தமாக ஒரு பெண்ணின் முழுமையான மனோபாவ வெளிப்பாடாகக் கருதப்படாமல் மாமி என்ற பாத்திரத்தின் அடிப்படையில் மட்டுமே கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இக்கட்டுரை பல பகுதிகளாக வெளிவர இருப்பதனால் எந்த ஒரு பகுதியையும் தவற விடாதீர்கள். அது மட்டுமன்றி இக்கட்டுரையின் இறுதிப் பகுதி இக்கட்டுரை பற்றிய உங்களது கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க இருப்பதால் உங்கள் வினாக்களை அல்லது ஏற்கனவே இக்கட்டுரையில் கூறப்பட்ட விடயம் பற்றிய உங்கள் சுய பார்வையை தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ எழுதி உங்கள் பெயரைக் குறிப்பிடலாமா இல்லையா என்பதையும் குறிப்பிட்டு kgmaster54@hotmail.com எனும் மின் அஞ்சலுக்கு அனுப்பி வையுங்கள். கடந்த இதழில் "மாறுபட்ட மனோபாவங்களின் சுரங்கம் தான் மாமி" என்றும் அந்த மனோபாவங்கள் எவை என்பதை இந்த இதழில் இருந்து ஆராய்வதாகவும் கூறியிருந்தேன். ஆரம்பிப்போமா?

**KG Master-kgmaster@rogers.com**

## பலமும் பயமும்

உடலால் அதிக பலமும் மனத்தால் அதிக பயமும் கொண்ட அமைப்புத்தான் பெண். ஒரு பெண்ணின் படிமுறையான வளர்ச்சியில் உடற்பலம் இயற்கையின் கொடையாகவும் மனப்பயம் சமூகத்தின் உள்ளீடாகவும் அமைந்து விடுகின்றன. இந்தப் பலத்துக்கும் பயத்துக்குமான உள்ளகப் போராட்டமே ஒரு பெண்ணின் மனோபாவ வெளிப்பாடுகளாக அமைகின்றன. அதாவது ஒவ்வொரு பலமும் அது சார்ந்த பயத்தையும் ஒவ்வொரு பயமும் அது சார்ந்த பலத்தையும் கொண்டிருப்பது ஒரு பெண்ணின் இயல்பான தன்மையாகும். இந்த விடயம் பற்றிய தெளிவான பார்வை மட்டுமே ஒரு பெண்ணின் ஒவ்வொரு பாத்திரமும் ஒன்றிலிருந்து மற்றையது ஆச்சரியத்தக்க வகையில் வேறுபட்டிருப்பதற்கான காரணத்தை நாம் புரிந்து கொள்வதற்கு உதவும். ஒப்பீட்டு ரீதியில் ஒரு ஆணின், மகன்-தந்தை-மாமா என்ற உறவு சார்ந்த பாத்திரங்களுக்கு இடையிலான உளவியல் வேறுபாட்டிற்கும் ஒரு பெண்ணின் மகள்-தாய்-மாமி எனும் உறவு சார்ந்த பாத்திரங்களுக்கு இடையிலான உளவியல் வேறுபாட்டுக்கும் அதிக அளவு வேறுபாடு இருப்பது ஏன் என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.



> " உண்மையில், ஒரு பெண்ணின் பலமும் பயமும் அதன் அதி உச்சத் தேவையாக சுய பாதுகாப்பை வேண்டி நிற்கின்றது. இந்தப் பாதுகாப்பானது உடலியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் அவசியமாகின்றது. "

உண்மையில், ஒரு பெண்ணின் பலமும் பயமும் அதன் அதி உச்சத் தேவையாக சுய பாதுகாப்பை வேண்டி நிற்கின்றது. இந்தப் பாதுகாப்பானது உடலியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் அவசியமாகின்றது.

ஒரு சமூகத்தின் சிறப்பு அந்தச் சமூகம் சார்ந்த பெண்களின் சிறப்பால் அமைகின்றது எனக் கூறப்பட்டாலும், தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு பெண்ணும் தனது பாதுகாப்பிற்கு நம்பிக்கைத்தன்மை உள்ளவர்களில் சார்ந்து வாழ வேண்டியது தவிர்க்க முடியாததாக அமைந்துவிடுகின்றது. மகளாக இருக்கும் போது பெற்றோரிலும், மனைவியாக இருக்கும்போது கணவனிலும், தாயாக இருக்கும்போது பிள்ளைகளிலும் சார்ந்து வாழ வேண்டியுள்ளது. இங்கு தனது பிள்ளைகளில் பெண்பிள்ளை திருமண மானதும் மேற்குறிப்பிட்ட பாதுகாப்புக்கருதி அவரது கணவனைச் சார்ந்திருக்க வேண்டியிருப்பதால் தாயானவள் பெண்பிள்ளைகளைச் சார்ந்திராமல் ஆண் பிள்ளைகள் திருமணமான பின்னரும் அவர்களில் சார்ந்திருப்பது இயல்பாக அமைந்து விடுகின்றது. இதற்குக் காரணங்கள் பலவாக இருந்தாலும் மிகவும் முக்கியமாக தனதும் கணவனதும் உடல் நிலை, நிலையற்ற வருமானம் அல்லது குடும்ப வருமானத்தில் ஏற்படும் திடீர் வீழ்ச்சி, திருமணமாகாத சகோதர குறிப்பாக சகோதரிகளின் எதிர்காலம் என்பவற்றுடன் உத்தரவாத மானதும் நம்பகமானதுமான பாதுகாப்பு என்பன முதன்மை பெறுகின்றன.

இந்த எதிர்பார்ப்புக்கள் திருமணமான மகனில் அதிகமாகச் சார்ந்திருப்பதால் அந்த எதிர்பார்ப்புக்கள் ஒருவேளை மகனின் மனைவியால் அதாவது மருமகளால் நிரா-கரிக்கப்படலாம் என்ற பயம் இயல்பாகவே எழுகின்றது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தனது கணவரின் அவ்வாறான முயற்சிகளுக்குத் தான் தடையாக நின்றது போல் மருமகளும் மகனுக்குத் தடையாக இருப்பாரோ என்ற பயம் இவர்களைப் பற்றிக்கொள்ளும். அது மட்டுமன்றி இந்தப் பயம் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளப் படாமல் அவர்களுக்குள்ளேயே விடையைத் தேடி அலைந்து கொண்டிருக்கும். இவ்வாறான பயம் ஒரு நிலையை எட்டியதும் அது பலமாக மாற்றமடைகின்றது. இந்தப் பலமானது பயத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்குப் பயன்படுத்தப் படுகின்றது. புளிப்பு அதி கூடிய நிலையில் உறைப்பாக மாறுவதுபோல் பயம் அதி கூடிய நிலையில் அதிகாரமாக உருவெடுத்து விடுகிறது.

அடுத்ததாக, சுமைகளின் பகிர்வு பற்றிய பயமும் இந்த மனோபாவத்திற்குக் காரணமாக அமைகின்றது. திருமணமான ஆரம்ப காலங்களில் தனது கணவனின் இயலுமையில் அதிகளவு நம்பிக்கையுடன் வாழ்க்கையை நகர்த்தும் ஒரு பெண் காலப் போக்கில் குடும்பம் பெரிதாகும் போது தானும் அழுத்தங்களுக்கு உள்ளாகித் தனது கணவனுக்கு அதிகளவு அழுத்தங்களைப் பிரயோகிக்க நேரிடுகின்றது. இந்த அழுத்தங்கள் குடும்ப விரிவாக்கத்திற்கேற்ப பொருளாதார விரிவாக்கம், குழந்தைகளின் உடல்நலம், கல்வி, வெளித்தோற்றம், உளவியல் முன்னேற்றம் போன்றவற்றைச் சார்ந்ததாக இருக்கும். இந்தக் காலப் பகுதியில் குழந்தைகள் மீது முதலீடு செய்யப்படும் காலமும் சக்தியும் கணவன்மீதும் தன் மீதும் முதலீடு செய்யப்படும் அளவை விடப் பலமடங்காக அமையும். தொடர்ச்சியான வாழ்வின் நகர்வில், தானும் கணவரும் சரி சமமாகக் குடும்பச் சுமைகளைச் சுமந்து வந்திருந்தாலும் கூட அதைப் பொருட்படுத்தாமல் கணவர் தன்னையும் சேர்த்துச் சுமந்தவர் என்ற மனப்பாங்குடன் எதிர்காலத்தில் அவரையும் தன்னையும் தாங்கும் தூண்களாக தனது புத்திரர்கள் இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு இயல்பாகவே எழுகின்றது. இந்த எதிர்பார்ப்பு ஏமாற்றமாகிவிடுமோ என்ற பயம் ஏற்படும்பொழுது அது தாயின் வடிவில் வெளிப்படுத்தப்படாமல் மாமியின் வடிவில் வெளிப்படுத்தப்படுகின்றது. இதற்கு அடிப்படைக் காரணம் தாய்மையின் பலவீனங்களில் ஒன்றாகும். தாய்மையின் பலவீனங்கள் என்ன? அடுத்த இதழில் பார்ப்போம்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master

**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

**மஹாராஜியின் உரைகள்**



| On DVD | On TV |
|---|---|
| இலவச DVDக்கு அழையுங்கள் (416) 431-5000 1 877 707 3221 | Saturdays at 11:00 am<br>Rogers Cable Channel - 20<br>Bell Express vu Channel - 219 |

# கலித்தொகை - நாடகக் காட்சிகள்

கலித்தொகையில் காதற் செய்திகள் மற்றும் நிகழ்வுகள் நாடகக் காட்சிகள் போலவே அமைக்கப்பட்டுள்ளன. காட்சிகள் பலவிதமாக வரும். தலைவி தன் காதலைப்பற்றித் தோழிக்குக் கூறுவதுபோலவும் தலைவன் - தலைவி உரையாடல் போலவும் தலைவன் - தோழி உரையாடல் போலவும் தலைவி தன் காதலை எண்ணித் தானே மகிழ்வது போலவும் அல்லது தலைவன் பிரிவை நினைந்து வருந்துதல் போலவும் காட்சிகள் வரும். தலைவிக்குத் தோழிபோலத் தலைவனுக்குப் பாங்கரும் உதவிசெய்வதுண்டு. இவர்கள் செய்யும் உரையாடல்கள் கொண்டுள்ள கற்பனைகள் இலக்கியத்துக்கும் அறிவு நுட்பங்கள் வாழ்க்கை வளத்துக்கும் செழுமை சேர்ப்பனவாக உள்ளன. அத்தகைய காட்சிகள் சிலவற்றை இனிச் சுவைத்து இன்புறுவாம்.

1. கலித்தொகை பாலைக்கலியுடன் தொடங்குகின்றது. பாலை, முல்லையும் குறிஞ்சியும் நல்லியல்பு இழந்த பகுதி. வறட்சி மிகுந்தது; வளம் குறைந்தது. அதனால் பொருள் தேடுதற்பொருட்டு தலைவன் தலைவியைப் பிரிந்து பிற இடங்களுக்குச் செல்வது வழக்கம். எனவே பாலைநிலத்து அகவாழ்விற் பிரிதல் பிரதான ஒழுக்கமாயிற்று.

ஒரு தலைவன் பொருள் ஈட்டுதல் வேண்டித் தலைவியைப் பிரியக் கருதினான். அதனை அறிந்த தோழி அவன் பிரிவால் தலைவி வருந்துவாள் என்று கூறி அவனைத் தடுக்க முயன்றாள். பொருள் கேட்டுவருவார்க்குக் கொடுப்பதற்குப் பொருள் இல்லை என்றும் இரப்பார்க்கப் பொருள் இல்லை என்று சொல்லுதல் இழிவு என்றும் கூறி மலையைக் கடந்து செல்லத் தலைவன் உறுதிபூண்டான். அப்பொழுது தோழி ''வடமீன்போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள் இவண் வருந்தவும் நீ பொருள்தெடச் செல்வாயானாள் அவளிடத்தில் உனக்கு அன்பு இல்லை என்று பொருள்'' என்றாள். அது கேட்ட தலைவன் தலைவிமீது கொண்ட ஆராவன்பினால் அவளைப் பிரியாதொழிந்தான். குற்றேவல் செய்யுந் தன்சொல்லைக் கேட்டுத் தலைவன் தங்கிய இச்செய்தியைத் தோழி வந்து தலைவிக்குக் கூறி மகிழ்ந்தாள். இதனைக் கூறும் பாலைக்கலியின் முதலாவது பாடல் இது:

தொடங்கற்கட் டோன்றிய முதியவன் முதலாக
அடங்காதார் மிடல்சாய அமரர்வந்து இரத்தலின்
மடங்கல்போற் சினைஇ மாயஞ்செய் அவுணரைக்
கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலும்
உடன்றக்கான் முகம்போல ஒண்கதிர் தெறுதலிற்
சீறருங் கணிச்சியோன் சினவலின் அவ்வெயில்
ஏறுபெற் றுதிர்வனபோல் வரைபிளந் தியங்குநர்
ஆறுகெட விலங்கிய வழலவி ராரிடை
மறப்பருங் காதல் இவள்ஈண்டு ஒழிய
இறப்பத் துணிந்தனிர் கேண்மின்மற் றைஇய;

தொலைவாகி இரந்தோர்க்கொன்று ஈயாமை இளிவென
மலையிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ
நிலைஇய கற்பினாள் நீநீப்பின் வாழாதாள்
முலையாகம் பிரியாமை பொருளாயின் அல்லதை;

இல்லென இரந்தோர்க்கொன்று ஈயாமை இளிவெனக்
கல்லிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ
தொல்லியல் வழாஅமைத் துணையெனப் புணர்ந்தவள்
புல்லாகம் பிரியாமை பொருளாயின் அல்லதை;

இடனின்றி இரந்தோர்க்கொன்று ஈயாமை இளிவென
கடனிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ
வடமீன்போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள்
தடமென்றோள் பிரியாமை பொருளாயின் அல்லதை;

எனவிவள்,

புன்கண்கொண்டு இனையவும் பொருள்வயின் அகறல்
அன்பன்று என்றுயான் கூற அன்புற்றுக்
காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்குத் தாழ்புகின்
தொல்கவின் தொலைதல் அஞ்சியென்
சொல்வரைத் தங்கினர் காத லோரே.

இதனைக்கேட்டுத் தலைவிக்குப் புணர்வு என்னும் உவகை பிறந்தது. இது தரவும் மூன்றாய் வந்த தாழிசையும் தனிச்சீரும் சுரிதகமும் பெற்றுவந்த முதனிலை ஒத்தாழிசைக் கலிப்பாவாகும். இதில் இரு காட்சிகள் உள்ளன. ஒன்று, தோழி - தலைவன் உரையாடல். இரண்டு, செய்தியைத் தோழி தலைவிக்குச் சொல்லி அவளை மகிழ்விப்பதான காட்சி.

2. கலித்தொகையில் இரண்டாவதாகத் தொகுக்கப்பட்டிருப்பது குறிஞ்சிக்கலி. குறிஞ்சி மலையும் மலைசார்ந்த இடங்களையும் குறிக்கும். அங்கு தலைவனும் தலைவியும் பெரிதும் ஒன்றாக வாழ்வதால் கூடல் அவர்களின் பெரும்பான்மை ஒழுக்கமாகக் கொள்ளப்பட்டது.

குறிஞ்சிக்கலியின் 15ஆவது பாடல் காட்டும் காட்சி இது:

சுடர்த்தொடீஇ கேளாய் தெருவில்நாம் ஆடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்

உண்ணுநீர் வேட்டேன் எனவந்தாற்(கு) அன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீர் ஊட்டிவா என்றாள் என யானுந்
தன்னை அறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்(டு)
அன்னாய் இவனொருவன் செய்ததுகாண் என்றேனா
அன்னை அலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினான் என்றேனா அன்னையுந்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கணாற் கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்.

''ஒளி பொருந்திய வளையல்களை அணிந்த தோழியே! இதனைக் கேள்: முன்புநாம் தெருவோரம் மணலாற் சிற்றில் அமைத்து விளையாடிய காலத்தில் எமது சிற்றிலை காலாற் சிதைத்தும் கூந்தற் பூமாலையை அறுத்தும் வரிப்பந்தை எடுத்துக்கொண்டு ஓடியும் நாம் வருந்தத் தக்க குறும்புகளைச் செய்த காவலில்லாத சிறியவன்(சிறுபட்டி), ஒருநாள் அன்னையும் நானும் ஒன்றாக இருந்தபோது குடிக்கத் தண்ணீர் கேட்டு வந்தான். அன்னை செம்பிலே தண்ணீர் உண்ணக் கொடு என்றாள். நான் அவனுக்குத் தண்ணீர் கொடுக்கச் சென்றபோது அவன் என் கையைப் பிடித்து இழுத்தான். நான் தாயே இவன் செய்வதைப் பார் என்று சத்தமிட்டேன். தாயும் ஓடோடி வந்து என்ன நடந்ததென்று கேட்டாள். நான் நடந்ததை மறைத்து, இவன் நீர் உண்ணுகையில் விக்கி வருந்தினான் என்றேன். அன்னை அவன் முதுகைப் பலமுறை தடவினாள். அவ்வேளை அக்கள்வன் மகன் கடைக்கண்ணால் என்னைக் கொல்வான் போலப் பார்த்துத் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தான்''



என்பது இப் பாடல் தரும் பொருள். இதனால் தலைவன் தலைவி இருவர் கருத்தும் ஒருமைப்பட்ட செய்தியும் வருங் காலத்தில் அவர் கூடுவர் என்ற குறிப்பும் காட்டப்பட்டன. இது ஒரு பொருள் கூறவந்த கலிவெண்பாட்டு.

குறிஞ்சிக்கலியில் நாடகத் தன்மை வாய்ந்த காட்சிகள் அதிகம் உள்ளன. அவற்றுள் குரவையாடுகையில் உரையாடலும்(3ஆம் செய்யுள்) வள்ளைப்பாட்டில் உரையாடலும்(4, 5, 6, 7ஆம் செய்யுட்கள்) வித்தியாசமான இன்பக் காட்சிகளாகவுள்ளன.

நகைச்சுவைக் காட்சி ஒன்றை 29ஆஞ் செய்யுள் இவ்விதம் சித்திரிக்கும்:

தலைவன் ஒருவன் தலைவியைச் சந்திக்க இரவில் வந்துகொண்டிருந்தான். அதனால் ஊரார் அலர் தூற்றுவர் என்று எண்ணிய தலைவி அவனை இனி இரவில் வரவேண்டாம் என்று சொல்லத் தோழியை அனுப்பினாள். தோழி தலைவன் வரவுக்காகக் காத்திருந்த வேளை எதிர்பாராத நிகழ்வு ஒன்று நடந்தது. அதனை அடுத்தநாள் வந்து தலைவிக்குச் சொல்லிச் சிரிக்கின்றாள் தோழி.


''திருந்திய அணிகலன்களை அணிந்தவளே! நேற்று நள்ளிரவு நடந்த வேடிக்கையைக் கேள். உன் தலைவர் வரவை எதர்பார்த்து அவர் வழக்கமாக வரும் இடத்துக்கு வெண்துகிலைப் போர்த்துக்கொண்டு நான் செல்ல அங்கு நமக்குத் தெரிந்த மொட்டைத் தலையும் குட்டநோயாற் குறுகிய கைகால்களையும் உடைய முடமாகிய முதிர்ந்த பார்ப்பான் இருந்தான். அவன் என்னை நோக்கி, 'பெண்கள் நிற்கத் தகாத நள்ளிரவில் இங்கு வந்து நிற்கும் நீ யார் என்று கேட்டு, சிறியவளே நீ என்னிடம் அகப்பட்டாய்' என வைக்கோலைக் கண்ட முதிய எருதுபோல என் பக்கம் வந்து தன் பையைத் திறந்து வெற்றிலை போடு என்று நீட்டினான். நான் வாய் பேசாது நின்றேன். அவன் நான் பிசாசு என்று அஞ்சிப் போலும் எட்டச் சென்று 'நீ பெண் பிசாசு என்றால் நான் ஆண் பிசாசு. எனக்கு அருள் செய். இல்லையென்றால் நீ பெறும் பலியை ஊராரைக் கொண்டு நிறுத்துவேன்' என்றான். நான் உடனே ஒரு கையால் மணலை அள்ளி அவன்மீது விடாது தூவினேன். அவன் ஊரார் கேட்க அலறி ஓடினான். இது அக் காமுகன் நேற்றிரவு செய்த நாடகம். உன் தலைவரைக் காணச் சென்ற இடத்தில் அக் காமுகனைக் கண்டது, புலியைப் பிடிக்க வைத்த வலையிலே குள்ளநரி அகப்பட்ட தன்மையானதைப் பார்த்தாயா?''

கவிஞர் வி. கந்தவனம்





YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall** இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: **Scarborough - Markham** - செல்வ சோதி - **416.289.2033**

# நினைவாற்றல் - *MEMORY - 4*


## அன்பான வாசகர்களே!

கடந்த மூன்று இதழ்களில் நினைவாற்றல் நுட்பங்கள், பாடங்களை மீட்டல் செய்ய வேண்டிய தேவையும் அதற்கான வழிமுறையும், "மைன்ட் மைப்" இற்கான அறிமுகம், "மைன்ட் மைப்" உருவாக்கல் முறை, மேலும் அதன் பயன்பாடுகள் பற்றி அலசி ஆராயப்பட்டது. நினைவாற்றல் பற்றிய தொடர் கட்டுரையில் பல விடயங்கள் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருந்தாலும் வாசகர்களாகிய நீங்கள் செயன்முறையில் இந்த நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலமே இந்தக் கட்டுரைக்கான முழுமையான விளைச்சலை உங்களால் அறுவடை செய்யமுடியும் என்பதையும் நினைவில் வைத்திருங்கள். உங்களால் முடிந்தளவு இந்த நுட்பங்களை நாளாந்த வாழ்வில் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகளுக்கும் எடுத்துச் சொல்லுங்கள். உங்கள் நண்பர்களுக்கும் இது பற்றி அறிமுகம் செய்து கொள்ளுங்கள். "நாமும் வாழ்வோம், நம்மைச் சுற்றி உள்ளவர்கள் எல்லோரும் நன்றே வாழட்டும்" என்ற கோட்பாட்டை ஒருமுறை நினைத்துக் கொள்வோம்.

> கட்டுரையாசிரியர் இந்த இதழில் மனித மூளையில் உள்ள உறுப்புக்களைப் பற்றி ஆராய்வதோடு அவை எவ்வாறு நினைவாற்றலில் பங்கு கொள்கின்றன வென்றும் எழுதியுள்ளார். இந்தக் கட்டுரை பற்றிய உங்கள் கருத்துக்களையும் அறிய விரும்புகின்றோம்.

நினைவாற்றல் பற்றி மேலும் தொடர்ந்து பல விடயங்களைப் பற்றி ஆராய்வதற்கு முன்னதாக மூளையில் உள்ள முக்கிய உறுப்புக்கள், மூளை எவ்வாறு தொழிற்படுகின்றது என்ற அடிப்படை விடயங்கள் பற்றிய பொது அறிவு அவசியமாகின்றது. உயிரியல் துறை சார்ந்தவர்களும், மருத்துவ ரீதியான கல்வியை மேற்கொள்பவர்களும் உடல் உறுப்புக்களின் விபரங்களையும் அவற்றின் தொழிற்பாடுகளுக்கான விளக்கத்தையும் நன்கு அறிந்து வைத்திருப்பர். ஆனால் உடல் உறுப்புக்கள், அவற்றின் தொழிற்பாடு பற்றி நாம் ஒவ்வொருவரும் ஓரளவுக்கு அறிந்து கொள்வது மிகவும் அவசியமாகிறது. இந்த வகையில் நினைவாற்றல் பற்றி கலந்துரையாடும் இந்த முயற்சியில் நினைவாற்றலுக்கு அடி நாதமாக விளங்கும் எமது மூளையைப் பற்றிய பொது அறிவையும் விருத்தி செய்வோம். இந்தக் கட்டுரையில் வருகின்ற சில விடயங்கள் எமது உடல் நலம், மருத்துவம் சார்ந்து இருந்தாலும் அவை பொது அறிவை நோக்காகக் கொண்டு இருப்பதனால் மேலெழுந்த வாரியான தகவலாக இருக்கலாம். எனவே உங்கள் உடல்நலம் பற்றிய கேள்விகட்கு மருத்துவர்களின் ஆலோசனையே பொருத்தமானது என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள்.

மனித மூளை (Human Brain), எல்லா உயிரினங்களிலும் மூளை காணப்பட்டாலும் மனித மூளை மிகவும் சிறப்பானதாகக் காணப்படுகின்றது. மனித மூளையானது பல தொழிற்பாடுகளைச் செய்கின்றது. இவற்றில் உடல் வெப்பம், இரத்த அழுத்தம், இருதயத் துடிப்பு என்பவற்றைக் கட்டுப்படுத்தல், ஐம்புலன்களின் ஊடாக வெளி உலகில் இருந்து தகவல்களைப் பெற்று பரிமாற்றமும், சேகரிப்பும் செய்தல், உடல் அசைவுகளைக் கையாளுதல் சிந்தித்தல், கனவு காணுதல், உணருதல் எனப் பலவற்றைக் கூறிக் கொள்ளலாம்.




மனிதனின் மூளையானது மிகவும் சிக்கலான ஒரு உறுப்பாகக் கருதப்படுகின்றது. மூளையில் வலது அரைக்கோளம் (right hemisphere), இடது அரைக்கோளம் (left hemisphere) என இரு பிரிவுகளாக அமைந்துள்ளது. இந்த இரு பிரிவுகளையும் இணைப்பது இணைப்பு மெய்யம் (கோர்ப்பஸ் கலோசம் Corpus callosum) என அழைக்கப்படும் நாரியல் தொகுதியான நரம்புகளின் சேர்க்கையாகும். இந்த ஒவ்வொரு அரைப் பிரிவுகளிலும் மூன்று பிரதேசங்கள் (regions) உள்ளன. முதலாவது உட்பகுதியில் இருந்து முள்ளந்தண்டை (spine) இணைக்கும் நரம்புகளாலான மூளைத்தண்டு (brain stem). இந்த மூளைத்தண்டுதான் மனிதனின் அடிப்படையான உடல் தொழிற்பாடுகளான சுவாசம், இதயத்துடிப்பு என்பனவற்றுக்குப் பொறுப்பாக உள்ளது.

இரண்டாவது பிரதேசம் மூளையின் நடுப்பகுதிக்கும், பின்புறமாகவும் மூளைத் தண்டுக்கு மேலாக இருக்கும் கட்டி போன்ற சிறுமூளை (செரபெலியம் cerebellum) என்பது. இது உடலின் சரிசெய்தலையும், தொடர்பாக்கலையும் செய்கின்றது.

மூன்றாவது பிரதேசம் முன்னைய இரண்டு பிரதேசங்களை விட பெரிதான செரிபரம் (cerebrum) என்பதாகும். இது நடுமூளையைச் சுற்றி உள்ளது. இங்கேதான் நாம் கதைக்கும் போதும், வாசிக்கும்போதும் உடலசைவின்போதும் அதற்கான நனவு நினைவுகள் (conscious thoughts) நடைபெறுகின்றன. இந்த செரிபரம் ஆனது நான்கு விதமான மடல் (லோப்ஸ் lobes) எனப்படும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை முறையே முன் மடல் (frontal lobes), சுவர் மடல் (parietal lobe –middle), பக்க மடல் (temporal lobe-side), பிடரி மடல் (occipital lobe) என அழைக்கப்படும். ஒவ்வொரு மடலுக்கும் வெவ்வேறு விடயங்களைக் கையாளும் திறமை உண்டு. செரிபரம் இனைச்சுற்றி மடிப்புக்களாலான ஒரு படலம் உள்ளது. இதனை செரிபரல் கோட்டக்ஸ் (cerebral cortex) என்ற பெயரால் அழைக்கப்படும். இதுவே மூளையின் கட்டுப்பாட்டு நிலையம் (Control centre) ஆகும். இங்கேதான் உங்கள் மூளையிடம் இருந்து தகவல்கள் பெறப்பட்டு, கண்காணிக்கப்பட்டு அதற்கான ஆணைகள் உடலின் மறுபாகங்களுக்கு அனுப்பப்படும்.

உங்கள் மூளையில் இருக்கும் அரைக்கோளங்களின் உள்ளே சிக்கலான அமைப்பைக் கொண்ட அறைகளும் (chambers), வெவ்வேறு அளவினையுடைய குழாய்களும் (tubes) செரிபரல் கோட்டக்ஸ் (cerebral cortex) கீழ் உள்ளன. இதன் நடுப்பகுதியில் கோர்ப்பஸ் கலோசத்திற்குக் (Corpus callosum) கீழாக இருப்பதை லிம்பிக் சிஸ்டம் (limbic system) என்பார்கள். இது தன்னுணர்வற்ற மூளையின் (unconscious brain) பிரிவாகும். இங்கிருந்துதான் எமது உணர்ச்சிகள், ஆசைகள் உருவாகின்றன. கடற்குதிரை வடிவம் கொண்ட மூளைப் பின்மேடு (கிப்போகம்பஸ் hippocampus) உள்ளடங்கும். இது நீண்ட கால நினைவாற்றலுக்கு (long term memory) முக்கியமானதாக இருப்பதோடு இங்கேதான் அமிக்டல (amygdala) என்ற பிரிவும் இருக்கும். நாம் பயம் கொள்வதை உணருவது இங்கேதான்.

உங்கள் ஏனைய உடற்பாகங்களை நீங்கள் பாதுகாப்பதுபோல் மூளையையும் பாதுகாக்க வேண்டும். நினைவாற்றலுக்கான வழி முறைகளை அறிந்து பழக்கப்படுத்திக் கொள்ளும்போது வயது முதிர்ந்து செல்லுகையில் ஏற்படும் நினைவாற்றல் தாக்கங்களையும் வெற்றிகரமாக எதிர் கொள்ளலாம் எனக் கூறப்படுகின்றது. மூளையானது உரு மாறும் தன்மை (plasticity) கொண்டது. அதாவது மூளை யானது பயிற்சி செய்யப்பட்டு பேணப்பட வேண்டியதாகி விடுகின்றது. மூளையானது வலுவூட்டப்படக் கூடியது என்பதனால்தான் நாம் இந்தக் கட்டுரை மூலம் அறிந்து வருகின்ற நினைவாற்றல் நுட்பங்கள் அர்த்தமுள்ளதாக்கப்படுகின்றது. நரம்பியல் விஞ்ஞான (neuroscientific) ஆய்வின்படி நீங்கள் பிறக்கும்போது உங்களிடம் காணப்பட்ட மூளையானது உங்கள் வாழ்வின் பட்டறிவினால் மாற்றப்பட்டுள்ளது என்பதே உண்மையானதாகும். புதிய மூளைக்கலங்களும் உருவாவது வழக்கம்.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்




உங்களது பிள்ளையின் ஒளித் தோற்ற விளையாட்டு நாட்டம் அவர்களை எங்கு கொண்டு செல்லலாம் என்பதை பார்க்கவும்

மின்சார பொறியியலாளர்
தொழில் வடிவமைப்பாளர்
பிளாஸ்டிக் தொழில்நுட்பாளர்
கருவிகள் பொறியியலாளர்
வினியோக மேலாளர்
சந்தைப் படுத்தல் உபதலைவர்
கணனி விளையாட்டு உருவாக்குபவர்
வரைகலை வடிவமைப்பாளர்
உருவாக்கல் தனியுரிமை வழக்கறிஞர்
மறையீட்டுப் பகுப்பாய்வாளர்
மென்பொருள் தொழில்நுட்பாளர்
தொழிற்சாலை பொறியியலாளர்
பொறிமுறை வரைவாளர்

இரசாயன விஞ்ஞானி
மின்கருவித் தொழிலாளர்
பௌதீக விஞ்ஞானி
மென்பொருள் பொறியியலாளர்
கேட்பொலி தொழில்நுட்பாளர்
இழை ஒளி தொழில்நுட்பாளர்
உற்பத்தி பொறியியலாளர்
சரக்கு வியாபாரி
தரக் கட்டுப்பாடு தொழில்நுட்பாளர்
கணனி பகுப்பாய்வாளர்
லேசர் தொழில்நுட்பாளர்
நுகர்பொருட்கள் வடிவமைப்பாளர்
பிளாஸ்டிக் உருக்கிவார்ப்பு தொழில்நுட்பாளர்
மின்னணுக்கருவிகள் பொறியியலாளர்
கருவி வடிவமைப்பாளர்
நிதிக் கணக்குப் பரிசோதகர்

ஒரு தீவிர உணர்ச்சியை

ஒரு வீச்சான உபகாரப்பணம், மாணவர் உபகாரப்பணம் அத்துடன் கடன்களுடன் ஒரு கல்லூரியிலோ அல்லது சர்வகலாசாலையிலோ அவர்களை ஆரம்பிக்க வைப்பது நீங்கள் நினைப்பதிலும் பார்க்க இலகுவானது.

ontario.ca/myfuture

ஒன்ராறியோ அரசாங்கத்தினால் வழங்கப்படுகிறது

Ontario

# பெண்களுக்கு...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆசனங்களை தேர்ந்தெடுத்து பழகிவர வேண்டும். அதற்கேற்றபடி உணவுத் திட்டத்தையும் கடைப்பிடிக்க வேண்டும்.



இந்த யோகாசனப் பயிற்சிகளை எந்த வயதிலும் அவரவர் உடல் நிலைக்கு ஏற்றவாறு மேற்கொள்ளலாம். யோகாசன பயிற்சி என்பது உடலிலுள்ள அவயங்களை இலகுவாக, எளிதாக, அழகாக, மிதமாக இயக்குவதாகும். யோகாசனம் செய்வதால் பெண்கள் அடையும் பலன்கள் மிக அதிகம். ஆரோக்கியமான உடலில்தான் மனம் தெளிவாகவும், அமைதியாகவும் இருக்கும். இதனால் பெண்கள் இதனை நம்பிக்கையோடு பயிற்சி செய்யவேண்டும். முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அதிகாலையில் யோகாசனப் பயிற்சியை முடித்துத்தான் எந்த வேலையும் செய்ய வருவராம். எந்த காரியமும் தொடக்கத்தில் கஷ்டமாக இருப்பினும் நாளடைவில் இலகுவாகிவிடும்.

எனவே என் அருமை தாய்மார்களே, சகோதரிகளே, கு ழ ந் தை க ளே எல்லாவற்றுக்கும் அடிப்படையான உங்கள் உடலை யோகாசனங்கள் மூலம் பேணுங்கள். பேரின்பத்துடன் மகிழ்ச்சியான வாழ்வை அனுபவியுங்கள். என்றும் இளமைப் பொலிவுடன் நோயின்றி நூறாண்டு காலம் வாழுங்கள்.

TORONTO BUSINESS COLLEGE



PERSONAL SUPPORT WORKER(NEW PROGRAM)
COMPUTERIZED ACCOUNTING
6 MONTHS FULL TIME DIPLOMAS
➤ DO YOU RECEIVE EI NOW?
➤ WERE YOU LAID OFF AFTER 2005?
➤ WERE YOU ON MATERNITY WITHIN LAST 5 YEARS?
You May Be Eligible For Financial Assistance
Our Experienced Counselor Will Help You To Apply For Funding

FREE COURSES
WINDOWS,WORD,EXCEL,TYPING & INTERNET
MON,WED,FRI 6 PM TO 8 PM,STARTING MAR.7
CALL TO REGISTER

416-291-5155
4465 SHEPPARD AVE. EAST #208
( SHEPPARD & BRIMLEY ) SCARBOROUGH
www.t-businesscollege.com
OACC PROUD MEMBER
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)


# நினைவாற்றல்

15ஆம் பக்கத்தொடர்ச்சி

மூளையில் நரம்பணு (நியுரன்ஸ் neurons) எனப்படும் எண்ணற்ற மூளைக் கலங்களை (Brain cells) காணலாம். இந்தக் கலங்கள் ஒவ்வொன்றிலும் காணப்படும் வேர் போன்றவை கலங்களின் அன்ரனா (antenna) ஆகும். இவைதான் சமிக்கைகளை (signals) அயற்கலங்களில் இருந்து பெறுகின்றன. நீளமான நரம்பிழை (ஸ்ரம் ஆக்சான் stem axon) மூலமே கலங்களின் சமிக்கைகள் (cells signals) ஏனைய கலங்களுக்கு கடத்தப்படுகின்றது. கலங்களிற்கிடையே காணப்படும் இடைவெளி இணவளைவு (சினப்ஸ் synapse) என அழைக்கப்படும். நரம்பில் துடிப்பு (impulse) ஒரு கலத்திற்கு கிடைக்கும்போது நியுரோ ரான்ஸ்மீற்றேர்ஸ் (neuro transmitters) எனப்படும் இராசயனப் பதார்த்தத்தால் கலங்களிற்கிடையில் உள்ள இடைவெளிக்கூடாக கடத்தப்படும். மூளையில் 53 விதமான நியுரோ ரான்ஸ்மீற்றேர்ஸ் (neuro transmitters) இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இந்த இரசாயனப் பதார்த்தத்தின் துளிகள் நரம்புகளின் முடிவில் உள்ள வீக்கம் போன்ற (vesicles) மிகச்சிறிய பைகளில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும். கோர்ப்பஸ் கலோசம் (Corpus callosum) தூர உள்ள பல நரம்பு அணுக்களை தொடர்பு படுத்துகின்றன. பெண்களில் இணைப்பு மெய்யம் ஆண்களைவிட அடர்த்தியானது எனக் கூறப்படுகின்றது.

நரம்பில் சமிக்கைகள் (signal) வரும்போது சினப்ஸ் (synapse) எனப்படும் இடைவெளிக்கு இந்த இரசாயனப்பதார்த்தம் பைகளில் இருந்து வெளியேறி இடைவெளியில் நிறைந்து அயலில் உள்ள கலங்களை நோக்கி கழுவிச்செல்லும். மூளையின் பல பாகங்கள் நினைவாற்றலினை மேற்கொள்வதில் ஈடுபட்டிருந்தாலும் நரம்பணுவின் (நியுரன்ஸ் neurons) பங்கு முக்கியமானது. இதில் எண்ணற்ற நரம்பணுக்கள் இணைந்து செயலாற்றுகின்றன. ஒரு குறிக்கப்பட்ட விடயம் பல கூறுகளாக மூளையின் பல்வேறு பாகங்களில் சேமிக்கப்படுகின்றன. மூளையின் பாகங்கள் ஒவ்வொரு விதமான விடயங்களை சேகரிப்பதில் நிபுணத்தவம் பெற்றதாகக் கருதப்படுகின்றது. மொத்தத்தில் மிகவும் சிக்கலான மூளையின் பல பாகங்களும் இணைந்து செயற்படும் தொழிற்பாட்டினாலேயே நினைவாற்றல் சாத்தியமாகின்றது. விடயங்கள் மூளையெங்கும் காணப்படும் நரம்பணுக்களில் பரந்து சேமிக்கப்படுகின்றன.

எமது மூளையை நாம் சரியான முறையில் பேணிவந்தால் எந்த வயதிலும் அதன் சக்தியை முழுமையாக பயன்படுத்தமுடியும்.





முன்னைய ஆய்வுகளில் வயது கூடிச்செல்லும்போது பல மூளைக்கலங்கள் (brain cells) குறைந்து செல்வதனால் நினைவாற்றல் சக்தி குறைவதாகக் கூறப்பட்டது. அண்மைக்காலங்களில் நடத்தப்பட்ட ஆய்வுகள் இதனை மறுத்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமே. புதிய கலங்கள் உருவாவதும், சில வலுவாக்கப்படுவதும், சில இறந்து போவதும் நடைபெறுகிறது என்ற கண்டு பிடிப்பே இதற்கான காரணமாகும். நரம்பியல் விஞ்ஞானத்தில் வந்த புதிய கண்டுபிடிப்புக்கள் மனித வாழ்வில் ஒரு ஒளியை ஊட்டுவதாக உள்ளது. நாம் எமது மூளையை வளமூட்டி சந்தோஷமாக வாழமுடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

தொடரும்...



- அகணி -
authorakani@yahoo.com

ELECTRICAL WORKS




FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.
தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# பெண்களுக்கு யோகாவின் அவசியம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

இன்றைய சமுதாயத்தில் பெண்களின் பங்கு மிக அதிகமாகிக்கொண்டு போகின்றது. வீட்டுவேலைகள், குழந்தைகளை வளர்ப்பதிலிருந்து அரசாங்கத்தின் முக்கிய துறைகளின் உயர்பதவியிலிருந்து நாட்டின் தலைமைத்துவத்தை ஏற்று நடத்துவதிலும் பெண்களே சிறப்பாகச் செயல்படுகின்றனர். இதற்கு அவர்கள் ஆரோக்கியமாகவும், உடல் மன உறுதியுடனும் இருப்பது அவசியமல்லவா? இதற்கு யோகாசனப் பயிற்சி உறுதுணையாகின்றது.



விபரீதகரணி
VEEBAREETHA KARANI

பெண்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் தான் பேரழகியாக வாழவேண்டும். பிறர் ஏறெடுத்துப் பார்க்கும் பெருமை நிறைந்த பொலிவும், அழகும் பெறவேண்டும் என்று தான் நினைக்கின்றனர். ஆண்களைவிட பெண்களே வயதாகிவிட்டாலும் உடலைப் பற்றியும், உடல் அழகைப் பற்றியும் அதிக அக்கறை காட்டுகின்றனர். ஆரோக்கியத்தையும், நிலையான அழகையும் அடைய யோகாசன வழிமுறைதான் சிறந்தது என்பதை ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பெண்களே அறிந்துள்ளனர். மற்றவர்களோ விபரம் புரியாமல் மனம் போனபடியே நடந்து இறுதியில் இருந்ததையும் இழந்து ஏக்கப் பெருமூச்சுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இன்றைய நாகரிக உலகில் போலியான ஆடம்பர வாழ்க்கையால் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என நினைத்தபடியே நடந்து வருகின்றனர். ஆடம்பர, அலங்கார சேர்க்கைப் பொருட்களால் தமது உடலலைப்பேணி போலியான அழகுக்கு தம்மை உட்படுத்துகின்றனர். உள்ளத்தில் பலயீனமும் உடலில் ஆரோக்கியமின்றியும் வாழ்வதில் என்ன பயன்? உடலின் உள் உறுப்புக்கள் திடமாகவும் மனோ பலமும் பெற்றவர்கள்தான் ஆரோக்கியமாக வாழ முடியும். தினமும் 20 நிமிடங்களாவது யோகசனப் பயிற்சி செய்வதால் இதனை அடைய முடியும்.

இக்காலப் பெண்கள் தமது சமையல் மற்றும் வீட்டு வேலைகளைக் கூட உடல் உழைப்பு இல்லாமல் இயந்திரங்களின் உதவியுடனேயே செய்து முடித்து விடுகின்றனர். இதனால் உடல் அசைவுகள் குறைந்து பருமானாகி விடுகின்றனர். அடிக்கடி நொருக்கு தின்பண்டங்கள் உண்பது, நெடுநேரம் உட்கார்ந்து தொலைக்காட்சி பார்ப்பது போன்றவற்றால் உடல் எடை அதிகரித்து வயிற்றிலும், தொடையிலும் ஊனச்சதைகள் சேர்கின்றது. இத்துடன் அலைச்சலும் அதிகம். இதனால் நோய்களும் ஒவ்வொன்றாக அவர்களைப் பற்றிக் கொள்கின்றன. இதனால் மருத்துவர்களை நாடிச்சென்று பலதரப்பட்ட மருந்து மாத்திரைகளை உட்கொள்கின்றனர். நாளடைவில் அந்த மருந்துகளின் பக்க விளைவு பெண்களைத் தாக்குகி துன்பத்தை தருகின்றது. இவ்வாறு நோய்கள் வந்தபின் அதைப்பற்றி சிந்திப்பதைவிட நோய்கள் வருமுன் காப்பதே சிறந்த வழியாகும்.

சிறு வயதில் கல்லூரி விளையாட்டுக்கள் பரதநாட்டியம் என்பன வயதாகிவிட்டால் அதனை நிறுத்தி வைக்கின்றோம். உடலில் உள் உறுப்புக்களான பிட்யூட்டரி, தைமஸ், தைராய்டு, கணையம், நுரையீரல், இருதயம் என்பனவற்றை சரியாக இயங்கவைக்கும் சக்தி யோகாசனம் ஒன்றுக்கு மட்டும்தான் உண்டு. மேற்குறிய கோளங்கள் முறையாக இயங்க விபரீதகரணி, மச்சாசனம், தனுராசனம், பாதாசனம், பர்வதாசனம், ஹலாசனம் போன்ற ஆசனங்களை பெண்கள் தினமும் செய்து வந்தால் எந்தவிதமான நோயும் அவர்களை அணுகாது பொதுவாக பெண்களைப் பாதிக்கும் மாதவிடாய் கோளாறுகள் நீங்கினால் தான் நிம்மதியாக வாழமுடியும். இதற்குரிய பொருத்தமான



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

**HomeLife/Future Realty Inc.** Brokerage*

HOMELIFE HIGHER STANDARDS

**Jeeva Pearl Ratnarajah**, Dep-in-Acc
Sales Representative

Cell: - 416.722.5338 Bus: 905.201.9977
Fax: 905.201.9229

•Independently owned and operated

**Brimley / Eglinton**
Condo. Apartment
2 bedroom with family room, Many upgrades
Close to bank, mall
many parking

**Keele / Finch**
Business for sale
நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் வியாபார தாபனம் விற்பனைக்குண்டு
Asking price $42,000 + Stock

**Brimley / Ellesmere**
Condo. Town House
3 story , 3 bedrooms
3 washrooms
Close to Scarborough Town Center
All amenities

**Brimley / Eglinton**
Lease for Business
2000 Sq. feet



**Jane / Finch**
Business For sale
Asking $55,000 + stock

# குழந்தைகளுக்கு ஏற்படும் குறைபாடும், வியாதிகளும்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

கடந்த இதழ் தொடர்ச்சி...

சில குழந்தைகளுக்கு வலிப்புத்தன்மை வருவது உண்டு. சாதாரணமாக வருவதானால் வலிப்பு தானாக நீங்கி விடும். ஆனால் காய்சல் அதிகரிக்கும் வேளையிலும் வலிப்பு வருவதுண்டு. பெரும்பாலும் வலிப்புத்தொடங்கி கால் மணித்தியாலத்திற்கு மேல் தொடர்ந்து இருந்தால் உடனடியாக வைத்தியசாலைக்கு குழந்தையை கொண்டு சென்று சிகிச்சை பெறுதல் வேண்டும்.

சில குழந்தைகளுக்கு உடல்நிலையில் நீர் தன்மை குறைவடைந்து அல்லது அற்றுப்போய் சருமம் வரட்சித் தன்மையாக காணப்படுவதும் உண்டு. இந்நிலையில் உடனே வைத்தியசாலைக்கோ அன்றி தங்கள் குடும்ப வைத்தியரிடமோ சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும் குழந்தைகளுக்கு வியாதி பல தோன்றுவது இயல்பு. இதற்கு குழந்தைபிறந்த பின் முறையான தடுப்பு ஊசிகளைப் போட்டுக் கொள்ள வேண்டும். இங்கு குடும்ப வைத்தியர்கள் இதனை தவறாது ஞாபகப்படுத்துவார்கள்.



சிறுவர்கள் சிலருக்கு மூக்கில் இருந்து நீர்வடிந்தபடி இருப்பதை அவதானிக்க முடிகின்றது. இதனால் அவர்களின் மனநிலையும் மாறுபட்டு துக்கத்துடன் இருப்பதையும் அறிவோம். இவர்களுடன் விளையாடவோ கதைக்கவோ சிறுவர்கள் அதிகம் விரும்பவும் மாட்டார்கள். எதற்கும் விலகி நடந்து கொள்வார்கள். எனவே இந்நிலை ஏற்பட்ட சிறுவர்களை நன்கு கவனிக்க வேண்டும்.

இப்படி மூக்கினால் நீர்வடியும் போது கவனிக்க வேண்டியது யாதெனில் வடிகின்ற மூக்கு நீர் ஒரு மூக்குத் துவாரத்திலா? அல்லது இருபக்கத்துவாரங்களிலா? எனவும் அத்துடன் வருகின்ற சளியின் நிறம், மணம், தும்மல் போன்றவற்றை நன்கு கவனித்து உரிய சிகிச்சையை செய்து குணப்படுத்த வேண்டும்.

பெரும்பாலும் இரு மூக்குத்துவாரத்தில் நீர்வடிந்து கொண்டிருந்தால் அது தடிமன், அல்லது ஒவ்வாமை (அலர்ஜி) காரணமாகவும் வரலாம். அல்லது ஒரு மூக்குத்துவாரத்தில் இருந்து நீர் சளிப்பிடிப்புடன் காணப்படின் மூக்கின் உள்பகுதி சதை வளர்ச்சி ஏற்பட்டு தாக்கம் அடைந்து இந்நிலை வரலாம். அல்லது குழந்தை தான் விளையாடும் போது சில பொருட்களை எடுத்து மூக்கின் துவாரத்தில் செலுத்தி உள்ளிருந்து மாற்றங்களை ஏற்படுத்தலாம். எனவே அவதானம் முக்கியமாகும். தடிமன் பெரும்பாலும் தொற்றினாலும் ஏற்பட இடம் உண்டு. உங்கள் குடும்பத்தில் அல்லது விளையாடும் சிறுவர்களுக்கு தடிமன் தும்மல் இருந்தால் குழந்தைகளுக்கு இலகுவாக தொற்ற இடம் உண்டு. பாட-சாலைக்கு செல்லும் அதாவது சிறுவர்கள் சகமாணவர்களுடன் படிக்கும்போதும், விளையாடும்போதும், இவ்வியாதி மற்றவரைப் பற்றிக் கொள்ளும். எனவே எதற்கும் நமது குழந்தைகளையும் மற்ற குழந்தைகளையும் நோய் தொற்றாது பாதுகாத்துக் கொள்வது எமது கடமையாகும். இதனால் எம்மையும் மற்றோரையும் பாதுகாக்கும் இயல்புடையோராகின்றோம்.

குழந்தையை பெற்றெடுத்த தாய்க்கு அல்லது தந்தைக்கு மூக்கடைப்பு, தும்மல், நீர்மூக்கினால் வடிதல், ஈழை, சொறி, சிரங்கு, எக்ஸிமா போன்ற வியாதி இருந்தால் பரம்பரையாக வருவதற்கு இடம் உண்டு. எதற்கும் தகுந்த சுகாதார முறையைக் கடைப்பிடித்து துப்பரவுடன் வாழப்பழக வேண்டும். **'சுத்தம் சுகம் தரும்'** என்பர்.

**வைத்திய கலாநிதி**

**கே.ரி. கோபால்**

D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
***Tel.: 647.718.3909***




# MOHAN
## HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

***WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:***

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

***HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING***

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
**HOMEOPATHIC PRACTITIONER**

**TEL: 416-298-7537/416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்-இலவச ஆலோசனை வழங்கப்படும்

## தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.

இலவச ஆலோசனைகளுக்கு: **647.718.3909**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**


D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)
Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician
LG.Ayurvedic Medical Services (SriLanka)

# திரை விமர்சனம் - அம்பேத்கர்

சுதந்திர இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர், தலித்துகளின் உரிமைக்காக போராடியவர், இவைதான் அம்பேத்கர் குறித்து இன்று இந்தியாவின் புதிய தலைமுறையினர் மத்தியில் நிலவும் பொதுவான கருத்து. இவற்றைத் தாண்டி எதையும் பாடப்புத்தகங்கள் அவர்களுக்கு கற்றுத் தரவும் இல்லை. அம்பேத்கரின் வாழ்க்கை, பெண்களின் முன்னேற்றம் மற்றும் தீண்டத்தகாத மக்களின் அரசியல் உரிமைகளையும் சமூக அந்தஸ்தையும் நிலைநாட்ட தனது வாழ்நாளை ஒப்படைத்த அர்ப்பணிப்புடன் கூடிய போராட்டம், அவருக்குள் இருந்த போராளி ஆகியவை யெல்லாம் பெரும்பாலானவர்களுக்குத் தெரியாது. இந்தியத் துணைக் கண்டத்திற்கான அரசமைப்புச் சட்டத்தினை உருவாக்க அம்பேத்கர் செலவழித்த காலமும் உழைப்பும் அளப்பரியவை. அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க ஏற்படுத்தப்பட்ட குழுவில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தினால் அப்பணியில் ஈடுபட இயலாத சூழலில், அம்பேத்கர் ஒற்றை மனிதராய் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கியது இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற வரலாறு. ஒரு நாடு முழுமைக்கும் தனது அறிவாலும் ஆற்றலாலும் நிர்வாகத் திறனை வளர்க்கும் சட்டதிட்டங்களை உருவாக்கிய ஒரு தேசிய தலைவரை இன்று தலித் மக்களின் தலை-வராக மட்டும் பார்க்கும் போக்கு மிகவும் தலைகுனிவுக்குரிய ஒன்றுதான். அதற்கு ஓரளவு ஈடுசெய்ய வந்திருக்கிறது, 'அம்பேத்கர்' திரைப்படம். அம்பேத்கர் குறித்து பெரிதும் அறியாதவர்களுக்கு இத்திரைப்படம் ஒரு அற்புதமான தகவல் களஞ்சியம்.

**பிலிம்நியூஸ் கிருஸ்ணன்**

அம்பேத்கரின் நூற்றாண்டு நினைவாக (1891 - 1956) இந்திய அரசின் தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தால் தயாரிக்கப்பட்ட இப்படம் முதலில் 1999இல் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது. அந்த வருடத்துக்கான மூன்று தேசிய விருதுகளைப் பெற்றது. அவ்வாண்டின் சிறந்த நடிகராக, இப்படத்தில் அம்பேத்கராக நடித்திருக்கும் மம்முட்டி தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆங்கிலத்தில் வந்த சிறந்த திரைப்படம் என்னும் விருது இத்திரைப்படத்துக்கு கொடுக்கப்பட்டது. படத்தில் கலை இயக்குநராகப் பணியாற்றிய நிதின் சந்திரகாந்த் தேசாய் சிறந்த கலை இயக்குனருக்கான விருதினைப் பெற்றார். 2000இல் இந்தியிலும், அதன் பிறகு பிற இந்திய மொழிகளிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டு இப்படம் வெளியானது. 10 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழுக்கு வந்துள்ளது. பத்தாண்டுகளுக்குப் பிறகு வந்தாலும், இந்த வருடம்தான் எடுத்தது போல் அத்தனை புத்தம் புதிதான வெளித் தோற்றத்துடனும் உள்ளடக்கத்துடனும் இருக்கிறது.




'உலகத்திலேயே எந்த இனமும் அனுபவிக்காத ஒரு கொடுமையை இந்தியாவில் தாழ்த்தப்பட்டவர்கள் என்கிற மக்கள் அனுபவிக்கிறார்கள்' என்ற வாக்கியத்துடன், சாதி ஒடுக்குமுறை பற்றிய கோட்டோவியங்களுடன் படம் தொடங்குகிறது. அமெரிக்க நூலகத்தில், திறந்திருக்கும் ஒரு புத்தகத்தின் மேல் வைக்கப்பட்டுள்ள மூக்குக் கண்ணாடியை காட்டுவதுடன் அம்பேத்கர் அறிமுகமாகிறார். கொலம்பியா பல்கலைக்கழகத்தில் அவர் படிக்கின்ற காலம்... அங்கே நடைபெறும் சம்பவங்கள்... இந்தியர்களை கேலியாகப் பார்க்கும் மேல்நாட்டு வர்க்கத்திற்கு அம்பேத்கர் கொடுக்கின்ற சூடுகள் என்று படத்தின் துவக்கமே அதிரடியாக இருக்கின்றன.

தேசத் தலைவர்கள் குறித்த திரைப்படங்கள் என்றாலே, பொதுவாக அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பான சுவையான சம்பவங்களின் தொகுப்பு அதிகமாகவும், சமுதாயத் தொடர்பு மேலோட்டமாகவும் இருக்கும். யாருக்கும் மனம் கோணாமல் செய்ய வேண்டும் என்னும் எண்ணத்தால் நிகழ்வது இது. ஆனால், இத்திரைப்படத்தில் அம்பேத்கரின் அரசியல் குறித்த நிகழ்வுகளும் அது குறித்த உரையாடல்களும் அதிகமாகவும் முக்கியத்துவத்தோடும் பதிவாகியிருக் கின்றன. குறிப்பாக காந்திக்கும் அம்பேத்கருக்கும் இருந்த அரசியல் ரீதியான முரண்பாடு அழுத்தமாக பதிவாகியிருக்கிறது.

அம்பேத்கர் தனது வாழ்வின் பல்வேறு காலகட்டத்தில் விட்டுக்கொடுத்தும் அனுசரித்தும் போக வேண்டிய கட்டாயத்தில் இருந்ததையும் திரைப்படம் நேர்மையோடு பதிவு செய்கிறது. இந்தியாவின் சாதி அமைப்புகள் குறித்தான அம்பேத்கரின் ஆய்வுக் கட்டுரை கொலம்பியா பல்கலை-கழகத்தால் ஏற்கப்பட்டாலும் அதன் கடுமையான மொழிநடை அவர்களை பதட்டமடையச் செய்கிறது. மாற்றி எழுதித் தரச் சொல்கிறார்கள். தன் தோழியிடம் இது குறித்து ஆத்திரத்துடன் உரையாடுகிறார் அம்பேத்கர். "என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்கிறாள் அவள். அம்பேத்கர் சொல்கிறார்: "திருத்துவேன்".

நாடு திரும்பியவுடன் பரோடா மன்னரின் சமஸ்தானத்திலேயே கணக்கு பார்க்கும் வேலைக்கு அமர்கிறார். அங்கே அவர் சந்திக்கும் அவமானங்கள் மிக அழகாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. கீழே வேலை பார்ப்பவராக இருந்தாலும் ஒரு டம்ளர் தண்ணீர் கொடுக்க மனம் இல்லாத அளவுக்கு சாதிப் பித்துப் பிடித்த இந்தியர்கள் மத்தியில் எத்தனை நாட்கள்தான் அம்பேத்காரால் பணியாற்றி யிருக்க முடியும்? இது குறித்து பரோடா மன்னருடன் அம்பேத்கர் பேசும்போது, "இவ்வளவுதான் என்னால் முடியும்... உனக்கு வேலை கொடுத்ததே பெரிய புரட்சி. இதற்கு மேல் ஏதாவது செய்தால், எனக்கு ஆபத்தாகிவிடும்" என்கிறார், மன்னர். அப்போதைய இந்திய அரசியல் சூழலை தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது, இது.

படம் முழுவதும் சொல்லப்படும் விடயங்கள் அனைத்துமே இந்திய சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புடையதாக இருப்பினும், அம்பேத்கர் நடத்திய போராட்டம் பிரிட்டிஷ் ஆதிக்கத்திடம் இருந்து இந்தியா விடுதலை வேண்டி நடைபெற்ற போராட்டம் அல்ல.. ஆண்டாண்டு காலமாக கடவுள்கள், சனாதன தர்மம், வேதங்கள், சாதிகள் என்று இந்து மதத்தில் இருந்த குழப்பங்களை சாக்காக வைத்து ஆதிக்கச் சாதியினர் நடத்திய கொடுமையில் இருந்து தனது இனத்துச் சொந்தங்களான தாழ்த்தப்பட்ட மக்களை மீட்க அம்பேத்கர் நடத்திய சுதந்திரப் போராட்டமாகவே இருக்கிறது. ஒரு கட்டத்தில் இந்து மதத்தில் இருந்து வெளியேறுவதுதான், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விடுதலையாக அமையும் என அம்பேத்கர் கருதுகிறார். அதன்பிறகான நாள்களில் பல மதங்களை அலசி

தொடர்ச்சி 22ம் பக்கம்

REDUCE FEES INCREASE PROFITS
DEBITTECH POS
BENEFITS
Free 24/7 help desk
4 hrs on-site service
Gift & loyalty cards
Use it as ATM and generate revenue
Sell phone cards
(Cellular & Long Distance)
We Will Beat Any Competitors Offer Guaranteed
1.49%*
*Some conditions apply
Other services
ACCREDITED BUSINESS BBB
CounterTop $23.95 (Dial/IP)
Wireless $39.95 (Delivery)
Pay @ table $44.95 (Dial/IP)
Tel: 1-888 640-5479
www.debittechpos.com

# ஆடுதுறை - தமிழ்நாடு சுற்றுலா இடங்கள் - 91

ஆடுதுறை என்றாலே, விவசாயம் சம்பந்தபட்டவர்கள் அனைவருக்கும் உடனே நெல் ரகம்தான் ஞாபகம் வரும். ஆனால், நாம் ஆடுதுறைக்கு செல்வது நெல் பயிர் பற்றி பார்க்க அல்ல. அங்குள்ள புகழ்பெற்ற ஆபத்சகாயேஸ்வரர் கோயிலுக்கு. 1000, 2000 வருடங்களுக்கு முந்தைய பழமையான கோயில். பைரவரும், அகஸ்தியரும் வழிபட்ட தலம், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரால் பாடல்பெற்ற தலம் ஆகிய பெருமைகளும் இக்கோயிலுக்கு உண்டு.

ஆபத்சகாயேஸ்வரர், திருக்குரங்காடுதுறை மகாதேவர் என்னும் பெயராலும் அழைக்கப்பட்டுள்ளார். இக்கோயிலின் அம்மன் பவளக்கொடியம்மை, பிரபாளவல்லி என்றும் சொல்கிறார்கள். ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதம் 5,6,7 தேதிகளில் சூரியனது ஒளிக்கிரணங்கள் இறைவன் சந்நிதிக்கு எதிரில் உள்ள சூரிய தீர்த்தத்தில் பிரதி-பலித்துக் கடந்து சுவாமி மீது பட்டுத் தழுவுவது இங்கு பிரசி த்தமானது.

ஆடுதுறையின் புராணப்பெயர் திருத்தென் குரங்காடுதுறை. காவிரியின் தென்கரையில் இருப்பதாலும், சுக்கிரீவன் வழிபட்ட தலமாதலாலும் தென்குரங்காடுதுறை என்ற பெயர் வழங்கப்பட்டிருக்கலாம். ஆடுதுறையை இக்காலத்தில் திருவாடுதுறை என்கின்றனர். ஊருக்குப் பெயர் சூட்டப்பட்ட காலத்தில் மயில் ஆடிய இடம் மயிலாடுதுறை, குரங்கு ஆடிய இடம் குரங்காடுதுறை என்பதுபோல, ஆடுகள் மிகுதியாக இருந்த இடம் ஆடுதுறை என்றாகியிருக்கிறது. பிற்காலத்தில் திருமந்திரம் இயற்றிய திருமூலர் இவ்வூரில் வாழ்ந்தவர். திருமூலர் ஆடுமேய்த்த வரலாற்றைப் பெரியபுராணம் குறிப்பிடுகிறது ஆடுதுறை கோயிலின் ராஜகோபுரம் மூன்று நிலைகளுடன் கிழக்கு நோக்கியதாகவும் மூன்று மாடங்களையுடையதாகவும் அமைந்துள்ளது. இதனைக் கடந்து உள்ளே சென்றால் கொடிமரத்து விநாயகரையும் பலிபீடத்தையும் சிறுமண்டபத்துள்ளே

**- வழிப்போக்கன் -**

அமைந்துள்ள நந்தியையும் காணலாம். அகன்ற வெளிப் பக்கத்துப் பெரிய பிரகாரத்தை வலம்வந்து உள்ளே சென்றால் மணிமண்டபத்தைக் காணலாம். அம்மண்டபத்தின் தென்புறச் சுவரில் இத்தலத்தின் தேவாரப் பதிகங்களையும் திருப்புகழ்ப் பாடல்களையும் கல்லெழுத்துக்களில் வடித்துள்ளமையைப் படித்து உணரலாம். முன்மண்டபத்தில் தலப்பதிகக் கல்வெட்டுள்ளது. இக்கல்வெட்டுடன் சேர்த்து மொத்தம் 15 கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டுள்ளன என்று சொல்கிறார்கள். அவற்றுள் இரண்டு பாண்டியருடையன, மற்றவை சோழர்களுடையவை. பாண்டியர்களில் மாறன் சடையனின் 6ஆம் 8ஆம் ஆண்டுக் கல்வெட்டுக்கள் அழிந்திருக்கின்றன. சோழர் கல்வெட்டுக்களில் உத்தம சோழன் (கி.பி. 970 - 86), முதலாம் இராசராசன் (கி.பி. 985 - 1013), முதற்குலோத்துங்கன், வீர ராசேந்திரன், இரண்டாம் இராசராசன் ஆகியோரது கல்வெட்டுக்களும் இருக்கின்றன. இக் கல்வெட்டுக்களின் வாயிலாக இக்கோயிலின் வரலாறு சார்ந்து சில செய்திகளைத் தெரிந்துகொள்ளலாம். அதில், முதலாம் இராசராசன் காலத்தில்



இவ்வூர் தென்கரைத் திரைமூர் நாட்டுத் திருத்தென்குரங்காடுதுறை எனவும், திரிபுனச் சக்ரவர்த்தி குலோத்துங்க சோழன் காலத்தில் பூ பால குலவல்லி வளநாட்டுத் திரைமூர் நாட்டுத் திருக்குரங்காடுதுறை எனவும் வழங்கப்பட்டதாக அறிகிறோம். இவ்வூருக்கு அண்மையில் உள்ள மருத்துவக்குடி என்னும் ஊரின் பெயரும் கல்வெட்டில் காணப்படுகிறது இம்மருத்துவக்குடியே திருஇடைக்குளம் என்னும் வைப்புத்தலமாகும். இச்செய்தியை அம்மருத்துவக்குடி கோயிலில் செதுக்கப்பட்டுள்ள திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டானின் 21-ஆம் ஆண்டுக் கல்வெட்டும் தெரிவிக்கின்றது.

மண்டபத்து இரண்டாவது வாயிலுக்கு முன்னே தெற்கு நோக்கிய அருள்தரு பவளக் கொடியம்மன் சந்தியும் அதன் எதிரில் எழுந்தருளியுள்ள மூத்த பிள்ளையார் சிலையும் உள்ளது. இவர்களைக் கடந்து சென்றால் எதிரில் தோன்றும் மேல் மாடப்பத்தியில் சுக்ரீவன் ஆபத்சகாயேசுரரை வணங்கும் காட்சியும், சுக்ரீவனை இறைவன் அன்னப் பறவையாவும் அவன் தேவியை பாரிஜாத (பவளமல்லிகை) மரமாகவும் உருமாற்றியருளிய தல வரலாற்றுக் காட்சி சுதை வேலைப்பாட்டில் அமைந்துள்ளது தெரிகிறது.

உள்ளே மூன்றாம் வாயிலைக் கடந்து சென்றால் பலிபீடமும் நந்தியும் உள்ளது. கருவறை வாயிலில் கம்பீரமாகக் காத்து நிற்கும் புடைச் சிற்பமாக விளங்கும் இரண்டு துவாரபாலகர்களையும் காணலாம். அருகில் விநாயகரும் அமர்ந்துள்ளார். மூலஸ்தானத்தில் அருள்தரும் ஆபத்சகாயேசுரரைக் கண்டு தரிசித்துத் திரும்பினால் தெற்குப் பக்கத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் பஞ்ச லோகத்தால் அமைந்துள்ள நடராஜர், சிவகாமசுந்தரி சோமாஸ்கந்தர் முதலிய பல வேலைப்பாடமைந்த திருவுருவச் சிலைகள் உள்ளன.


உள் பிரகாரத்தில் தெற்குப் பக்கம் நால்வர் சந்நிதியும் தெட்சிணாமூர்த்தி சந்நிதியும் அமைந்துள்ளன. கர்ப்பக் கிரகத்தின் தெற்குச் சுவரில் அகத்தியர், நடராஜர், காரைக்காலம்மையார், விநாயகர் திருவுருவங்கள் புடைச் சிற்பங்களாக உள்ளனர். இவர்களின் அருகில் இக்கோயிலைக் கற்கோயிலாக அமைத்த கண்டராதித்தியர் தேவியாரான செம்பியன் மாதேவியார் சிவபிரானை வழிபடுவதாக அமைந்துள்ள புடைச்சிற்பத்தையும் காணலாம்.

அடுத்து பலிபீடம். இங்கு நந்தியோடமைந்த சுவாமியையும் அம்பிகையையும், அதனையடுத்து வள்ளி தெய்வானையுடன் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானையும் தரிசிக்கலாம். எதிரில் திருமாலும் பிரமனும் அடியும் முடியும் தேடிய அண்ணாமலையார் சோதிவடிவமாக விளங்கும் புடைச்சிற்பத்தைக் காணலாம். முருகன் சந்நிதியை அடுத்து முனிவர்கள் வழிபட்ட சிவலிங்கத் திருமேனிகள் அமைந்துள்ளன. இறுதியில் கஜலட்சுமியைக் கண்டு தரிசித்துத் திரும்பினால் வடக்கு நோக்கிய சந்நிதியில் எட்டுத் திருக்கரங்களோடு துர்க்கா தேவி காட்சி தருகிறாள். இதன் மேற்கில் உள்ள கங்கா விசர்சன மூர்த்தி, பைரவ மூர்த்தி ஆகிய இருவரது புடைச் சிற்பங்களும் கைத்திறமைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகவும், காண்போர் வியக்கத்தக்கனவாகவும் அமைந்துள்ளன. அவற்றின் அருகில் விஷ்ணு துர்க்கை எழுந்தருளி விளங்குகின்றாள்.

பின்னர் சண்டேசுரர் சந்நிதியை வணங்கிக் கடந்து சென்றால் தெற்கு நோக்கியவாறு எழுந்தருளியுள்ள சிவகாமியம்மையுடனாய ஆனந்த தாண்டவ மூர்த்தியைத் தரிசித்துக் கண் பெற்ற பயனைப் பெறலாம். கூத்தப் பெருமான் சந்நிதிக்கு மேற்கில் நாயக்கர் கால கலை வேலைப்பாடமைந்த அறுபத்துமூவர் திருவுருவப் படங்களையும், கிழக்கில் அழகிய மஞ்சத்தில் பன்னிரு திருமுறைகளையும் காணலாம். பக்கத்தில் மேற்கு நோக்கி எழுந்தருளியுள்ள சுவர்ண பைரவர், சூரியன் சனீச்சரர், பாணலிங்கம், அரதத்தர் ஆகிய திருவுருவங்கள் அமைந்துள்ளன. அவற்றின் அருகில் ஒன்பான் கோள்களும் உயரிய மேடை மீது எழுந்தருளியுள்ளன.

தில்லைப் பொன்னம்பலத்தில் ஆனந்த நடனம் ஆடியருளினார். அந்த நடனத்தைக் கண்டுகளிக்க இயலாத அகத்தியரும் ஏனைய முனிவர்களும் வேண்டிக் கொண்டதற்கிணங்க குரங்காடுதுறைக் குழகனார் ஆனந்த நடனம் ஆடியருளினார். அதனால் இப்பகுதிக்கு நடராஜபுரம் என்ற பெயரும் வழங்குவதாயிற்று. தெற்குப் பிரகாரத்தில் அகத்தியர் நடராஜர் திருவுருவப்புடைச் சிற்பங்களை காணலாம்.

சாத்தன் என்னும் சொல் நிலவணிகனைக் குறிக்கும். இக்காலத்தில் செட்டியார் என்று பெயரிட்டு வழங்குவது போல அக்காலத்தில் சாத்தனார் என்று வணிகர்களை பெயரிட்டு வழங்கியுள்ளார்கள். இதில் மாசாத்தனார் என்பது பெருவணிகரைக் குறிக்கும். இவரது ஊர் ஆடுதுறை என்பது இவ்வூரின்



சிறப்புகளில் ஒன்று.

தந்தை - மகன் உறவில் பிரச்சினை உள்ளவர்கள், அப்பிரச்சினை தீர சூரியன், சனி பகவானுக்கு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அர்ச்சனை செய்து வழிபடுகின்றனர். தொழில் மற்றும் பொருளாதாரம் மேம்படவும் இங்கு பிரார்த்தனை செய்கின்றனர். பவுர்ணமியில் அகத்தியருக்கு சந்தனாதி தைலம் சாற்றி வழிபட்டால் நினைத்த காரியம் நிறைவேறும் என்பது நம்பிக்கை.

நீங்களும் ஒருமுறை போய் வாருங்கள். புறப்படுவதற்கு முன்பு இன்னொரு விஷயம். ஆடுதுறை என்ற பெயரில் இதன் அருகிலேயே இன்னொரு ஊரும் உள்ளது. அதுவும் புகழ்பெற்ற கோயில் கொண்ட ஊர். எனவே, அதையும் தெரிந்துகொண்டு புறப்பட்டால் ஒரே நேரத்தில் இரண்டு

தொடர்ச்சி 26ம் பக்கம்




# NEW CONDO AT YONGE & BLOOR



1 Day Only

> Special VIP package
> Up to 25,000 off*
> Free Assignment*
> Lease back*

இவை பற்றிய மேலதிக விபரங்களுக்கு HomeLife/GTA Realty Inc. முகவர்களை தொடர்பு கொள்ள

## HOMELIFE / GTA REALTY INC., BROKERAGE*

**1771 Mccowan Rd. #206, Toronto - Tel: 416.321.6969**
**145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666**

*Some conditions may apply

*Independently Owned & Operated

# ஈழத்துக் காதலிசைகள்

## கிராமிய இசையும் காதலுணர்வின் வெளிப்பாடும்-5

"திடுதிடென்று மழை பொழியத் திட்டியெல்லாம் தண்ணிநிற்க மருதையடி நாய் குலைக்க அங்குவந்த கள்ளன் யாரோடி"நான் யாருக்காக வளர்ந்தேன் என்னை யாரி டம் ஒப்படைக்கப்போகின்றேன். எனது மனதிற்கினியவனுக்காகவே நான் அழகாக என்னை ஆக்கிக்கொள்கின்றேன் என்பதனை இந்த வரிகள் புலப்படுத்துவதாக அமைகின்றது:

"கச்சான் அடிக்க கயல்மீன் குதிபாய மச்சானுக்கென்றே வளர்த்தேன் குரும்பை முலை" கச்சான் அடிப்பது குளிர் காற்று வீசுவதைக் குறிக்கும். இங்கு குளிர் என்றால் மனதில் காதல் மெருகேறுகின்றது. கயல்மீன் குதிபாய்தல் என்பது பருவ வளர்ச்சி மனதில் கிளுகிளுப்பை ஏற்படுத்துகின்றது என்பதாக அமைகின்றது.

- த. சிவபாலு -

தனது மனதுக்கினியவள் தனியாகப் போகும்போது தனது விருப்பத்தினை அவள்மீது கொண்ட காதலை அந்தக் காளை இவ்விதம் வெளிப்படுத்துகின்றது: 'மான்போல் நடைநடந்து மயில்போல் சிறகொதுக்கி தேன்போல் குதிகிளம்பி என்ரை சின்னவண்டு போறதெங்கே" தனது காதலனுக்காகக் காத்திருக்கும் கன்னி அவன் வருகைக்காகக் காத்திருக்கின்றாள். அவனது வரவின் ஒலியைக் கேட்க இடையூறாக கடல் அலையோசை, கிணற்றிலிருந்து நீர் மெல்லும் ஒலி என்பனவற்றோடு மற்றவர்களின் கண்களில்



பட்டுவிடாமல் இருப்பதற்கு அவளுக்கு இருளும் தேவைப்படுகின்றது. எனவே அவள் இயற்கையிடம் கேட்கின்றாள்: "கடலே இரையாதே கற்கிணறே பொங்காதே நிலவே எறியாதே என் நீல வண்டார் வருமளவும்". கன்னிமை அடைந்துவிட்டாள், பருவக் கோளாறு, காதல் தேவனின் மலர்க்கணை வீச்சுக்கு இலக்காகி விட்டால் விரகதாகம் தூண்ட அவள் தூதுவிடுகின்றாள். அன்பாகப் பழகும் ஆதங்காக்காவிடம்: "ஆதங்காக்கா ஆதங்காக்கா அவரைக்கண்டால் சொல்லிடுங்கோ பூவரசம் கன்னியொன்று பூ மலர்ந்து போச்சுதென்று" என ஆணும் பெண்ணும் சேர்வதிலே சுகம் சுகம் எத்தனையோ அப்படியே இந்தக் காதல் பாடல்களும் அமைகின்றன. இளவயதுக் கன்னியை மனதிலிருத்தி தனது உள்ளக்கிடக்கையை வெளிக்கொண்டுவரும் பாணியில் பாடப்பட இதற்கு பெண்ணாக பதில் தரும் பாணியிலும் பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

சங்க இலக்கியங்கள் காட்டும் களவழிக் காதல் முறைகளை நாம் கிராமிய வாழ்க்கையில் காணும் பாங்கில் இவை அமைந்துள்ளன. உண்மையான வாழ்வியலோடு ஒன்றிவிட்டவையாக காதல் காவியங்களாக இவை மக்கள் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்து விடுகின்றன. இன்றைய நவீன உலகில் இசைக் கருவிகளைப் பயன்படுத்துவதில் ஒவ்வொரு இனமக்களும் தமெக்கெனப் பாரம்பரிய இசைக்கருவிகளை வைத்திருந்தபோதிலும் உலகில் உள்ள நவீன கருவிகளையும் தொன்மையான சிறந்த கருவிகளையும் கலந்து பயன்படுத்தும் தன்மை வளர்ந்து வருவதனைக் காணலாம். இந்திய இசை குறிப்பாக தென்னகத்தின் இசைப்பாரம்பரியம் உலகளாவியதாக கொடிகட்டிப் பறக்கத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏ.ஆர் ரகுமானுக்கு கிடைத்த இரண்டு ஆஸக்கார் விருதுகள் இதற்குக் கட்டியும் கூறி நிற்கின்றன.

# திரை விமர்சனம்...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆராய்ந்து, அவற்றிலிருந்து பவுத்த மதத்தை தனது நெறியாகத் தேர்ந்தெடுக்கிறார். இதற்கு அவர் எடுத்துக்கொண்ட காலமும் முயற்சிகளும், மிக அழகாக படத்தில் கூறப்பட்டுள்ளது. பொதுவாக ஒரு தலைவரின் வாழ்க்கை வரலாறை திரைப்படமாக்கும்போது அவருடைய இறப்புக்காட்சியே உச்சக்கட்ட காட்சியாக அமைக்கப்படுவது வழக்கம். ஆனால், இத்திரைப்படத்தில் லட்சோப லட்சம் மக்களுடன் அம்பேத்கர் பவுத்தத்தைத் தழுவும் காட்சியே இறுதிக் காட்சியாக்கப்பட்டு, அம்பேத்கரின் மறைவை எழுத்துக்களில் சொல்லி முடிக்கிறார்கள். மிகச் சரியான வித்தியாசமான அணுகுமுறை.

அம்பேத்கர் வாழ்க்கையைப் படமாக்குவதில் இருக்கும் மிகப்பெரிய சிக்கல், காந்தி குறித்த அம்பேத்கரின் விமர்சனங்கள். அவற்றை விட்டுவிட்டு அம்பேத்கர் பற்றி படம் எடுக்கவும் முடியாது. எடுத்தால், இந்தியா அரசு அனுமதிக்குமா என்பதும் சந்தேகம்தான். எனவே, இப்படம் பற்றிய செய்திகள் வெளியான ஆரம்ப காலத்திலேயே, அம்பேத்கர் வரலாற்றை சரியாக பதிவாக்குவார்களா என்னும் ஐயம் பலருக்கும் இருந்தது. ஆனால், இயக்குனர் ஜாபர் பட்டேல் அதனை தனது சிறந்த இயக்கத்தால் மிக நேர்மையுடன் போக்கியிருக்கிறார். ஃப்ரீ பிரஸ் ஜர்னலின் முன்னாள் ஆசிரியர் அரு சாது, அம்பேத்கரியல் ஆய்வாளர் ஒய்.டி.பாட்கே ஆகியோர் திரைக்கதை உருவாக்கத்தில் பங்காற்றியிருப்பதும் இதன் கூடுதல் பலமாக உள்ளது.

காந்தியை அப்பழுக்கற்ற ஒரு மகாத்மாவாக கேட்டு வளர்ந்த ஒரு சாதாரண இந்தியக் குடிமகனுக்கு காந்தியின் மறுபக்கத்தை மிக துணிவுடனும் தெளிவாகவும் வரலாற்றின் துணைகொண்டு காட்டியிருக்கிறார்கள். காந்திக்கும் அம்பேத்கருக்கும் இடையேயான உரையாடல்களும் காட்சியமைப்புகளும் மிகச் சிறப்பாக படமாக்கப்பட்டிருக்கின்றன. அதன்மூலம் காந்தியின் பிம்பம் உடைபடுகின்றது. உதாரணமாக ஒரு வசனம், "காந்தியை துறவி என்றோ, மகாத்மா என்றோ அழைக்காதீர்கள். அவர் ஒரு சந்தர்ப்பவாத அரசியல்வாதி. சீஸனுக்கு சீஸன் அவர் குணம் மாறும். ஆதரவும் மாறும். ஆனால், இந்து மதத்தில் அடிமைகளாக தலித்துகள் காலம் முழுவதும் நீடிக்க வேண்டும் என்ற அவரது ஆசை மட்டும் மாறாது." அம்பேத்கர் தன் வாழ்நாளில் இப்படி சொல்லியிருப்பது உண்மைதானென்றாலும், தணிக்கைத்துறையினர் எப்படி இதனை அனுமதித்தார்கள் என்று ஆச்சரியமாக உள்ளது. ஆனால், இந்த பள்ளத்தில் இருந்து காந்தி மேலெழுந்து வரும் ஒரு காட்சியும் வருகிறது. அம்பேத்கர் காங்கிரஸ் கட்சியில் ஒருபோதும் உறுப்பினராகக்கூட இருந்ததில்லை. ஆனாலும், தனது மரியாதைக்குரிய எதிரி யான அம்பேத்கரை சுதந்திர இந்தியாவின் முதல் அமைச்சரவையில் சேர்க்கச் சொல்லியும் சட்டத்துறையை வழங்கக் கோரியும் நேருவிடம் காந்தி சிபாரிசு செய்கிறார். இதை மிக நுணுக்கமாகப் பதிவு செய்திருக்கிறார்கள்.



அம்பேத்கரின் தனி வாழ்க்கையும் இடையிடையில் சொல்லப்படுகிறது. வெளிநாட்டு கல்வி தொடர்பான காட்சிகளின் இடையில் சிறுவயதில் அவர் சந்திக்க நேர்ந்த தீண்டாமைக் கொடுமைகள் காட்சிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. அவரது மனைவியான ரமாபாய் ஒரு சாதாரண குடும்பத் தலைவி. கல்விக்காகவும் போராட்டத்திற்காகவும் தன்னை விட்டு பெரும்பாலும் விலகியே இருக்கிற கணவனின் அருகாமைக்கு ஏங்குகிறவர். எக்காரணம் கொண்டும் தன் குழந்தைகளின் படிப்பு தடைபட்டுவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறார் அம்பேத்கர். உடல் நலிவுற்று ரமாபாய் இறக்கும் காட்சி உருக்கம். "வெளியே மழை பெய்கிறதா" என்று பிதற்றுகிறார் ரமாபாய். பாவனையாய் அதை ஆமோதிக்கிறார் அம்பேத்கர். அவர்களின் இளவயதுத் திருமணத்தின் போது மழை

தொடர்ச்சி 39ம் பக்கம்

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
HOMELIFE HIGHER STANDARDS
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga -905.712.2666

# மனித குலத்தினை...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

எதிர்கொள்ளும் வைத்தியசாலைகளுக்கு வழங்கி வருவதுடன், இவ்உறுப்புகள் தானம் தொடர்பான விழிப்புணர்வுகளையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்றது.

**பிரபல மருத்துவர்களை இயக்குனர்களாக கொண்ட இந்நிறுவனத்தின் விபரம் பின்வருமாறு:**

**TRILLUM GIFT OF LIFE NETWORK**
**533, University Ave. Suite #900**
**Toronto, ON M5G 1W7**
**தொலைபேசி:** 416.363.4001
**அல்லது** 1.800.263.2833
**இணையதளம்: www.giftoflife.on.ca**

தங்கள் மரணத்தின் பின்பு தங்கள் உடல் உறுப்புகளை தானம் செய்ய விரும்புகிறவர்கள் பின்வரும் மூன்று வழிகளில் தங்கள் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

1. இந்நிறுவனத்துடன் நேரடியாக தொடர்பு கொண்டு உடன்படிக்கை விண்ணப்பத்தில் கைச்சாத்திட்டுக்கொள்ளலாம்.

2. இந்நிறுவனத்தின் இணையதளத்திலிருந்து விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்து நிரப்பி, கைச்சாத்திட்டு மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு அனுப்பி வைத்து உடல் உறுப்புகளின் தானம் செய்துகொள்ள விரும்புவதற்குரிய சம்மதம் தெரிவித்து தங்களை பதிவு செய்து கொள்ளலாம்.

3. தங்களின் மருத்துவ சுகாதார காப்புறுதி அட்டையினை குறிப்பிட்ட சில வருடங்களுக்கு ஒருமுறை அவ் அலுவலகம் சென்று புதுப்பிக்கும் போது (Ontario Health Insurance Card Renewal Time) இவ்வுறுப்புகள் தானம் செய்யும் உடன்படிக்கை விண்ணப்பங்களை அவர்களிடம் கேட்டு கைச்சாத்திட்டு அந்த இடத்திலே வழங்கலாம். அல்லது அந்த அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

## கனடிய தகவல் தொடர் 142

உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட ஒருவரது மனம் சில நேரங்களில் குழம்பினால், அதனை ரத்து செய்ய விரும்பினால், தமது ஒப்பந்தத்தினை வாபஸ் வாங்கும் உரிமையும் இங்கு உண்டு. **உடன்படிக்கையில் கைச்சாத்திட்டவர்கள், தங்கள் குடும்பத்தினர் மற்றும் தங்கள் பாசத்திற்குரிய வாரிசுகளுக்கு இத்தானம் என்பது "என் ஆத்மாவின் ஆவல்" என்பதனை நிச்சயம் தெரிவித்து வையுங்கள் என்பதனை இந்நிறுவனம் வலியுறுத்துகின்றது. ஏனெனில் ஒருவரின் மரணத்தின் பின்பு இவ் உறுப்புகளை அகற்றுவதற்கு அவரது குடும்பத்தவர்கள் ஆட்சேபனையோ அல்லது எதிர்ப்போ தெரிவித்தால், அவர்களை மனிதாபிமானமற்ற முறையில் சங்கடப்படுத்தி மரணமானவரின் ஏற்கெனவே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையினை நிறைவேற்று கின்றேன் என குறிப்பிட்டு உடல் உறுப்புகளை தானத்திற்காக எடுக்க கூடாது என்பது இந்நிறுவனத்தின் சட்ட விதிகளில் கண்டிப்பாக குறிப்பிடப்பட்டுள்ள விடயமாகும்.**

**இதில் சம்பந்தப்படும் கனடாவின் வைத்திய நிபுணர்களும் அந்த நேரம் மனிதநேயமற்ற முறையில் மரணமாகியவரின் குடும்பத்தவர்களின் மனதினை அவர்களின் விருப்பத்திற்கு மாற்றாக இதனை நிறைவேற்ற போய் எந்த சந்தர்ப்பத்திலும் புண்படுத்தமாட்டார்கள்.**

கனடாவின் எந்தவொரு வைத்தியசாலையிலும் உடன்படிக்கை செய்தவரின் மரணம் என்பது உறுதிபடுத்தப்பட்டதுடன் அங்கு அவரது அடையாளமாக இருக்கும் மருத்துவ சுகாதார காப்புறுதி இலக்கத்தின் கீழ் (OHIP Card) ஒப்பந்தம் செய்து வைத்திருப்பது தெரியவர மரணம் நடந்து இருபத்தி நான்கு மணித்தியாலத்தினுள் அவரது குடும்பத்தவர்களுக்கு ஏற்கெனவே மரணமானவர் செய்து வைத்துள்ள ஒப்பந்தம் தொடர்பாக தெரியப்படுத்தி உறுப்புகளை எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளை முன் எடுப்பார்கள். அதன் பின்னர் குடும்பத்தினரிடம் பூதவுடல் வழங்கப்படும். தொடர்ந்து உடல் உறுப்புக்களுக்காக ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கும் நோயாளிகளுக்கு வெற்றிகரமாக மாற்றியமைத்த பின்பு இந்நிறுவனம் நன்றி தெரிவித்து மரணமாகியவரின் குடும்பத்தவர்களுக்கு எந்த உறுப்பு எந்த வகையான நோயாளிக்கு மாற்றம் செய்யப்பட்டது என்பதனை கடிதமூலம் அறிவிப்பது வழமையாகும். உடல்உறுப்பு மாற்றம் செய்யப்பட்டது என்பதை அறிவிப்பார்களே தவிர, எவர் உறுப்பு எவருக்கு மாற்றம் செய்யப்பட்டது என்பது இருபக்கமும் தெரியப்படுத்தமாட்டார்கள். இவை பற்றி தெரியப்படுத்தக் கூடாது என்பது சட்ட ஒழுங்கு விதியாகும்.

ஒரு மனிதனின் உடலில் உள்ள பின்வரும் எட்டு உறுப்புகள் தானம் செய்வதற்காக ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவது வழமையாகும். இங்கு தாங்கள் விரும்பிய பகுதியினை மட்டுமோ அல்லது எட்டு பாகத்தினையும் ஒன்றாக சேர்த்தும் தானம் செய்வதற்கு விரும்பியபடி ஒப்பந்தத்தில் சம்மதிக்கலாம் என மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனம் தெரிவிக்கின்றது.

அவையாவன பின்வருமாறு

**சிறுநீரகங்கள் *(Kidneys)***
குருதியினை சுத்திகரித்து கொடுக்கும் இச்சிறுநீரகங்களுக்காக கனடாவில் இருந்து கொண்டும் ஏங்கி தவிக்கும் ஈழத்தமிழ் நோயாளிகளே ஏராளம்! என்பது பலரும் பரவலாக அறிந்த விடயம் ஆகும்.

**இருதயம் *(Heart)***
பிறக்கும் போதே ஏராளமான குழந்தைகள் இருதய வால்வு (Heart Valve) பழுதான நிலையில் பிறந்து இன்னொருவரின் இருதயவால்வினை எடுத்து பொருத்தும் சத்திரசிகிச்சைக்காக குழந்தைகள் மருத்துவமனையில் காத்து இருப்போர் ஒன்று இரண்டல்ல. ரொறொன்ரோ நகரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனைக்குப் போய்ப்பார்த்தால் விபரமாகப் புரியும். அந்த குழந்தைகளின் கண்பார்வைகள் ஏக்க பெருமூச்சுடன் ஒவ்வொருவரையும் கண்நோக்கும்.

**எலும்புகள் *(Bone)***
எலும்புகளினுள் இருக்கும் 'எலும்பு மச்சைகள்' (Bone Marrow) என்பது குறைவாக இருக்கும் நோயாளிக்கும் குருதியில் ஒட்சிசனைக் காவிச்செல்லும் செங்குருதி (Red blood cells) இல்லாது போகின்றது. அதே நேரம் தொற்று நோய்களை எதிர்த்து அழிக்கும் வெண்குருதி துணிக்கைகளும் (White blood cells) இல்லாது போகின்றது.

இவ் 'எலும்பு மச்சைகள்' குறைவாக உள்ள நோயாளிகளுக்கு இவ்உடல் உறுப்பு தானத்தின் போது அதனை மாற்றியமைக்கும் போது, இந் நோயிலிருந்து மீளக்கூடியதாகவிருக்கும்.

**கணைய நீர் சுரப்பி** (Pancreas)
வயிற்றுப்பகுதியில் இரைப்பைக்கு சற்று பின்பக்கமாக இருக்கும் ஏறத்தாள 17 செ.மீற்றர் உள்ள முள்ளங்கி போன்ற ஒரு உறுப்பு ஆகும். இவ் உறுப்பானது உணவினை சமிபாடு அடைவதற்கு பயன்படும் கணையநீர் என்னும் நொதியத்தினை வழங்குகின்றது. உடலுக்கு தேவையான ஹோர்மோன்களை உருவாக்குகின்றது.

**கல்லீரல்** (Liver)
மனிதர்களின் மார்பு எலும்புக் கூட்டிற்குள், வயிற்றின் மேல்புறத்தின் வலப் பக்கமாக இரைப்பைக்கு அருகில் இருக்கும் ஒரு உறுப்பு ஆகும். உடலின் சீரான இயக்கத்திற்கு பல வழிகளிலும் பணிபுரியும் முதன்மை வாய்ந்த உடல் சுரப்பிகளில் இதுவும் ஒன்று ஆகும்.

**நுரையீரல்** (Lungs)
மூச்சுக் காற்றினை உள் இழுத்து வெளியேற்றும் இரு சுவாசப்பைகள் தேவையான நோயாளிகளுக்கு மாற்றிமைக்கப்படுகிறது. கடந்த மாதம் ரொரன்ரோ நகரில் மரணமான ஒருவர் தான் ஏற்கெனவே உடல் தானம் ஒப்பந்தம் செய்து வைத்ததன் படி அவரது நுரையீரல் எட்மன்ரன் வைத்தியசாலையில் இதற்காக காத்திருந்த தமிழ் பேராசிரியர் ஒருவருக்கு பொருத்தப்பட்டது என்பது நாம் அறிந்துகொண்ட ஒரு உள்ளூர் செய்தியாகும்.

**தோல்** (Skin)
பெரும் தீ காயங்களினால் தோல் எரிந்து

தொடர்ச்சி 38ம் பக்கம்




**'தெற்காசிய மதியிறுக்க விழிப்புணர்வு மையம்'**
(South Asian Autiness Awareness Centre)

அலுவலகம் - 310 - 80, Acadia Ave., Markham, ON L3R 9V1
Phone - 416.824.8847 E.mail - info@saaac.org
Website - www.saaac.com Founder excutive director - Mrs. Geetha Moorthy

இந்நிறுவனம் கனடாவில் வசிக்கும் தெற்காசிய சமூகத்தில் குறிப்பாக இலங்கைத் தமிழர்களின் குடும்பங்களில் 'மதியிறுக்கம்' (Autism) என்னும் குறைபாட்டுடன் ஏராளமாக பிறந்து வளரும் பிள்ளைகளை ஒன்று சேர்த்து அவர்களின் வாழ்வில் ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்தி அவர்களையும் இந்த சமூகத்தில் சுயாதீனமாக வாழவைப்பதற்காக 2008ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஒரு லாபகரமற்ற தர்மஸ்தாபனம்.

இந்நிறுவனங்களின் ஆதரவுடன் இவர்களுக்கான பயிற்சிநெறித்திட்டங்கள் உளவியல் துறை, மருத்துவ துறைகளில் நிபுணத்துவம் பெற்ற தொண்டர்களினால் பின்வரும் இரு இடங்களிலும் நடத்தப்படுகின்றது.

1. ஸ்ரீ ஐயப்பன் ஆலயம், 635 Middlefield Road, Scarborough, ON
2. Markham Civic Centre, 101, Town Centre Court, Markham, ON

இங்கு தேவை: இவ் ஒருங்கிணைப்புக்கும் பணிகளுக்கும் நிதி தேவை! அதற்காக இரண்டாம் வருடமாக நடத்தப்படுவதே **"நிதி சேகரிப்பு இராப்போசன நிகழ்வு"**
(***Fund raising gala dinner dance***)

காலம் - மார்ச் 05, 2011
இடம் - Platinum convention centre, 17, Vinyl Court, Woodbridge, ON L6R 3G8
விலை - ஒரு நபருக்கு $50 டொலர் மட்டுமே Raffle ticket $5 டொலர்.

இங்கு தேவை: பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் வாழ்வுக்கு உங்கள் கை கொடுப்பு! தங்கள் உதவிகள்!
தங்கள் ஆளுமைக்கு ஏற்ற வழிகளில் தொடரட்டும் உதவிகள்!

தொடர்புகளுக்கு - கீதா - 416.824.8847 ரோகன் ஜோர்ஜ் - 647.202.5404
ஜோன் சபாரத்தினம் - 416.450.1690
ஏனெனில் இந்த பாதிப்பின் துடிப்பில் துயரும் தமிழ் குடும்பங்கள் ஏராளம்! இவ்விழிப்புணர்வும் சேவையும் கனடாவில் உள்ள தமிழர்களில் ஆரம்பித்து தாயக மண் வரை தொடரவேண்டும்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

# BASEMENT RENT

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. Anytime.
416.286.8450 / 416.459.3006

**DENISON & MIDDLEFIELD**
Two Bedroom bsmt apt. for rent. Close to all facilities. Avail. immediately.
905.209.9212 / 416.562.5113

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, laundry, parking. Close to school. Avail. immediately. Girls or small family preferred.
647.282.0643 / 905.554.2505

**NEILSON & FINCH**
3 Bedroom brand new walkout bsmt for rent. Fully hardwood floor. 2 Full washroom, laundry, basic cable, parking included. Close to Brookside public school, 133 bus stop. No smoking & No pets.
தொடர்புகளுக்கு: 647.831.2030

**VICTORIAPARK & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Utilities including. Rent $450. Close to TTC, mall. Avail. immediately.
416.754.0823 / 416.291.3153

**NEILSON & SHEPPARD**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to mall, high-school, library, TTC, bank. Available immediately.
416.546.2937 / 647.402.2937

**MORNINGSIDE & STAINS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.298.6416

**MORNINGSIDE & MORNINGVIEW**
Newly renovated 1 bedroom walkout bsmt for rent. living room, laundry, cable, parking. Utilities included. Close to TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.666.9076

**BRIMLEY & DENISON**
2 Bedroom bsmt for rent. Parking, cable, laundry. Close to TTC, mall, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.604.0870

**SHEPPARD & MARKHAM**
2 Bedroom bsmt for rent. Close to all facilities. Small family or ladies preferred.
தொடர்புகளுக்கு: 416. 727.3716

**MCCOWAN & EGLINTON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, shopping, school. Avail. immediately.
416.264.6253 / 416.834.3677

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.551.8379

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.430.0097

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, internet. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.832.3977

**MARKHAM & PAINTED POST**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, mall. Avail. 1 அறை மேல்தளத்திலும் வாடகைக்கு உள்ளது. Avail. Anytime. Ladies or old people preferred.
416.431.4730 / 647.771.3801

**MARKHAM & HIGHGLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. March 01, 2011.
905.471.7667 / 647.338.9631

**KENNEDY & ST.CLAIR**
Brand new 2 bedroom bsmt for rent. Sep. entrance. Parking, sep. laundry. Close to School, bus, subway, stores, etc. Avail. March 01, 2011.
தொடர்புகளுக்கு: 416.266.7704

**MCCOWAN & 16TH AVE.**
1 அறை கொண்ட bsmt Apt. வாடகைக்கு உண்டு. Sep. entrance. Parking, cable, laundry. Close to bus, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.414.5562

**DUFFERIN & RUTHERFORD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to YRT, GO station, school. Avail. March 01, 2011.
தொடர்புகளுக்கு: 905.303.3022

**BIRCHMOUNT & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately. Family preferred.
416.873.0549 / 416.297.0549

**BRIMLEY & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, shared laundry. Close to YRT, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.204.2439

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.802.6067

**FINCH & TAPSCOTT**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, Hindu temple, mall.
தொடர்புகளுக்கு: 416.726.4186

**MIDLAND & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 2 Washrooms, laundry, cable. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.827.0147
Monday - Friday After 5:00 pm
Weekends Anytime

**BELLAMY & PANDORO CIR.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. Students or small family preferred.
416.438.2559 / 416.454.3469

# WARDEN & MCNICOLL

**2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. March 01, 2011.**
**416.494.0850 / 416.315.5648**

**9TH LINE & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, cable. Close to YRT, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.294.9067

**KENNEDY & EGLINTON**
1 bedroom for rent in a 2 Bedroom bsmt apt. for rent. Sep. entrance, Parking, Laundry, Cable. Avail. immediately, Elders or Ladies preferred. தொடர்புகளுக்கு:
416.209.6571 /416.759.1916

**MIDDLEFIELD & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry, cable. Close to bus, YRT, mall, tamil stores. Girls or small family preferred. Avail. March 01, 2011.
905.910.9926 / 647.885.1429

**KENNEDY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Living room, kitchen, full washroom, parking, TV, cable, Sep. entrance. Close to TTC (Kennedy Subway), school & all amenities. Quiet place. Avail. March 01, 2011.
தொடர்புகளுக்கு: 905.334.5409

**KENNEDY & DENISON**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable, laundry . All facilities close by. Avail. March 01, 2011.
தொடர்புகட்கு: 416.875.7146

**9TH LINE & ROUGEBANK**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to Mandarin mall. Avail. immediately. No pets & No smoking.
905.554.0849 / 416.219.6555

**MORNINGSIDE & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, school. Avail. Anytime. 1 or 2 person or working people preferred. தொடர்புகளுக்கு: 416.841.2232

**MIDLAND & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. Avail. immediately.
416.750.9138 / 647.401.9423

**MARKHAM & SHEPPARD**
2 Bedroom walk-out bsmt for rent. Parking, laundry. Close to TTC, school, shopping, etc. Avail. immediately.
905.683.5105 / 416.277.9044

**MEADOWALE & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Utilities included. Close to TTC, school, University, stores, etc.
தொடர்புகளுக்கு: 416.431.5078

**MIDLAND & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen, living room.Close to bus, school, stores. Avail. February 01, 2011. தொடர்புகளுக்கு: 416.269.1332

**MCCOWAN & ELSON**
Newly renovated 2 bedroom bsmt apt. for rent. Sep. entrance, parking, laundry. Step to school, TTC. Quiet place. Park near-by. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.991.4437

**MORNINGSIDE & FINCH**
Bsmt room & upper floor rooms for rent. Close to all facilities. முழுநேர அல்லது பகுதிநேர வேலை ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.857.8548

**FINCH & TAPSCOTT**
2 Bedroom bsmt for rent. Sept. entrace. Parking, Tamil TV, bills inclu. Close to TTC, School, Malvern mall. Avail. immediately.
416.754.2002 / 416.688.8364

**STAINS & MORNINGSIDE**
2 Bedroom walkout bsmt for rent. Sep. entrance. Large kitchen, washroom, dining room, parking, laundry, cable. Close to TTC, mall, etc. Avail.immediately.
416.315.4653 / 416.297.9974

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, laundry. Close to TTC, malvern mall, school. No smoking. Avail. immediately. 416.724.8727 / 647.280.6163

**MORNINGSIDE & OLDFINCH**
2 bedroom bsmt for rent. Sep. entrance. Parking. Close to school, ttc, etc. Avail. immediately. தொடர்புகளுக்கு:
647.350.1515 / 647.836.0654

**DONMILLS & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC. No smoking & No drink Very strictly. Rent $300. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.342.3313

**BRIMLEY & LAWRENCE**
2 Rooms for rent in a basement. Sep. entrance & parking, laundry. Close to TTC, stores & other facilities. Very quiet place. Avail. Immediately. Bachelor preferred.
தொடர்புகளுக்கு: 416.264.8177

**SHEPPARD & MORNINGSIDE**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to TTC & shopping, etc . Avail. immediately. Couple or students preferred.
தொடர்புகளுக்கு: 647.380.4882

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**

மேலும் பக்கங்கள் 25, 26

# BASEMENT FOR RENT

### MCNICOLL & MCCOWAN
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Very strictly No smoking, No drink & Clean. Rent $650 & 40% utilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.342.3313

### NEILSON & SHEPPARD
மூன்று அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Bills included. Close to school, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.286.1535

### WARDEN & LAWRENCE
1 Bedroom bsmt for rent. Sep.entrance, kitchen, living room, laundry, cable & internet including. Close to TTC, hwy (401, DVP). Avail. immediately. பெண்கள் மட்டும்.
தொடர்புகளுக்கு: 416.997.6575

# ROOM RENT

### MORNINGSIDE & SHEPPARD
1 Bedroom for rent. Close to TTC, mall, school. Avail. immediately.
416.724.6186 / 647.833.3893

### NEILSON & FINCH
### MORNINGSIDE & FINCH
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.351.0422

### MEADOWVALE & SHEPPARD
One Bedroom for rent - Second floor. 1 Washroom, parking, internet, 3 times food including. Close to high school, university, 24 hrs. TTC. Ladies preferred.
647.833.2351 / 416.724.4433

### WARDEN & FINCH
ஒரு அறை வாடகைக்கு உண்டு. Washroom, laundry, cable, parking avail. Close to TTC, shopping, etc.
Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.495.9775

### MARKHAM & SHEPPARD
3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall.
416.335.5242 / 416.820.1999

### MARKHAM & DENISON
Room for rent in main floor. Parking, cable & laundry. Close to TTC, YRT, Mall & school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.339.1062

### KENNEDY & LAWRENCE
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

### MARKHAM & STEELES
1 Bedroom for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.294.7026

### LAWRENCE & PHARMACY
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

# HOUSE FOR RENT

### KENNEDY & FINCH
3 விசலாமான அறைகளைக் கொண்ட Bunglow வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. TTC, மற்றும் சகல வசதிகளையும் கொண்டது. Avail. April 01, 2011
தொடர்புகளுக்கு: 647.779.3411

### NEILSON & SHEPPARD
3 Bedroom + 1 bedroom bsmt for rent. Close to all facilities. Avail. April01, 2011. Rent $1250 + utilities.
416.284.9438 / 416.931.7279

### BIRCHMOUNT & MCNICOLL
5 + 3 Bedroom for rent. 4 Washrooms. Close to TTC, hospital. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.293.6211

### MARKHAM & EGLINTON
2 +2 Bungalow house for rent. Close to TTC, school, mall, Tamil stores. Avail. April 01, 2011.
416.265.5437 / 647.269.4130

### BIRCHMOUNT & FINCH
4 bedroom detached house for rent. Close to stores, hospital, ttc, etc. Avail. anytime.
தொடர்புகளுக்கு: 416.897.4838

### BIRCHMOUNT & FINCH
மேல்தளத்தில் 3 அறைகளும், கீழ்தளத்தில் 3 அறைகளும் வாடகைக்கு உண்டு. Close to all facilities. அத்துடன் 1 தனி அறையும் வாடகைக்கு உண்டு. Avail immediately.
தொடர்புகளுக்கு: 416.293.6211

# HOUSE FOR SALE

### DANFORTH & EGLINTON
4 bedroom new Townhouse for sale. Close to bus, 5 min. to Kennedy subway, stores. தொடர்புகளுக்கு: 647.960.4120

# BUSINESS FOR SALE

Scarborough வில் அமைந்துள்ள Bar & Restaurant விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.414.5562

# SPACE FOR RENT

### KENNEDY & ELLESMERE
Office or retail. அத்துடன் சனி, ஞாயிறுகளில் காலை 10:00 தொடக்கம் மாலை 9:00 மணி வரை வேலைக்கு ஆட்கள் தேவை. பெண்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.400.6569

### KENNEDY & LAWRENCE
Office, நடனவகுப்புக்கள்,Tution போன்றவற்றை நடத்தக்கூடிய இடம் ஒன்று வாடகைக்கு உள்ளது.
416.755.8354 / 647.836.9255

KKM Auto Maintance Inc. கார் Wash பண்ணுவதற்கு ஓர் இடம் வாடகைக்கு உண்டு.
416.755.8354 / 647.836.9255

## சங்கீத வகுப்பு

Ajax, Markham, Scarborough, Downtown ஆகிய இடங்களில் Swaraganam Academy ஆசிரியை வாசுகி சிகாமணி அவர்களால் சங்கீத வகுப்பு நடத்தப்படுகின்றது.
தொடர்புகளுக்கு: 905.427.1792

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***

# SPACE FOR LEASE OR SALE

### KEELE & FINCH
Beauty Care, computer repair service, insurance service & accident injuries, traffic ticket, bankruptcy service, acupuncture service, pawn brokers போன்ற வர்த்தகங்கள் நடத்தக்கூடிய இடம் குத்தகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 416.992.7989

# TUITION

### MCLEVIN & TAPSCOTT
Behind Malvern mall.
Math & English (JK - Grade 3).
Homework help. Preparing kids for JK. 3 Classes a week $50 per month.
தொடர்புகளுக்கு: 416.332.1254

# TUTORING

### BRIMLEY & LAWRENCE
For SCHOOL, COLLEGE, UNIVERSITY, CGA, APIX, CPIM, CSCP & SAP STUDENTS. ***Grade 5 - 12***. Math, Science, Chemistry, Biology, Business & Accounting subjects by professionally qualified staff.
தொடர்புகளுக்கு: ***416.669.3101***

# காணி விற்பனைக்கு

# LAND FOR SALE

About 3 lachchams of prime land, situated at Power House Road #5, 2nd lane, just behind Jaffna Teaching Hospital & Gnanams Hotel, near Jaffna main bus station and all Banks with facilities for underground (well) water, disposal of waste etc., is available for sale.
***514-684-2798 8199 or 917-301 8796 or***
Email: RAGUMAR@MSN.COM
with your offers.
Asking price is US$90,000.00 per Lachcham.

யாழ்ப்பாணம் ஐயனார் கோவிலடியில் சுமார் 3 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது. கிணறு மற்றும் தண்ணீர் தாங்கியுடன் உள்ளது. யாழ்ப்பாணம் டவுன் ரவுனிலிருந்து 9 நிமிட தூரத்தில் உள்ளது. மேலதிக தொடர்புகட்கு 416-450-6833 அல்லது 905-887-7457.

## மணமகள் தேவை

35 வயதுடைய MSc. முடித்த மணமகனுக்கு கனடாவில் வசிக்கும் படித்த மணமகள் தேவை.
905.426.8424 / 905.472.8533

## மணமகன் தேவை

யாழ். இந்து மதத்தைச் சேர்ந்த தற்பொழுது கொழும்பில் தனியார் நிறுவனத்தில் Accounts assistant ஆக பணிபுரியும் 1972 ஆம் ஆண்டு கார்த்திகை நட்சத்திரம், 5'4" உயரமுடைய அழகிய பெண்ணுக்கு நற்பண்புள்ள வரனை எதிர்பார்க்கின்றோம். திருமண தேவை செய்பவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: 647.618.9316

மேலும் பக்கங்கள் 24, 26

# JOB JOB JOB

## COOK & CASHIER WANTED

### MIDDLEFIELD & FINCH
சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள தமிழ் உணவகம் ஒன்றுக்கு, சமையல் தெரிந்தவரும் Cashier வேலைக்கும் ஆட்கள் தேவை
தொடர்புகளுக்கு: 416.268.5868

### KENNEDY & ELLESMERE
சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள தமிழ் சுப்பர் மார்க்கட் ஒன்றின் மீன் பகுதிக்கு வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. மேலதிக
தொடர்புகளுக்கு: 647.430.8238

# தேவை

58 வயதுடைய (270 lbs) விவாகரத்து பெற்ற கனடாவில் வாழும் கனேடிய பெண் பிரஜை வலிமையுடைய ஆண்மகனைத் தனக்கு உதவிக்காக தேடுகிறார்.
தொடர்புகளுக்கு: 416.269.3756

## SAREE BLOUSE



**அனைத்து தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:905.492.0259

## COMPUTER REPAIR

+ கணனி திருத்தவேலைகள்
+ கணனி தேவைகள்
+ அடிப்படை கணனி பயிற்சி
+ இலவச ஆலோசனைகள்



**Pro-Win Computers**
**919 Ellesmere Road, Unit - 302**
**416-879 7489 / 647-340 5568**
**(Kennedy & Ellesmere)**

## Babysitting available

Babysitting available in your area
Craft and play school activities available monday to friday 7am - 5 pm
call for more information
647.247.1344

# CAR FOR SALE

2005 Toyota Corolla for sale. Certified. Price $7,995.
தொடர்புகளுக்கு: 416.575.5055

## CARS FOR BUY & SELL

2005 Corolla, 2001 Toyota Sienna, 1997 Honda Civic, 1995 Honda Accord கார்கள் விற்பனைக்கு உண்டு. கார்கள் வாங்குவதற்கும் விற்பனைக்கும் உண்டு. அத்துடன் Van வாடகைக்கு ஓட்டப்படும்.
அழையுங்கள் : ***416.625.4146***

# JOB! JOB! JOB! JOB! JOB!

# FINCH & WESTERN

Telemarketers wanted. $12 Perhour + commision. ***Contact: 416.646.8860***



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490 / 647.831.0070

## Answers TUTORIAL 275

(1) Let the three consecutive even integer be n, n + 2, and n + 4
3n = (n + 2) + (n + 4) 3n = 2n + 6
n = 6, The smallest of the three integer is 6.

(2) If Log $a^2$ = Log b $^8$ = y (Say) Then $a^y = 2$ $b^y = 8 = (ay)^3$
$b^y = a^{3y}$ $b = a^3$

(b) Simplify 5 $\log_5 8$ - 3 $\log_3 5$ + $\log_3 7$ = 5 log 8/ Log 5 - Log 35/ Log 3
log 8/log 5 - log 35/log 3 = 5 - 3
= $5^{1.29}$ - $3^{2.24}$ = 7.97 - 35.14 = - 27. 17

(3) Let x represent the distance the tip of the ball's shadow is from the base of the lamp post let dx/dt represent the rate at which the shadow is moving along the ground.
Let y represent the distance the ball has fallen.
From Simiar triangle s 20 - y/x - 12 = 20/x
20x - xy = 20x - 240 xy = 240
dx/dt y + dy/dt x = 0 At a specific time
At any time t, the height of the ball is h = 20 - $5t^2$
when t = 1 h = 15 y = 5
Also dy/dt = 10 when t = 1 dx/dt y + dy/dt x = 0
dx/dt (5) + 10 x 48 = 0 dx/dt = 96m /
The shadow in moving at 96m/sec.

(4) F(x) = {4 - $x^2$ x ≤ 1 {2x + 1 x > 1 slope at (-1, 3), f(x) = 4 - $x^2$
m = Lim 4 - (-1 + x)$^2$ - 3/h = 4 - 1 + 2 h - $h^2$ - 3/h
= Lim 2 - h
h - x = 2

(5) Given a parallelepiped defined by a = (2, -5, -1)
b = (4, 0, 1) c = (3, -1, -1)
Now b x c = 1, 7, -4
The volume of the parallelepiped is |a (b x c)|(2, -5, -1), (1, 7, -4) |2 - 35 + 4|
= 29

### Tutorial 275 Questions

(1) Of the 33 students in a class, is belong to the mathematics club, 17 belong to the science club, and 4 belong to neither club. What is the number of students who belong to both clubs? (For Gr. 7 - 8)

(2) Evaluate Lim √x + 1 - √2x + 1/√3x + 4 - √2x + 4 of the indeterminate quotient. (Gr. 11 & 12)

(3) Of f(x) = 2x - 7 and g(x) = 5 - 2x, determine (a) fof $^{-1}$ and f $^{-1}$ of (Gr. 11 &12)

(4) Find the area of the triangle with the given verticles (7, 3, 4), (1,0, 6) & (4, 5, -2) (Gr. 11 & 12)

(5) Find the profection of u = (17, -3, 8)
(a) Can to each of the coordinaten axes (b) Can to each of the coordinaten phones.

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.
Classes available at **Scarborough & Stouffville**
**Contact: 647.340.9490 / 647.831.0363**

**Tutoring**



**Tutoring for students from grade 3 to 12.**
Courses include: Math, Science, Algebra and Geometry, Advance Function, Physics, Chemistry and English. Also tutoring available for University student.

***You will have a better chance of achieving your goals. Courses taught by experience University graduates. Cost for the courses areas the following:***
Grade 3 to 5 from $30.00/month Grade 6 to 8 from $40.00/month
Grade 9 to 12 from $50.00/month Location: Near **Birchmount & Sheppard.**
For more information contact *Kula* (B.Engineer McMaster University Canada, B.Sc Jaffna University SriLanka) at
**Home: (416) 850-9397 Cell: (416) 317-9413**

**Tutoring**

**Gr.1-12; College & University**
*** English * French * Math * Physics * Chemistry * Biology ***

- Systematic and individualized Plan to Build Strong Base in Core Subject Areas
- Strict Adherence to Ontario Curriculum
- Regular School Teachers and Canadian University Graduate and Post Graduate Students Taking Classes

**GTA Tutors**
**Ph: (647) 705 0725**

Our Aim is to Make Students Competent Internationally while Committed to Affordable Rates


# ஆடுதுறை...

20ஆம் பக்கத்தொடர்ச்சி

கோயில்களையும் தரிசிக்கலாம். 15 தினங்கள் பொறுங்கள். அடுத்த இதழில், அந்த 'இன்னொரு ஆடுதுறை' பற்றி சொல்கிறேன்.

## எப்படி செல்வது? எங்கே தங்குவது?

கும்பகோணத்தில் இருந்து 12 கி.மீ. தொலைவிலும், மயிலாடுதுறையில் இருந்து 20 கி.மீ. தொலைவிலும் உள்ளது ஆடுதுறை. கும்பகோணம் - மயிலாடுதுறை ரயில் மார்க்கத்தில் உள்ளதால் ரயிலிலும் இந்த ஊருக்குச் செல்லலாம். பேருந்தில் வருபவர்கள், மயிலாடுதுறை - கும்பகோணம் சாலை வழியில் உள்ள ஆடுதுறை பேருந்து நிறுத்தத்தில் இருந்து கும்பகோணம் சாலையில் சிறிது தொலைவு சென்று, சாலையோரத்தில் உள்ள குளத்தையொட்டி இடப்புறமாகத் திரும்பிச் செல்லும் சாலையில் சென்று, வலப்பக்க வீதியில் திரும்பினால் ஆலயம் வரும். ஆடுதுறை பேருந்து நிறுத்தத்தில் இருந்து சுமார் அரை கி.மீ. தொலைவு. கோயில் தினந்தோறும் காலை 7.30 முதல், மதியம் 12 மணி வரையிலும், மாலை 5.30 முதல் இரவு 8.30 மணி வரையிலும் திறந்திருக்கும். தங்குவதற்கு தஞ்சாவூரிலும் கும்பகோணத்திலும் சிறந்த தங்கும் விடுதிகள் உள்ளன.






# இளையோர் ஆக்கம்

விளம்பரம் தனது எழுத்தாளர்களை வருடம் தோறும் தை மாதத்தில் வரும் முதல் சனிக்கிழமை கௌரவிக்கின்றது. கடந்த வைபவத்தில் பல எழுத்தாளர்கள் விளம்பரத்தில் அடுத்த தலைமுறையை எழுதத் தூண்டவேண்டும் என்று கேட்டு கொண்டார்கள். அதற்கு இணங்க விளம்பரத்தின் பொங்கல் இதழ் உடன் **இளையோருக்காக இளையோரால் தமிழில் எழுதப்படும் ஆக்கங்களை பிரசுரிக்கப்படுகின்றது.**


இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# சிங்கமும், கரடியும், நரியும்

## ஞா. ஆரணி
**அகவை 12**

ஒரு மிருகக்காட்சிச்சாலையில் ஒரு சிங்கமும், கரடியும் இருந்தன. அவை காட்டுக்குள் திரும்பிப் போக விரும்பின. ஆனால் கன காலமாக அவை முயற்சி செய்தும், போக முடியாமல் இருந்தன. ஒரு நாள் காவல்காரன் வெளியாலே சென்றார்.

சிங்கம், "நாங்கள் இப்போது போனால் தான் யாருக்கும் தெரியாது" என்று நினைத்து கரடிக்கு இதைச் சொன்னது. கரடி கொஞ்ச நேரம் யோசித்தது. "ஆனால் நாங்கள் தப்புவதற்கு ஒரு திட்டம் இன்னும் செய்யவில்லை. எப்படி நாங்கள் தப்பலாம்?" என்று கூறியது கரடி.




"எனக்கு தெரியும், நாங்கள் பக்கத்தில் இருக்கின்ற நரியைக் கேட்கலாம். ஆனால் நாங்கள் கவனமாக இருக்க வேண்டும். அவர் குள்ள நரி" என்று சிங்கம் சொன்னது.

நரி மிகவும் புத்திசாலி. அது கரடிக்கு சொன்னது, "எனக்கு எப்படி தப்புவது என்று தெரியும். ஆனால் நீங்கள் என்னுடைய நிபந்தனைகளை பின்பற்ற வேண்டும், முதலாவது, நீங்கள் என்னையும் கூட்டிக்கொண்டு போக வேண்டும். இரண்டாவது, நாங்கள் காட்டுக்குள்ளே வந்ததும் என்னை காட்டின் காவல்காரன் ஆக்க வேண்டும்." கரடியும் சிங்கமும் சம்மதித்தார்கள்.

"நாங்கள் கெதியாக போகவேண்டும். உங்களுடைய கதவுகளில் இருக்கின்ற பூட்டுகளில் ஒரு ஓட்டை இருக்கின்றது. பூட்டுகளை திறப்பது மிகவும் இலகுவாக இருக்கும். உங்களுடைய நகத்தை ஓட்டைக்குள்ளே வைத்து, திருப்பி, திறக்க வேண்டும். பின்னர், வெளியே உள்ள பெரிய கதவுக்கு மேலே துள்ளி தப்பலாம்." அவ்வாறு தப்பி, சிங்மும், கரடியும், நரியும் திரும்பி காட்டுக்குள் சென்றன.

## நீதி: ஒற்றுமையே பலம்

☆ ☆ ☆


# WANTED

### CHEF "Specialty foods" (ASIAN/EUROPEAN)

### JOB OBJECTIVE

Reporting to the Manager/Operator, Chef oversees the complete Kitchen and restaurant. Focusing on food preparation and presentation as well as the Dining Room service, the Chef will ensure that all Residents experience the true Origin Dining experience according to our restaurant twist of European and Asian cuisine.

### JOB FUNCTION

- Responsible for the day to day supervision and cooking / preparation of menu items and specials.
- Responsible for planning ahead, and delegating to your team members in order to have adequate supplies and staffing in place.
- Keep and update all required records i.e. food purchases, reviews etc.
- Hiring of kitchen staffs, coaching and mentoring of kitchen team.
- Able to work without any supervision, overtime and any special events.

### JOB REQUIREMENTS

- Good working knowledge of European and Asian menu planning, cooking, food costing, yield calculation, and portion control.
- Minimum 1 year post apprenticeship experience.
- Able to maintain all records pertaining to food safety, purchasing, labour, and food cost control.

### SALARY

$35,000 per Yr/ Full Time/ Salary

**Location: JC's Pub and Eatery**
**6 Campbell St, Whitby, ON L1M 1A3.**
**Please send resume to: jcpubandeatery@gmail.com**



# யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# மைக்குறோவேவில் சூடாக்கிய நீரும் தாவரங்களும்


## மின்வலையில் வந்தவை - 9

பின்வருவது ஒரு மாணவியின் விஞ்ஞானக் காட்சிக்காகச் செய்யப்பட்ட செயல்திட்டம். வடிகட்டிய நீரை எடுத்து இருபாத்திரங்களில் ஊற்றி, ஒன்றைச் சூட்டடுப்பிலும் மற்றையதை மைக்குறோவேவிலும் வைத்துச் சூடாக்கினாள். பின்னர் இவை குளிர்ந்த பின் ஒரே மாதிரியான இரு தாவரங்களை எடுத்து ஒன்றை சூட்டடுப்பில் வைத்துச் சூடாக்கிய நீராலும் மற்றையதை மைக்குறோவேவில் சூடாக்கிய நீராலும் ஊற்றி அவதானித்தாள். அவள் கண்டது அவளை அதிர வைத்தது.

கீழுள்ள படங்கள் அதை நிரூபிக்கும்

ஒரு வாரத்தின் பின் தாவரங்களின் நிலை

படம் மைக்குறோவேவில் நீர்கொதித்து தூய்மையாக்கப்பட்ட நீர்




படம் - 2 1ஆம் நாள் - புதிய வளர்ப்பை அவதானிக்க கத்தரிக்கப்பட்ட தாவரங்கள்.





- துறையூரான் -

மைக்குறோவே நீர் / தூயநீர்

மைக்குறோவேவிலிருந்து வெளிவரும் கதிர்வீச்சினால் தாக்கம் ஏற்படுகிறது எனப் பொதுவாக மக்கள் நினைத்தனர். உண்மையில் உணவின் DNA க் கூறுகளை அது மாற்றி விடுவதால் எமது உடலால் அவ்வுணவை அடையாளமறிய முடியாது போகிறது. எனவே உடல் தன்னைப் பாதுகாப்பதற்காக அவ்வுணவைச் சுற்றிக் கொழுப்புக் கலங்களை உருவாக்குகிறது அல்லது சீக்கிரமாக வெளியேற்றி விடுகிறது.

மைக்குறோவேவில் பாலைச் சூடாக்கும் தாய்மாரை நினைத்துப் பாருங்கள். கனடாவில் ஒரு தாதி, நோயாளிக்கு ஏற்றப்படவிருந்த இரத்தத்தை மைக்குறோவேவில் சூடாக்கி ஏற்றி அவரைத் தன் செயலால் சாகடித்த விபரம் தெரியுமா உங்களுக்கு. மைக்குறோவேவ்




தயாரிப்பாளர் இவை மிகவும் பாதுகாப்பானவை எனக் கூறுகிறார்கள். இவற்றைப்பற்றிக் கவலைப்படாமல் பாவியுங்கள். உங்கள் வைத்தியரைக் கேட்டாலும் அவர் அவை பாதுகாப்பானவை என்றே கூறுவார்.




நீங்கள் பார்த்த இறக்குந் தாவரங்களின் படங்கள் என்ன சொல்கின்றன? தொடர்ந்தும் உணவை மைக்குறோவேவில் வைத்துச் சூடாக்கப் போகிறீர்களா? எமது மனோநிலையை மாற்ற வேண்டாமா? நீங்களும் வாழ்கிறீர்கள் என்பதை மறந்து விடாதீர்கள்?

தயாரித்தவர் - வில்லியம் P. கொப்
A.R.E.E. ஆய்வுச் செயலகம்
T061 - TRL0 /10 - 77F05


**விநியோக முதன்மை** - பகுப்பு Roula
உங்கள் மைக்குறோவேவை வீசுவதற்குப் பத்துக் காரணங்கள். இவை சுவிஸ், ரஷ்யா, ஜேர்மன் நாடுகளில் செய்யப்பட்ட ஆய்வுகளின் முடிவுகள். எமது சமயலறையில் இன்னும் மைக்குறோவேவ் களை வைத்திருப்பதை அலட்சியம் செய்யமுடியாது. ஆய்வுகளின் முடிவின் அடிப்படையில் பின்வரும் செய்திகளைக் கூறலாம்.

1. மைக்குறோவேவில் வைத்த உணவுகளைத் தொடர்ச்சியாக உண்பதால், மின்சாரத்தூண்டல்கள் மழுங்கடைந்து நிரந்தரமாக மூளை பாதிப்படையலாம். (மூளை இழையங்கள் (Tissues) மின்காந்தச் சக்தியை இழந்து போகலாம்)

2. மைக்குறோவேவ் உணவிலுள்ள அறியப்படாத விளைபொருட்களைப் பிரித்துச் சமிபாடடைய முடியாமல் எமது உடல் அவதிப்படுகிறது.

3. ஆண், பெண் ஓமோன்களின் உற்பத்தி நிரந்தரமாக நிறுத்தப்படுகிறது அல்லது தடைப்படுகிறது. இது மைக்குறோவேவ் உணவைத் தொடர்ச்சியாக உண்பதனால் ஏற்படுகின்றது.

4. மைக்குறோவேவின் தாக்கத்தால் ஏற்பட்ட விளைபொருட்கள் நிரந்தரமாக அல்லது நீண்டகாலத்துக்கு எமது உடலில் தங்கியிருக்கும்.




5. மைக்குறோவேவ் உணவிலுள்ள கனிப்பொருள்கள் விற்றமின்கள், போசாக்குப் பொருள்கள் குறைவடைவதால் அல்லது மாற்றமடைவதால் எமது உடலுக்குக் குறைவான அல்லது பயனேதும் ஏற்படுவதில்லை. மாற்றமடைந்த உணவை உட்கொண்டாலும் உடலால் அதை




சமிபாடடையச் செய்ய முடியாது போகிறது.

6. மைக்குறோவேவ் உணவிலுள்ள மரக்கறிகளின் கனிப்பொருள்களின், புற்றுநோய் எதிர்க்கும் மூலப்பொருள்கள் மாற்றமடைகின்றன.

7. மைக்குறோவேவ் உணவுகள் வயிற்றிலும் குடலிலும் புற்றுநோய்க் கட்டிகளை உண்டாக்குகின்றன. வடஅமெரிக்காவில் பெருங்குடல் புற்றுநோய் வீதம் அதிகரித்துக் காணப்படுவதற்கு இதுவே காரணமாகும்.

8. எமது இரத்தத்தில் புற்றுநோய்க்கலங்கள் அதிகரிப்புக்கு மைக்குறோவேவ் உணவே காரணம்.

9. மைக்குறோவேவ் உணவைத் தொடர்ச்சியாக உண்பதால், நிணநீர்ச்சுரப்பி, இரத்த நிணநீர் ஆகியன மாற்றமடைந்து நீர்ப்பீடனத் தொகுதி பலமிழந்து போகிறது. நிர்ப்பீடனத்தொகுதியே நோய் எதிர்க்கும் சக்தியை எமது உடலுக்குக் கொடுக்கிறது.

10. மைக்குறோவேவ் உணவை உண்பவர்கள் ஞாபகசக்திக் குறைவு, மனத்தை ஒழுங்குபடுத்தல் (Concentration) உணர்ச்சித் தழும்பல், புத்திக்கூர்மை குறைதல் ஆகியவற்றால் அவதிப்படுவர்.

மைக்குறோவேவ் அடுப்பை இன்னும் எறியாமல் வைத்திருக்கிறீர்களா? இதை எறிந்து விட்டு அதற்குப் பதிலாக மின்சார அடுப்பை (Toaster Oven) பாவிக்கலாம். இது சிறப்பாகவும் பாதுகாப்பாகவும் வேலை செய்யும்.

மேலதிக விபரங்களுக்கு வலைத்தளம் www.healingdaily.com/microwave-ovens.htm

# குளிர்



தாய் மண்ணில் விழுந்தெழும்பி
துன்பங்களில் தோய்ந்து
தவித்து ஏங்கி நின்றபோது

கை தந்து வரவேற்ற நற்பூமி

தேடு
நீ வேலை தேடு என்று
சமூகநலப் பணம் தந்து
படிக்கச்சொன்னது தன் மொழியை

காலுக்குக் குளிர் காக்கும் சப்பாத்து
உடல் மூடும் மேல் அங்கி
கழுத்தைச் சுற்றத் துவாய்
வாங்கவெனக்
குளிர்கால மானியக் காசோலையும்
வந்து விழுந்தது தபாற்பெட்டிக்குள்

அடுத்த பனிக்காலம் நெருங்கும்போது
குடும்ப மருத்துவர் கூறிய அறிவுரை:

பத்து இறாத்தல் நிறை கூடிவிட்டது
வயிற்றில் கொழுப்புப் படியும் கவனம்
நாளாந்தம் நல்ல நடை போடு
இல்லையேல்
உன் உடல் எடை போடும்
எச்சரிக்கை.



முத்துராஜா




Tel: 416-750-1976 Web:www.niru.com e-mail: info@niru.com



# பொன்னர் - தம்பர்
## எழுதுவது கனகர்



தம்பர்: என்ன தம்பி இரண்டு வாரமாக உன்னைக் காணவில்லை. நானும் ஒரு விசயம் உன்னிடமிருந்து விளக்கம் கேட்கவேணும் எண்டு திரியாத் திரிஞ்சேன்.

பொன்னர்: அப்படி என்னண்ணை அவசரமான விசயம்.

தம்பர்: தம்பி ஒரு விசயம் பற்றித் தெரிய வேணும் எண்டு வந்தால் மனதிலை அதற்கு விடை காணும்வரை ஒரு கிளர்ச்சி இருந்து கொண்டிருக்கும் தானே.

பொன்னர்: அப்படி என்னண்ணை தலைபோகிற விசயம்.

தம்பர்: அப்படி ஒண்டும் அவசரமான காரியம் இல்லைத் தம்பி. மனதிலே குறுகுறு என்று ஒரு கிளர்ச்சி உம்மட்டைக் கேட்டால் தான் தெளிவாகும் என்பதால் தான் உன்னைத் தேடிக் கொண்டிருந்தேன்.

பொன்னர்: அதுதான் அண்ணை என்னத்தைப் பற்றி எண்டு கேக்கிறேன்.

தம்பர்: தம்பி இந்தப் பரம்பரை நோய் (Hereditary Disease) எண்டு அடிபடுகிறதே. அதைப்பற்றித்தான் கேட்க வேண்டும் எண்டு நினைத்தேன். இந்த மாலைக்கண் (Night blindness), குருதி உறையாமை (Hemophilia) எல்லாம் ஆண்களில் தான் வரும் என்றும் அவை இலிங்கம் இணைந்த இயல்புகள் (Sex Linked diseases) என்றும் சொல்வார்கள்.

பொன்னர்: அவை எல்லாம் நோய்கள் இல்லை அண்ணை. அவை வெறும் குறைபாடுகள்.

தம்பர்: குறைபாடுகள் என்றால் அவற்றிற்குச் சுலபமான நிவர்த்தி உண்டுதானே தம்பி.

பொன்னர்: ஆமாம் அண்ணை. பரம்பரை நோய்களுக்கான காரணி இலிங்க நிறமூர்த்தம் என்பார்கள் அண்ணை.

தம்பர்: அதென்ன தம்பி இலிங்க நிறமூர்த்தம். அது ஏன் தம்பி ஆண்களுக்குப் பாரபட்சம் காட்டுகிறது.


பொன்னர்: அது அண்ணை படைச்சவனைத்தான் கேட்கவேண்டும். உயிரினங்களிலே காணப்படுகின்ற நிறமூர்த்தங்களை இரண்டு வகையாக வகுக்கிறார்கள். அவற்றினைத் தன்மூர்த்தம் எனவும் இலிங்கநிறமூர்த்தம் அல்லது அயன்மூர்த்தம் எனவும் வகுத்துள்ளார்கள்.

தம்பர்: அது எனக்கும் தெரியும் தம்பி. நான் என்ன முசுடா? தன்மூர்த்தங்களிலே உள்ள பரம்பரை அலகுகள் தான் சாதாரண உடல் இயல்புகளைத் தீர்மானிக்கின்றன. அயன் மூர்த்தங்கள் இலிங்கத் தீர்வை அதாவது பிறக்கப் போகும் பிள்ளை ஆணா பெண்ணா என்பதைத் தீர்மானிக்கின்றன. என்ன நான் சொன்னது சரிதானே தம்பி.

பொன்னர்: அண்ணை! சக்கை வாங்கு வாங்குகிறீர்களே அண்ணை.

தம்பர்: இன்னும் கொஞ்சம் எனக்குத் தெரியும் தம்பி. இந்த அயன்மூர்த்தங்கள் எண்ணிக்கையில் இரண்டு (XX). ஆனால் ஆண்களில் ஒன்றுதான் முழுமையானது. மற்றது (Y) பெயரளவுக்கே அல்லாமல் சிதைந்ததாகவும் ஒன்றுக்கும் உதவாததாகவும் உள்ளது. நான் கேட்கிறது என்ன எண்டால் இது ஏன் இப்படி?

பொன்னர்: என்னண்ணை இப்படி அதைக் கேவலமாகச் சொல்லுறீங்கள். அது இல்லா விட்டால் நானும் நீங்களும் ஆண்பிள்ளைகள் என்று சொல்லிக் கொண்டிருப்போமா அண்ணை. சத்தியமா அண்ணை அது ஏன் அப்படி வந்தது எண்டு எனக்குத் தெரியாது. ஆனால் நம்மவர்கள் பெண் பிள்ளை பிறந்தால் ஆண்டவன் கொடுத்தார் என்று சொல்வதில் அர்த்தம் உண்டு அண்ணை.




தம்பர்: என்ன தம்பி இது புதுக்கதை. அதுவும் உன்ரை வாயாலை?

பொன்னர்: அண்ணை உங்களுக்குத் தெரிந்தது தானே. விந்து அல்லது முட்டை உருவாகும் பொழுது ஒடுங்கற்பிரிவு நடைபெறுவது உண்டு எனவும் அப்போது ஆணின் இலிங்க நிறமூர்த்தங்களில் X ஒரு விந்துவுக்கும் Y மற்றயை விந்துக்கும் செல்லும் அதே சமயம் பெண்ணிலே இரண்டு முட்டைகளும் ஒரு X ஐக் கொண்டதாகவே இருக்கும். இதெல்லாம் உங்களுக்குத் தெரிந்தது தானே.

தம்பர்: அது சரி தம்பி. அதென்ன ஆண்டவன் கொடுத்தது என்ற கதை அளக்கிறாய்.

பொன்னர்: அண்ணை பெண்ணினது முட்டையில் ஒவ்வொன்றிலும் X அயன் மூர்த்தம் இருக்கிறது. ஆணோ எண்டால் இரண்டு வகை விந்துவை உருவாக்கி உள்ளது. X அயன்மூர்த்தத்தைக் கொண்டது பெண்ணை உருவாக்கும் விந்து Y அயன்மூர்த்தத்தினைக் கொண்டது ஆணினை உருவாக்கும் விந்து. இந்த இரண்டில் ஒன்றுதான் முட்டையைக் கருக்கட்டலாம். ஆணினை உருவாக்கும் விந்து முட்டையைக் கருக்கட்டினால் ஆண் குழந்தையும் பெண்ணினை உருவாக்கும் விந்து முட்டையைக் கருக்கட்டினால் பெண்குழந்தையும் தோன்றும். எது முட்டையைக் கருக்கட்டுவது என்பதை யார் தீர்மானிப்பது. ஆகவே பழியினை ஆண்டவன் மேல்போட்டு விடலாம் தானே.

தம்பர்: ஓ அப்பிடி வருகிறாயா நீ.

பொன்னர்: அண்ணை இப்போ உங்களுடைய கேள்விக்கு வருவோம். அதாவது இந்த அயன்மூர்த்தங்கள் இலிங்கத் தீர்வைக்குக் காரணமென்றாலும் அவையும் சில பரம்பரை அலகுகளைக் கொண்டுள்ளன.

தம்பர்: அதுதானே தம்பி போதிய அளவு தன்மூர்த்தங்கள் (21 சோடி) உள்ளனவே. அவைதானே உடல் இயல்புகளுக்கான பரம்பரை அலகுகளைக் கொண்டுள்ளன.

பொன்னர்: உண்மைதான் அண்ணை. ஆனால் இவையும் நிறமூர்த்தங்கள் தானே அண்ணை. ஆகவே அவற்றிலும் ஏதோ சில பரம்பரை அலகுகள் இருக்கவே செய்கின்றன.அண்ணை உங்களுக்குத் தெரியுமா? ஒரு மனித கலத்திலே உள்ள பரம்பரை அலகுகள் எத்தனை தெரியுமா 31,000. இவை ஒவ்வொன்றும் ஏதோ ஒரு இயல்புக்குக் காரணமாகின்றன. ஒரு ஆச்சரியம் தெரியுமா. இந்தப் பெரிய மனிதனில் 31,000 ஆனால் ஒரு சிறிய பழ ஈயில் (fruit fly) அதாவது மனிதனிலும் பார்க்க எத்தனை ஆயிரம் மடங்கு சிறிய பழ ஈயில் எத்தனை பரம்பரை அலகு தெரியுமா 13,000. விந்தையான இயற்கை அண்ணை.

தம்பர்: தம்பி உன்னை விட்டால் கதை அளந்துகொண்டே போவாய். இப்போ அந்தப் பரம்பரை நோயினைப் பற்றிச் சொல்லப் போகிறாயா இல்லையா.

பொன்னர்: அண்ணை அது முன்னுரை இப்போ விசயத்துக்கு வருவோம். ஆணின் நிறமூர்த்தங்களிலும் சில பரம்பரை அலகுகள் உள்ளதாகச் சொன்னேன் அல்லவா. அப்பரம்பரை அலகுகள் நல்ல பிள்ளையாகப் பொதுவாக அமைவதால் அவை கடத்துகின்ற இயல்புகள் பற்றி எவரும் அறிந்து கொள்ள முடிவதில்லை.ஆனால் சில சமயங்களிலே அவை வம்புத்தனம் செய்து தாம் இருப்பதை உணர வைத்துவிடுகின்றன.

தம்பர்: அது எப்படித் தம்பி.

பொன்னர்: அந்தப்பரம்பரை அலகிலே சடுதியான ஒரு மாற்றம் ஏற்படுகிறது. அந்தமாற்றத்தினை விகாரம் (Mutation) என்போம். இந்த விகாரத்தின் விளைவாக புலப்படுகின்ற இயல்புகளிலே மாற்றங்கள் ஏற்படுவதைக் காண முடிகிறது.

தம்பர்: அது சரி தம்பி அயன்மூர்த்தம் ஆணிலும் உள்ளது பெண்ணிலும் உள்ளது. அது எப்படி இந்த மாற்றத்தால் தோன்றும் வியாதி ஆண்களிலே தான் காணப்படுகிறது.

பொன்னர்:அண்ணை ஆணிலே எத்தனை X நிறமூர்த்தம் உள்ளது.

தம்பர்: ஒன்று

பொன்னர்: பெண்ணிலே எத்தனை உள்ளது.

தம்பர்: இதென்ன கரகாட்டக்காரன் வாழைப்பழக்கணக்குப் போலக் கேட்கிறாய். இரண்டு.

பொன்னர்: ஆக அண்ணை ஆண்களில் ஒரு X நிறமூர்த்தம் உள்ளமையால் இந்த விகாரம் உடனே புலப்படும். பெண்களில் இரண்டிலும் ஏற்பட்டால் தானே புலப்பட முடியும்?

தம்பர்: அப்போ பெண்ணுக்கு அந்த நோய் வரமாட்டாதா?

பொன்னர்: ஆம் அண்ணை பெண்ணில் ஒரு அயன் மூர்த்தத்தில் இருக்கும். இரண்டிலும் இருந்தால் தானே நோய் புலப்படும். ஆகவே பெண்ணில் நோய் புலப்படாது. ஆனால் அந்த பாதிக்கப் பட்ட நிறமூர்த்தம் அடுத்த தலைமுறையில் தாயிலிருந்து மகனுக்கப் போக அவருக்கு அந்த வருத்தம் ஏற்படும். ஆகவே பெண்ணைக் காவி (Carrier) என்பார்கள்.

தம்பர்: அப்படி என்றால் பெண்களுக்கு அந்த நோய் வரவே மாட்டாதா? காவியா அல்லது பாவியா? தம்பி

பொன்னர்: ஏன் அண்ணை பெண்களில் அத்தனை கோபம். அவர்களுக்கும் வரும் அண்ணை ஒரு காவிப் பெண்பரம்பரை நோயுடைய ஆணினைத் திருமணம் செய்தால் அந்நோய் பிறக்கப் போகும் பெண் குழந்தைக்கு வரும் வாய்ப்பு உண்டு அண்ணை.

தம்பர்: காக்க காக்க கனகவேல் காக்க. தம்பி நீ ஏற்கெனவே சொன்னாய் இந்த இலிங்கமிணைந்த நோய்கள் வெறும் குறைபாடுகள் தான் என்றும் அவற்றினை நிவர்த்திக்கலாம் என்றும் சொன்னாய் அல்லவா. அதைப்பற்றிச் சொல்லு பார்க்கலாம்.

பொன்னர்: ஆம் அண்ணை சொன்னேன். பொதுவாக மாலைக் கண், நிறக்குருடு, குருதி உறையாமை மற்றும் தசைச் சிதைவு (Muscular Dystrophy) ஆகியவை இலிங்கமிணைந்த நோய்களில் முக்கியமானவை.

தம்பர்: இவற்றினை எப்படித் தம்பி நிவர்த்திப்பது.

பொன்னர்: குருதி உறையாமை என்பது

தொடர்ச்சி 32ம் பக்கம்

# 2011 ஒஸ்கார் Foreign Language Films

இவ்விதழில் ஒஸ்காரின் பிறமொழிப் படங்களின் இறுதிப்பட்டியலில் உள்ள படங்களைப் பார்ப்போம். ஒஸ்கார் ஆங்கிலப் படங்களுக்குரிய விருதுகள் வழங்கப்படும் நிகழ்வாகும். ஆங்கிலம் தவிர்ந்த மொழிப்படங்கள் Foreign Language Film விருதையே பெறும். தொழில்நுட்ப விருதுகளும் ஆங்கிலப் படங்களுக்கே வழங்கப்படும். விதிவிலக்குகளும் உள்ளன. காந்தி உட்பட பல படங்கள் ஆங்கிலத்திலேயே எடுக்கப்பட்டுள்ளன. சாரு நிவேதிதா உட்பட்ட பல ஊடகவியலாளர்கள் தமிழ்ப் படங்களுக்கு ஒஸ்கார் விருது கிடைக்கும் என கூறிவருகின்றார்கள். முதலில் தமிழ்ப் படங்கள் இந்தியாவைத் தாண்ட வேண்டும். பிறமொழிப் படங்களுக்கான விருதுக்கு ஒரு நாட்டில் இருந்து ஒரு படமே அனுப்பப்படலாம். தமிழுக்கு இருக்கும் ஒரேயொரு சந்தர்ப்பம் பிறமொழிப் படங்களுக்கான விருதே. தொழில்நுட்பவியலாளர்கள் ரகுமான் போல் ஆங்கிலப் படங்களில் கடமையாற்ற வேண்டும்

## 1. Dogtooth (கிறீஸ்)

வெளி உலகம் தெரியாமல் வளர்க்கப்படும் பிள்ளைகள் ஒரு பெரிய மாளிகையில் உயர்ந்த சுவர்களிடையே வளர்க்கப்படுகின்றனர். இந்த மாளிகையினுள் ஒரு நீச்சல் குளமும், தோட்டமும் உண்டு. வெளியாட்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. தந்தையின் காவலர் பெண் மாத்திரம் வந்து போவார். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சொற்களுக்கு அர்த்தங்கள் கற்பிக்கப்படுகின்றன. உதாரணமாக கடல் என்பது கதிரையாகவும் சோம்பி என்பது மஞ்சள் பூவாகவும் கற்பிக்கப்படுகின்றன. இவர்கள் தற்பொழுது மூவர். ஒரு ஆண் பிள்ளையும், இரண்டு பெண் பிள்ளையுமாக உள்ளனர். மற்றொரு பிள்ளை வீட்டு நடைமுறைகளை மீறியதற்காக வீட்டை விட்டு வெளியேற்றப்படுகின்றார். காவலர் பெண் ஆண் பிள்ளையின் பாலியல் தேவைகளை பூர்த்தி செய்ததற்காக சில பொருட்களை இவரிடமிருந்து பெறுகின்றார். பின்னர் மூத்த பெண்ணின் பாலியல் தேவைகளையும் பூர்த்தி செய்கின்றார். மூத்த பெண் இதில் திருப்தியடையாததால் சிறிய பெண்ணுடன் தனது தேவைகளுக்காக நாடுகின்றார். பெற்றோர் ஆண் பிள்ளையை வெளியில் திருமணம் செய்து கொடுக்காமல் சகோதரிகளில் ஒருவரை தேர்வு செய்யுமாறு கூறுகின்றனர். இப்பிள்ளைகள் இளைஞர்(ஞி)களான பின்பும் இது தொடர்கின்றது. 2008ம் ஆண்டு ஒஸ்ரியாவைச் சேர்ந்த Elisabeth Fritzl என்ற பெண்மணி கடந்த 24 வருடங்களாக வீட்டின் சுரங்க அறையில் பூட்டி வைக்கப்பட்டதாகவும், தனது தந்தைக்கும் தனக்கும் ஏழு பிள்ளைகள் பிறந்ததாகவும் பொலிஸாரிடம் குறிப்பிட்டிருந்தார். இந்த வீட்டில் வேறு பல பிள்ளைகள் 7 வயதிலிருந்து 20 வயது வரையிலானவர்கள் இருந்ததாகவும், இவர்களும் வெளி உலகம் தெரியாமல் வளர்க்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்திருந்தனர். இப்படத்தை பார்த்த போது இச் சம்பவமே நினைவுக்கு வந்தது. ரொரண்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட இப்படம் சுமார் 17 சர்வதேச திரைப்பட விருதுகளை பெற்றுள்ளது. இப்படத்தை அமெரிக்க விமர்சகர்கள் ஒரு பயங்கர படமாக வர்ணிக்கின்றனர். ஐரோப்பிய விமர்சகர்கள் ஒரு சமூக விமர்சனப்படமாக சுட்டிக் காட்டுகின்றனர். வன்னியில் முகாமில் உள்ள தமிழ் மக்களையும், எகிப்தில், ரியுனிசியாவில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து அண்மையில் மக்கள் புரட்சியை தோற்றுவித்த மக்களும் இச்சூழலிலேயே இருந்துள்ளனர். இப்படம் ஒருவகை absurdist cinema. அத்துடன் psychological யதார்த்த படமாகும்.

## 2. Outside the Law (Hors-la-loi) (அல்ஜீரியா)

1925 ல் பிரென்ச் அல்ஜீரியாவை ஆண்டபோது ஒரு குடும்பத்தை அவர்களது மண்ணில் இருந்து வெளியேற்றுகின்றார்கள்.



இக் குடும்பத்தில் மூன்று சகோதரர்கள். மூத்தவர் Abdelkader (Sami Bouajila) பிரான்சில் சிறையில் இருந்து வெளியேறிய பின்னர்; (FLN) அல்ஜீரிய விடுதலைப் போரில் தீவிரம் காட்டுகின்றார். இவரை ஒரு academic political activist என குறிப்பிடலாம். இரண்டாவது சகோதரர் Messaoud (Roschdy Zem) பிரென்ச் இராணுவ வீரராக இந்தோசீனாவில் போரில் கடமையாற்றுகின்றார். போரின் பின்னர் அல்ஜீரிய விடுதலைப் போராட்டத்திற்கு தன்னாலான பங்கையளிக்கின்றார். மூன்றாவது சகோதரர் வித்தியாசமானவர் குத்துச்சண்டை நிகழ்ச்சிகள் ஏற்பாட்டாளராக கடமையாற்றுகின்றார். வேண்டா வெறுப்பாக அரசியலுக்கு வருகின்றார். 1962 ல் அல்ஜீரிய விடுதலைப் போரின் வெற்றியுடன் படம் முடிவடைகின்றது. இப்படம் மிகவும் விரிவாகவும் கொடூரத்துடனும் பிரென்ச் படைகளின் காட்டுமிராண்டித்தனத்தை படம் பிடித்துள்ளனர். திரைச் சீலையின் பின்னணியில் நடைபெற்ற பல அரசியல் சம்பவங்களையும் இப்படம் விட்டுவைக்கவில்லை. அல்ஜீரிய விடுதலை இயக்கங்களின் உட்கட்சி பூசல், பிரென்ச் இராணுவத்தின் போர் உத்திகள் போன்ற விடயங்களும் காட்டப்படுகின்றன. இப்படத்தின் இயக்குனர் Rachid Bouchareb இவர் பல பிரசித்தி பெற்ற உலக திரைப்படங்களின் இயக்குனர். Little Senegal, London River போன்றவை குறிப்பிடத்தக்கவை. இவை தவிர Days of Glory, Buffalo Boy போன்ற பல படங்களின்

தூறல்

வானரன்

தயாரிப்பாளர்.

## 3. Incendies (கனடா)

இப்படத்தை கியுபெக்கைச் சேர்ந்த Denis Villeneuve. இயக்கியுள்ளார். லெபானிய-கனடியர் Wajdi Mouawad இன் நாடகத்தை மையமாகக் கொண்டது. இறந்து போன தாயின் உயிலை வாசித்த போது அதிர்ச்சியடைகின்றனர் பிள்ளைகள். இவர்கள் இரட்டையர்கள் Jeanne and Simon Marwan. தாய் Nawal Marwan இன் ஆசையை சகோதரன் சிமன் நிராகரிக்கின்றான். அம்மாவுக்கு விசர். அது தான் இப்படி எழுதி வைத்துவிட்டு சென்றுள்ளா என கூறுகின்றான். சகோதரி Jeanne தாயின் ஆசையை நிறைவேற்ற விரும்புகின்றார். தனது இறந்து விட்டதாக நினைக்கும் தந்தையையும் முன்பின் பாத்திராத சகோதரனைத் தேடியும் மத்திய கிழக்கிற்கு செல்கின்றார். அங்கு கிடைத்த தகவல்களை பகிர்ந்து கொள்ள சகோதரனை அழைக்கின்றார். படம் ஒரு குறிப்பிட்ட இடத்தையும் குறிப்பிடாவிட்டாலும் லெபனான் என்பது தெளிவாகத் தெரிகின்றது. தாய் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் வளர்கின்றார். தாயின் காதலன் ஒரு முஸ்லீம். அவரை தாயின் சொந்தங்கள் கொன்று விடுகின்றனர். தாயையும் கொலை செய்ய முனைகின்றனர். இவ்வாறு பல அதிர்ச்சி சம்பவங்களை படம் வெளிப்படுத்துகின்றது. இப்படத்தின் இயக்குனர் டெனசினது படங்கள் "Un 32 aout sur terre" (in 1989), Maelstrom (2000), and "Polytechnique" (2009), which won nine Genie Awards (the Candian Oscars).

## 4. In a Better World (டென் மார்க்)

Anton (Mikael Persbrandt) ஒரு

தொடர்ச்சி 39ஆம் பக்கம்

APARTMENTS FOR RENT



$250 Move In Bonus

Best Building in Scarborough!
Clean, family building, FREE parking.
Close to schools, bus stop, Tamil store in building.

Pl. Call: 416.264.2818

# அந்த இருண்ட நாள் ஞாபகம்!

1987 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21ஆம் நாள் தீபாவளி தினம் அன்று... அந்த நாள் எனக்கோர் மறக்க முடியாத இருண்ட நாள்.

சிலாபத்தில் உள்ள மாவட்ட தலைமை ஆஸ்பத்திரிச் சிற்றூழியர்களின் வேலை நிறுத்தத்தினால் சிலாபம் மாவட்ட அரச வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைப் பகுதி செயற்பட முடியாதிருந்தது. அதனால் புத்தளத்தில் வசித்த நாங்கள் யாழ். ஆஸ்பத்திரிக்கு விரைந்து செல்ல வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டது. எனது மனைவிக்கு மார்பில் சிறு கட்டி உருவாகியிருந்தமை தெரிய வந்து அதிர்ந்து போயிருந்தோம். புத்தளத்தில் உள்ள நன்கு பழகப்பட்ட வைத்தியரை அணுகினோம். 'இது வைத்திருக்க வேண்டிய வருத்தமில்லை. உடனடியாக வேண்டிய சிகிச்சையைச் செய்யும்படி' வைத்தியர் ஆலோசனை கூறினார். மனைவியினதும் எனதும் நெருங்கிய உறவினர் ஊரில் இருந்ததனால் மனைவிக்கும் தெம்பாக இருக்கும் என்ற காரணத்தினால் யாழ். ஆஸ்பத்திரியில் மனைவியை அனுமதித்தோம். அந்தக் காலத்தில் I.P.K.F. என்ற இந்திய அமைதிப்படை வடக்கு கிழக்கை ஆக்கிரமித்திருந்த காலம்.

**- த. பத்மநாதன் -**

மனைவியை பரீட்சித்த வைத்திய நிபுணர் உடனடியாகவே அறுவைச் சிகிச்சை செய்தார். பின்னர் மனைவியும் சுகமாகித் தேறிவந்ததனால் அவசர வேலை காரணமாக நான் மீண்டும் புத்தளம் திரும்பினேன். இரண்டு நாள் கூட கழியவ-'ல்லை மனைவியின் உடல்நிலையில் சிறு சிக்கல் ஏற்பட்டிருப்பதாக செய்தி கிடைத்தது. செய்தி கிடைத்ததும் பல தடங்கல்களுக்கு மத்தியிலும் யாழ். ஆஸ்பத்திரியை ஒருவாறாக வந்தடைந்தேன். அதற்கிடையில் மற்றுமொரு சிறு சத்திர சிகிச்சையையும் செய்து மனைவி அதிலிருந்து தேறிக்கொண்டிருந்தார். மனைவியைப் பார்க்க எனது மகள் ஒருவரும் அவருடனேயே உதவிக்கு தங்கியிருந்தார்.

நான் ஆஸ்பத்திரியை வந்து அடைந்த அன்று இரவே இந்தியபடைக்கும் விடுதலைப் போராட்ட இயக்கத்திற்கும் ஏற்பட்ட போர் உக்கிரமடைந்தது. இந்திய அமைதிப் படை யாழ். கோட்டையிலிருந்தும் போராளிகள் பேருந்து தரிப்பு நிலையத்திலிருந்தும் வைத்தியசாலையின் பின் வீதியிலுமாக இருந்தும் மாறி மாறி எறிகணைகளையும் தானியங்கித் துப்பாக்கிகளாலும் சுட்டுக் கொண்டிருந்தார்கள். ஆஸ்பத்திரிக்குள்ளும் எறிகணைகள் சில வீழ்ந்து வெடித்து நோயாளர்களையும் வைத்தியர்கள் ஊழியர்கள் நோயாளர்களின் பார்வையாளர்கள் யாவரையும் பயப் பிராந்திக்குள் மிரள வைத்திருந்தது. அடுத்த நாள் தீபாவளி. தீபாவளிக் கொண்டாட்டத்திற்கு கொழுத்தும் பட்டாசு வெடிகள் அடங்கி மாலை நான்கு மணி போல் பீரங்கிக் குண்டு மழை பொழியத் தொடங்கியது. கோட்டைக்குள் இருந்த இந்திய இராணுவத்தினர் யாழ். மணிக்கூட்டு கோபுர வீதிவழியாகப் புறப்பட்டு ஆஸ்பத்திரி பேருந்து நிலையப் பக்கம் சுட்டுக் கொண்டே வந்தார்கள். வழியில் எவர் வந்தாலும் சுட்டுக் கொண்டே முன்னேறி யாழ். ஆஸ்பத்திரிக்குள்ளும் நுழைந்து விட்டார்கள் சீருடை அணிந்திருந்த வைத்தியர்கள் தாதிமார்கள் அவர்களின் உதவியாளர்கள் இராணுவத்தினரை மிகவும் கெஞ்சி மன்றாடிப் பார்த்தார்கள். இந்தியப் படையின் கண்ணிற்கு சகலரும் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களாகவே பட்டார்கள். கண்மண் தெரியாமல் சுட்டார்கள். கண்ணில் பட்டவர்களை சுட்டுக்கொன்றார்கள். நான் இருந்த வெளி நோயாளர் பகுதியில் இச்சம்பவத்தில் சுமார் 68 அப்பாவிப் பொது மக்கள், நோயாளிகள், வைத்தியர்கள். தாதியர்கள், மற்றும் இதர ஊழியர்கள் என பல்வாறான தமிழ் மக்களும் இறந்ததாக பின்னர் அறிந்தேன்.

இதற்கிடையில் 12ம் 'வார்ட்டில்' இருந்த எனது மனைவியும் மகளும் தங்களை கட்டில் போர்வைகளால் போர்த்துக் கொண்டு கட்டிலின் கீழ் பதுங்கி இருந்தார்கள். உயிருடன் இருந்த நாங்களும் ஆஸ்பத்திரி ஊழியர்களும் x-ray எடுக்கும் 'உள் விறாந்தைப்' பக்கம் ஓடி டாக்டர்கள் இளைப்பாறும் இடத்தில் ஒளிந்து கொண்டோம். இந்தியப்படைகளோ எழுந்தமானமாக தேடித் தேடிச் சுட்டுக் கோண்டே வந்தார்கள். கதிரியக்க பகுதியில் இறந்த பலருள் ஒருவராக நானும் என்னுடன ஓடிவந்த ஒரு வைத்தியரும் விழுந்து இறந்த உடல்களோடு உடல்களாகப் படுத்து இறந்தவர்கள் போல பாசாங்கு செய்து கொண்டு கிடந்தோம். மாலை இருட்டிக் கொண்டு வந்தது. ஏற்கனவே வைத்திய சாலையில் மின்சாரம் இல்லாததினால் வெளிச்சம் இல்லை. இருட்டில் தெய்வங்களை வேண்டியபடியே இருந்தோம். எங்கள் பக்கத்தில் ஒரே வெடிச் சத்தம். இதைக் கேட்டு என்னைப் பற்றிய கவலையில் என் மனைவியும் மகளும் நடுங்கியபடி பிரார்த்தனையில் ஈடுபட்டவாறு இருந்தார்கள். இவர்கள் இருந்த 12ம் 'வார்ட்டில்' நடைபெற்ற வேட்டுச் சத்தம் என் காதில் கேட்டவாறே இருந்தது. 'அவர்களுக்கு என்ன நடந்ததோ?' என்று துடித்தபடியே நானும் இருந்தேன். அந்த நேரம் குற்றுயிரும் குலைஉயிருமாக எங்களுடன் கிடந்தவர் முனகிக் குரல் எழுப்பிய போது அதைக் கேட்டு அவ்விடத்திற்கு ஓடிவந்த இந்தியப் படையினர் இருட்டில் ஒரு குத்துமதிப்பில் மீண்டும் சுட்டுவிட்டுச் சென்றார்கள். இந்த வேதனையை அனுபவித்துக் கொண்டு மரணத்துடன் போராடிக் கொண்டிருந்த எங்கள் மனங்களும் விறைத்து எப்படி விடிந்தது என்று தெரியாது இருந்தோம்.

மறுநாள் விடிந்து காலை ஒன்பது பத்து மணிபோல் சசி என்ற பெண் மருத்துவர் படையின் உயர் அதிகாரிகளை அணுகி உண்மை நிலையை விவரித்தார். அதன் பின் சிறு ஒலிபரப்பி மூலம் உயிருடன் இருக்கும் யாவரையும் வெளியில் கையை உயர்த்திக் கொண்டு வரும்படி கட்டளையிட்டார்கள். அதன்படி வெளியில் வந்த எங்களை 22ம் 'வார்ட்' பக்கம் கூட்டிச் சென்று வட்டமாக இருக்கும்படி கட்டளையிட்டார்கள். எங்களைச் சுற்றி துப்பாக்கியை நீட்டியபடியே படையினர் நின்றனர்.

என் நிலையோ மனைவிக்கும் மகளுக்கும் 'என்ன நடந்ததோ?' என்று மனம் பதறி உடல் உதறியபடி இருந்தது. பின்னர் பத்தரைமணிபோல் அவர்கள் உக்கிரம் தணிந்தது போல் தென்பட்டவுடன் நான் மெதுவாக அருகில் நின்ற ஒரு சிப்பாயிடம் சென்று தள தளத்த குரலில் '12ம் 'வார்ட்'டில் உள்ள என் மனைவி மகளின் நிலையை அறிய முடியுமா?' என உதவி கோரினேன். அவன் தனது துப்பாக்கியை என் முதுகில் வைத்தவாறே அந்த 'வார்ட்' நோக்கி என்னை நடக்குமாறு 'ஜலோ ஜலோ' என ஏவியவாறு நடத்திச் சென்றான்.

எனது கண்கள் என் மனைவியையும் மகளையும் அங்கலாய்ப்போடு தேடியது. சற்றுத் தூரம் சென்று கொண்டிருக்கையில் தூரத்தில் வரிசைக்கிரமமாக 12ம் வார்ட்டில் இருந்தவர்கள் கொண்டு வரப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த வரிசையில் அவர்கள் இருவரையும் காணாது வேதனையால் என் நெஞ்சு அடைத்து படபடத்தது.

சற்று நேரம் கழியப் பார்த்தால் தூரத்தில் அவர்கள் முகங்கள் தெரிய மனம் ஆறுதலடைந்தது. மனைவியின் உடல் நிலை தளர்ந்து இருந்ததனால் வரிசையில் வந்தவர்களின் நடையுடன் ஈடுகொடுக்க முடியாது மகளின் கைதாங்கலோடு வரிசையின் பின்னால் மெது மெதுவாக வந்து கொண்டிருந்தார். என்னை இரத்தம் தோய்ந்த உடையுடன் நிற்பதைக் கண்டு இருவரும் வாய்விட்டலறி அழுதுகொண்டு சற்று வேகமாக என்னை நோக்கி வந்தார்கள்.

நான் உயிருடன் இருந்தமை அவர்களுக்கு சற்று ஆறுதல் தந்தாலும் எனது உடை முழுவதும் இறந்தவர்களுடன் கிடந்ததனால் தோய்ந்திருந்த இரத்தம் அவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. எனக்கு ஏதோ காயம் பட்டுவிட்டதோ என்ற ஆதங்கம் அவர்களை அழவைத்தது. நல்லவேளை, இறை செயலால் எனக்கு எதுவித காயமும் ஏற்படவில்லை. மற்றவர்களின் இரத்தமே என்மீது தோய்ந்திருந்தது என்பதை விளக்கிக் கூறியபின் தான் சற்று தணிந்தார்கள்.

'இரவு முழுவதும் நாங்கள் இருவரும் உங்களுக்காக சாய்பாபாவை பிரார்த்தித்துக் கொண்டே இருந்ததினால் தான் உங்களை மீண்டும் உயிருடன் காணமுடிந்தது' என ஆனந்தக் கண்ணீர் மல்க கூறினார்கள். அதுவரை காலமும் சாயிபகவான் மீது நம்பிக்கை இல்லாதிருந்த எனக்கு அன்று முதல் சாயிபக்தனாக நான் மாறுவதற்கு இந்த அற்புதச் செயலே காரணமாயிற்று.

இப்படியே 26 நாட்கள் மூவரும் ஆஸ்பத்திரியில் கழித்தோம். பின் யாழ். அரசாங்க அதிபரின் முயற்சியினால் வெளிமாவட்டத்தில் வேலை பார்க்கும் அரசாங்க ஊழியர்களுக்கு போக்குவரத்து வசதிகளுக்காக மூன்று பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டன. ஊரடங்குச் சட்டம் இருந்தபொழுதும் விசேட அனுமதியோடு செய்யப்பட்ட ஒழுங்கின்படி ஒரு மாத இடைவெளிக்குப் பின் புறப்பட்ட பேருந்தில் ஒருவாறாகப் புத்தளம் வந்து சேர்ந்தோம். அன்றிலிருந்து இன்றுவரை அந்த இருண்ட நாட்கள் என் நெஞ்சில் நிரந்தரமாக நிலைத்துவிட்டன. இன்றும் தீபாவளி வந்தால் அந்த இருண்ட நாட்களின் பயங்கரங்கள் என்னை உலுப்பி எடுக்கும்.

# பொன்னர்...

காயம் ஒன்று ஏற்பட்டால் குருதி தொடர்ந்து வெளியேறிக் கொண்டே இருக்கும். ஆனால் குருதி சாதாரணமாக ஒருவருக்கு வெளியேறும் வேகத்தில் தான் வெளியேறும். ஆனால் சாதாரணமான ஒருவருக்கு வெட்டுக்காயத்தில் குருதி உறைந்து அதனை அடைப்பதால் சிறிது நேரத்தின் பின்னர் குருதி வெளியேறமாட்டாது. இக்குறைபாடு உள்ளவருக்குக் குருதி உறைதலுக்கு வேண்டிய ∴பைபிறின் (fibrin) நார்கள் உருவாகாமையே காரணமாகின்றது. ஆகவே இந்த நோயுள்ளவர்கள் ADATE போன்ற குருதி உறைதலுக்குத் தேவையான மருந்துகளை எடுத்தால் இப்பிரச்சினையைத் தீர்க்கமுடியும் என்கிறார்கள்.

தம்பர்: தம்பி மாலைக்கண் (Nyctalopia) நிறக்குருடு (Protonopia) போன்றவை அத்தனை பெரிய பாதிப்பினை ஏற்படுத்துவதில்லை என்பது தெரியும். அவைகேற்ற கண்ணாடிகள் போட்டு ஓரளவு இக்குறைபாடுகளை நிவர்த்திக்கலாம் என்பது தெரிந்ததே. ஆனால் தம்பி இந்தத் தசைச் சிதைவு கொஞ்சம் ஆபத்தானது போல் தெரிகிறதே அதைப்பற்றிச் சொல்லு பார்க்கலாம்.

பொன்னர்: அண்ணை நீங்கள் சொல்வது சரிதான். அதற்கு நிரந்தர தீர்வு என்பது கிடையாது. தசை இயக்கமே எமது உடலின் அசைவுகள் அத்தனைக்கும் காரணம். ஆகவே இந்தத் தசைச் சிதைவினால் உடலின் அத்தனை தொழிற்பாடுகளும் பாதிக்கப் படுவதைக் காணலாம் அண்ணை. சமநிலை பேணல், பேச்சு, சுவாசம், சிறுநீரப்பையின் தொழிற்பாடு, இதய இயக்கம் ஏன் முதுகு கூனல் என அத்தனையிலும் பாதிப்பினைக் காண முடியும். பேச்சு மருத்துவம் (speech therapy) உடல் அப்பியாசம் (Physical therapy) சர்க்கர நாற்காலி (Occupational therapy) போன்றவை சிறிது அனுகூலமாய் இருக்கும்.

தம்பர்: இவை எல்லாம் ஆண்களில் வருவது தான் அதிகம் என்கிறாய்.

பொன்னர்: அண்ணை மனிதனிலே 21 சோடி தன்மூர்தங்கள் உள்ளன. ஒரு சோடி அயன் மூர்த்தம். ஆகவே தன்மூர்தங்களும் பரம்பரை வியாதிகளுக்குக் காரணமானவை என்பதை உணர வேண்டும்.

தம்பர்: அப்போ எக்கச் சக்கமாக இருக்குமோ.

பொன்னர்: ஆம் அண்ணை. அண்ணை இன்னும் பரம்பரை வியாதிகள் மூன்று வகை உள்ளன. இப்போ நான் கவிஞர் கந்தவனத்தின் நூல் வெளியீடு ஒன்றுக்குப் போக வேண்டியிருக்கு. அந்த நோய்கள் பற்றி இன்னொரு சமயம் பேசுவோம் அண்ணை.

# இன்னொரு... ஆச்சி வீடு

**பாகம் - 3**
**பகுதி 14**

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே

## கனடவில் இனியன்

ஆச்சி வீடு எரிகையில் வீட்டினுள் இன்பன் இல்லை என்று காவலர்கள் உறுதியாகக் கூறியபோது எப்படியும் இன்பன் கிடைத்து விடுவான் என நம்பினார்கள், நாயகம் தம்பதி. அவ்வளவுக்கு அவர்கள் வச்சிரவேலுவினதும் நல்லைநாதனினதும் திறமையில் நம்பிக்கை வைத்திருந்தார்கள். நாட்கள் செல்லச் செல்ல, அந்த நம்பிக்கையானது குறைந்து கொண்டே போய் ஈற்றில் இல்லாமலே போய்விட்டது. இனியனைக் கவனமாக வளர்க்கத் தொடங்கினார்கள். வாழ்க்கையில் அவ்வளவாக ஈடுபாடு இல்லாதபோதிலும் இனியனுக்காக வாழத் தொடங்கினார்கள். ஆனாலும் அவர்களது வாழ்க்கையில் வளம் பெருகத் தொடங்கியது. வேண்டா வெறுப்போடு, கரிசனை ஏதுமில்லாமற் செய்த தொழில்கள், முதலீடுகள் கூடக் கொள்ளை வருமானங்களைக் கொடுக்க, ஊரிலேயே பெரும் பணக்காரர் ஆயினர் நாயகம் திலகம் தம்பதியினர்.

**◊ சி.வி. நாதன் ◊**

இராமலிங்கம் இன்னமும் தமக்கையுடன்தான், அவளுக்கு ஆதரவாக இருந்தான். அன்று இராமலிங்கம் மட்டும் இனியனை தன்னுடன் அழைத்துச் சென்றிராதுவிடில் அடிக்கடி யோசித்துப் பார்ப்பாள். அதனால் தம்பியின் மீது பிடிப்பு இன்னமும் அதிகமாகியது. இராமலிங்கத்திற்கும் திருமணமாகி: மூன்று பிள்ளைகள். இரண்டு ஆண்கள், மூத்தவர்கள். மூன்றாவது மகள்.

நீலகண்டரின் கணிப்பைப் பற்றி அடிக்கடி இராமலிங்கம் நினைத்துக் கொள்வான். ஒரு தடவை இனியனின் குறிப்பை நீலகண்டரைக் கொண்டு முழுமையாக எழுதிப் பார்ப்போமா? எனத் தமக்கையாரைக் கேட்க, நாயகம் முற்றாகவே மறுத்து விட்டார். நல்லது நடந்தாலும் நடக்கட்டும், கெட்டது வந்தாலும் வரட்டும். உந்த வேலை ஒண்டும் செய்யாதை என உறுதியாகக் கூறிவிட்டார். அதன் பின்னராக இராமலிங்கம் அது பற்றிக் கதைப்பது இல்லை. தனது குழந்தை களுக்கும் குறிப்பு ஏதும் பார்க்கவில்லை.

நீலகண்ட கணியருக்கும் நடந்தது எல்லாமுமே தெரியும். அவரைப் பொறுத்த வரையில் அவரின் கணிப்பின்படிதான் எல்லாமுமே நடக்கின்றது என்ற முழு நம்பிக்கை. இன்பன் இவ்வுலகில் இல்லை என்றே உறுதியாகக் கருதினார், கூறினார். இனியனைப் பற்றிய முழு விபரங்களும் அவரிடம் இருந்தபடியால் இனியனின் குறிப்பினை எழுதி முடித்திருந்தார். இனியனின் வாழ்க்கை முழுவதிலும் நடக்கக் கூடிய முக்கியமான விடயங்களைக் கணித்து எழுதியிருந்தார். என்ன படிப்பு, என்ன வேலை, எப்போது திருமணம் நிகழும், எத்தனை பிள்ளைகள், வாழ்க்கையில் முன்னேற்றமான காலங்கள், இழப்புக்களைச் சந்திக்க வேண்டியகாலங்கள். சிக்கலான காலங்களில் என்னென்ன பரிகாரங்கள் செய்யவேண்டும் போன்ற விபரங்களை எழுதியிருந்தார். மிகவும் கவனமாகவும், ஈடுபாட்டுடனும் இனியனின் குறிப்பினை எழுதினாலும் இராமலிங்கம் இன்னமும் வந்து எடுக்கவில்லை. இராமலிங்கத்தின் வீட்டிற்குக் கொண்டு போய்க் கொடுக்கலாமென்றாலும் அவரின் தன்மானம் இடம் தரவில்லை.

ஒருதடவை வழித்தெருவில் இராமலிங்கத்தைக் கண்ட நீலகண்டர் அவனிடம் இனியனின் குறிப்பை வந்து எடுக்கும்படி கேட்க, இராமலிங்கம் தனது அக்காளினதும் அத்தானினதும் முடிவைக் கூறினான். அத்துடன் நீலகண்டரும் அக்குறிப்புப் பற்றிய விடயத்தை மறந்து விட்டார்.

காலம் ஓடிக் கொண்டே இருந்தது.
நாயகம் தனது மனத்துயரை மனதுக்குள்ளேயே அமுக்கி மூடிவிட்டார். எத்தனையோ இரவுகள் அவருக்கு இன்பனால் சிவராத்திரிகள் ஆயின. திலகம் ஆரம்ப நாட்களில் இன்பனை நினைத்து நினைத்து அடிக்கடி பிதற்றிக் கொள்வாள். நாகராசனுக்கு இடாத சாபங்களே இல்லை எனலாம். இனியன் வளர்ந்து கொண்டுவர, எல்லாவற்றையும் மனதுக்குள்ளேயே மூடிக் கொண்டாள். பொருளாதாரத்திலோ அல்லது உடல் ஆரோக்கியத்திலோ எதுவித குறையுமின்றி அவர்களது வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது.

இனியன்,
படிப்பில், விளையாட்டில் நல்ல கெட்டிக்காரன். பெற்றோருக்குச் செல்லப் பிள்ளையாயினும் பழக்க வழக்கங்களில் வழுவாது, நல்லவனாகவே வளர்ந்து வந்தான். இன்பனின் நினைவுகள் அடிக்கடி, அதுவும் தனிமையில் இருக்கும்போது வரும். அந்நேரங்களில் இடது கையைக் கொஞ்சம் அசைத்து, வலது கையால் இடது பக்கத்தில் இருக்கும் அறுவை சிகிச்சைத் தழும்பினைத் தடவிக் கொள்வான். அப்போதெல்லாம் அவன் கண்கள் பனிக்கும். ஏதோ இன்பனைத் தடவிக் கொள்வது போல் எண்ணிக் கொள்வான்.

நாட்கள் செல்லச் செல்ல, இனியன் வளர்ந்து கொண்டு போக, கூடவே அவனுடம்பில் இருந்த, இன்பனுக்கான தழும்பும் வளர்ந்து கொண்டே போனது.

- இன்னமும் வரும்




# ஓம் முத்துமாரி அம்மன் ஜோதிடம்
## பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்







இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பிரபல ஜோதிட வல்லுனர்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்
மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், சுவிஸ், நியுசிலாந்து, இலங்கை, அமெரிக்கா,
லண்டன் ஆகிய இடங்களுக்குச் சென்று தற்போது முதல் முறையாக கனடா வந்துள்ளார்.

இவர் கைரேகை, சாதகம் ஆகியவை கொண்டு மிகத் துல்லியமாக நடந்தவை
நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள்கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி,
உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம்,
திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை,
வாஸ்துசாஸ்திரம், வதிவிடப் பிரச்சனைகள் வெளிநாட்டுப் பயணங்கள்,
எதிரிகள் கண்திருஸ்டி கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம்,
பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் ஒன்றுகூடுதல் இவற்றையெல்லாம்
அறிந்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

**Tel: 647-707-8671 / 416-829-4004**

5215 Finch Ave., East, Unit # 152 Scarborough, Ontario M1S 0C2 (GTA Square Mall )

Open 7 Days Time: 10:00 Am To 8:00 Pm He can tell you Tamil, Hindi,English, Telugu & Other indian languages

# பொருட்கள் எவற்றினால் ஆகியவை?


## குவாண்ரம் பிறந்த கதை நுண்ணுலகியல் 04

சென்ற தடவையில் மரத்துண்டு ஒன்று எரிகையில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் என்னவாக இருக்கும் எனக் கேட்டிருந்தேன். அதுபற்றி பிளேட்டோ, அரிஸ்ரோற்றில் ஆகியோரின் விளக்கத்தைக் பார்ப்போம். எரிகையில் மரத்துண்டில் உள்ள நீர் வெப்பத்தால் ஆவியாகி வெளியேறுகின்றது. மரத்துண்டில் இணைந்திருந்த தீ வெளிவர அது எரிகின்றது. காற்றோ புகையாக வெளியேற, சாம்பல் மண்ணின் கூறாக மிஞ்சுகின்றது. ஆக அம்மரத்துண்டில் இருப்பவை நீர், நெருப்பு, காற்று, மண் என்பது வெளிப்படை. இது போலவேதான் எல்லாப் பொருட்களும்

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### பேரண்டம் - 83

இந்த நான்கு மூலகங்களில் ஒன்றினையோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மூலகங்களையோ கொண்டிருக்கின்றன. மிக எளிமையானதும், சாதாரண மக்களும் விளங்கித் தெளிவுடக் கூடியதுமான இந்த விளக்கத்தினை பிளேட்டோ கூற, அது ஏற்றுக் கொள்ளப்பட்டது.



இந்த நீர், தீ, காற்று, நிலம் என்பவை தனித்தனி கூறுகளாக்கப்படக் கூடாதவை, தொடர்ச்சித் தன்மையானவை. எனவே எந்தப் பொருளை நாங்கள் சிறிய கூறுகளாக்கினும் அடிப்படையாக இருந்த மூலகங்கள் அதில் இருந்து கொண்டே இருக்கும். அதனால்தான் பொருட்களை எவ்வளவு சிறியவாக்கினாலும் அவற்றின் இயல்பு மாறாதிருக்கின்றது என்றார்கள். இந்த நாலு மூலகங்களினதும் அளவுகள் கூட எத்தனை எனக் கேட்காமல் எவ்வளவு என்ற அடிப்படையில்தான் பார்க்கப்படும். அதாவது பொருட்கள் எல்லாம் தொடர்ச்சித் தன்மை கொண்ட நான்கு மூலகங்களின் அடிப்படையிலேயே ஆனவை என்பது அவர்களது அசைக்க முடியாத நம்பிக்கை. பிளேட்டோவினது இந்தக் கருத்துக்கு எதிர்ப்பு இல்லாமலும் இல்லை. அவர்களது காலத்தில் வாழ்ந்த இலியுப்பஸ் (Leuupus) என்ற தத்துவஞானியும் குறிப்பாக அவரது மாணவரான டிமோக்கிரிரஸ் என்பவரும் (Democritus) நான்கு மூலகக் கொள்கை தவறாது எனக் கூறினார்கள். இவர்கள் நான்கு மூலகக் கொள்கைக்கு பதிலாக ஆச்சரியமான, அக்காலத்தில் ஏற்றுக் கொள்வதற்கும் விளங்கிக் கொள்வதற்கும் சிக்கலான இன்னொரு கருத்தினை முன் வைத்தார்கள். இவர்களும் கிரேக்கர்கள்தான். பொருட்களின் அடிப்படைக் கூறுகளுக்காக இவர்கள் முன் வைத்த கருத்து பொருட்கள் அணுக்களால் ஆனவை என்பதாகும். ஆம், அதுதான் அணுக் கொள்கை. அணுக் கொள்கையா? அது யோன் டால்ரன் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் கூறியதல்லவா என ஆச்சரியப்படுகின்றீர்களா? அது உண்மைதான். ஆனால் அணுக் கொள்கையை யோன் டால்ரனுக்கு முன் இரண்டாயிரத்து இருநூறு ஆண்டு முன்பதாக, முதன் முதலில் கூறியவர் டிமோக்கிறிரஸ் என்பதுதான் உண்மை. ஆனாலும் யோன் டால்ரன் அப்பெயரைப் பெற்றுக் கொண்டார். அது பற்றிய விபரத்தினை பின்னர் பார்ப்போம். இப்போது டிமோக்கிறிரஸ் தமது கருத்துக்குக் கொடுத்த விளக்கத்தினைப் பார்ப்போம்.

அரிஸ்ரோற்றில், பிளேட்டோ ஆகியோரின் மாத்துண்டையே இங்கேயும் எடுப்போம். இந்த மரத்துண்டினைச் சரிபாதியாக வெட்டி, அதில் ஒரு துண்டினை எடுப்போம். இப்போ, இந்தப் பாதித் துண்டினை மீண்டும் சரிபாதியாக துண்டாடி, அதன் ஒரு துண்டினை எடுத்துக் கொள்வோம். அதனையும் இப்ப உங்களுக்கு என்ன நடக்கின்றது என்பது புரியும் என நினைக்கின்றேன். இப்படியே பாதி, பாதியாக வெட்டிக் கொண்டே போனால் இறுதியில் இனி வெட்டித் துண்டாடவே முடியாத ஒரு துகள் வந்து சேரும். இப்படியான பல துகள்கள் சேர்ந்துதான் பொருட்கள் ஆகின, ஆகின்றன என டிமோக்கிரசிஸ் கூறினார். என்ன, இதுவும் ஏற்புடையதாக இருக்கின்றதா? இந்த மிகச் சிறிய கூறினை, துகளினை டிமோகிரசிஸ் அணு எனக் கூறினார். அதன்படியாக டிமோக்கிரசின் விளக்கத்தினைப் பார்ப்போம்.

பேரண்டத்தின் பொருட்கள் எல்லாம், அணுக்கள் என்கின்ற, கண்களுக்குத் தெரியாத, இனியும் கூறிடப்பட முடியாத, மிகச் சிறிய துகளினால் ஆனவை. டிமோக்கிரசிஸ் கிரேக்கத்தில் atomas எனக் குறிப்பிட்டு இருந்தார். அதுவே பிந்நாளில் ஆங்கிலத்தில் atom என ஆகியது. டிமோக்கிரசிஸ் இந்த அணுக்கள் பற்றி இன்னமும் பல ஆச்சரியமான விபரங்களைத் தந்தார். பொருட்கள் எல்லாம் பல்லாயிரக்கணக்கான அணுக்களினால் ஆனவை. இவ்வணுக்கள் கோளவடிவினதான உறுதியான திண்மங்கள். பொருள் ஒன்றில் உள்ள அணுக்களுக்கு இடையில் அணுக்களின் பருமனுடன் ஒப்பிடுகையில் பெரும் வெளியுள்ளது. வெவ்வேறு பொருட்கள் வெவ்வேறு அணுக்களினால் ஆனவை. வித்தியாசமான அணுக்கள் சேர்ந்து புதுப்புதுப் பொருட்களைத் தருகின்றன.

இன்னமும் பல விடயங்களை டிமோக்கிரசிஸ் கொடுத்தார். பேரண்டம் முழுவதிலும் உள்ள பொருட்கள் எல்லாவற்றிற்குமே இந்த அணுக் கொள்கையானது பொருந்தும். அரிஸ்ரோற்றில் கூறிய ஈதர் என்பதை முற்றாகவே டிமோக்கிரசிஸ் மறுத்தார். ஈதர் என எதுவும் இல்லை, வான்பொருட்கள் கூட அணுக்களினால்தான் ஆனவை எனக் கூறி அரிஸ்ரோற்றல், பிளோட்டோ போன்றவர்களின் பகையைச் சம்பாதிச்சுக் கொண்டார். தனது கூற்றுக்களுக்கு என்னென்ன ஆதாரங்களை வைத்தார் என்பது தெரியவில்லை. ஒருவேளை தற்காலத்தின் நவீன விஞ்ஞானிகளின் சிந்தனைப் பரிசோதனை (Though experiment) முறையில் இவற்றினை அறிந்து கொண்டாரோ?

அடுத்த தடவையில் மிகுதியைத் தொடருவோம்.



- கனி -
416.261.1348
kani1vimal@hotmail.com

**Sitham Sam Shanmugam** (Sales Rep)
HOMELIFE HIGHER STANDARDS
**HomeLife/GTA Realty Inc.**
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

your 2nd house is Investment property
1st house put down payment

Tenant (Rent) Pay the **Mortgage**
Scarborough , Mississauga

Senior Home in Richmondhill 12 Beds

Metal scrap yard for recycling and car sales with house office

Bungalow House with basement Apartment Markham /Sheppard

For students 2 + 1 **Condo.** in Toronto Near Univerisal of York $130,000

# மாயன் நாகரிகம் - பாகம் - 2

இன ஒழிப்பு இன்னமும் நடந்தேறிக் கொண்டிருக்கும் சமாச்சாரம் என்றே கூற வேண்டும். உண்மையில் ஒரு இனத்தைப் பூண்டோடு அழித்துவிடுவது என்பது சாத்தியமற்றது. மாயாக்கள் விசித்திர குணாதிசயங்கள் கொண்ட மனித இனம். தென் அமெரிக்க பகுதியில் வாழ்ந்த இவ்வினம் இப்போது இல்லை. மாயாக்கள் அழிக்கப்பட்டார்களா, அழிந்து போனார்களா அல்லது மறைந்து போனார்களா?

அவர்கள் அழிக்கப்பட்டிருக்கலாம் என்பதே பலரின் கருத்தாக இருக்கிறது. ஆரம்ப காலம் முதல் பல முறை ஸ்பெயின் நாட்டினர் அங்கு படையெடுத்து இருக்கிறார்கள். ஸ்பெயின் நாட்டின் படையெடுப்பின் போது அவர்களுக்கு மாயாக்களின் நுட்ப ஆய்வுகளை அறியும் ஆவல் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் மாயாக்களின் வாழ்வியல் முறை அவர்களுக்குப் பிடிக்காமல் இருந்திருக்கலாம்.

மாயாக்களிடம் கட்டிடக் கலை, கணித, சமய நுட்பங்கள் அபரிமிதமாகவே இருந்திருக்கின்றன. ஸ்பெயின் சிப்பாய்களிடம் போர் கருவிகள் அதிகமாக இருந்தன. மாயாக்களிடம் நவீன போர் கருவிகள் இருந்திருப்பதற்கான வாய்ப்புகள் சொற்பம். மாயாக்கள் வாழ்ந்த காடு, அவர்களின் கண்டுபிடிப்புகள் அனைத்தையும் கைப்பற்றுவதற்காக அவர்கள் அழிக்கப்பட்டிருக்க வேண்டும்.

மாயாக்களின் கண்டுபிடிப்புகள் பல. அவற்றில் குறிப்பிடத்தக்கது வான்கணித முறைகள். அவற்றின் அடிப்படையில் உருவானதே மாயாக்களின் நாட்காட்டி. மாயாக்களின் நாட்காட்டி இரகசியம் மிகுந்ததா? “இல்லை, அது விளங்காத ஒன்று” என்றே பலரும் சொல்வார்கள்.

புரியாத ஒன்றை வைத்து பல குளறுபடிகள் செய்கிறார்கள், கணிப்புகள் செய்கிறார்கள், இறுதியில் ஏதோ ஒரு முடிவு கட்டி இதுதான் அது என சொல்லிவிடுகிறார்கள், எல்லாம் பிசகு, பொய், புரட்டு நிறைந்து கிடக்கிறது, என சிலர் அவற்றை ஒதுக்கி வைத்துவிடுவார்கள். சில பழமை நிகழ்வுக்கான காரணங்களைக் கண்டறிவதும் ஒரு சுகம் தான்.

மாயாக்களின் நாள்காட்டியில் ஒரு விசித்திரத்தைக் கண்டார்கள் ஆய்வாளர்கள். அந்த நாள்காட்டி 21 டிசம்பர் 2012-ஆம் ஆண்டு நிறைவடைகிறது. கி.மு. 3113-ஆம் ஆண்டு அந்நாள்காட்டி தொடக்க ஆண்டாக அமைகிறது. இது முழுமை பெறாத நாள்காட்டியா? அல்லது மாயாக்களின் மாறுபட்ட கணிப்பு முறையில் கண்டறியப்பட்டவையா?



அது என்ன மாயாக்களின் கணக்கு? அவர்களின் கணித முறை இப்படி விரிகிறது. கின், உனியல், துன், கதுன், பக்துன், பிக்துன், கலப்துன்.

நாள் என்பதை அவர்கள் கின் எனக் குறிக்கிறார்கள்.

19 கின் (19 நாள்) = 1 உனியல்
359 நாள் = 1 துன்
7200 நாள் = 1 கதுன்
144 002 நாள் = 1 பக்துன்
1 872 025 நாள் = 13 பக்துன்
2 880 025 நாள் = 1 பிக்துன்
57 600 025 நாள் = 1 கலப்துன்

இந்த கணக்கியல் முறை இப்படி வியப்பளிப்பதாக இருக்கலாம். மாயாக்களின் நாள்காட்டி இயற்கை மாற்றங்கள் மற்றும் சீற்றங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. இவையாவும் இரு முக்கிய புத்தகங்களில் குறிக்கப்பட்டுள்ளன. அப்புத்தகங்கள் “கொடெக்ஸ்” என அழைக்கப்படுகிறது.



கொடெக்ஸ் பூமியை மட்டுமன்றி கோள் மாற்றங்களின் குறிப்புகளும் உள்ளடங்கியது. கொடெக்ஸ் வான் நிபுண மாயாக்களால் எழுதப்பட்டதாக அறியமுடிகிறது.

மாயா வகுப்பை சேர்ந்த வான் நிபுணர்கள் மாய மந்திர வேலைகளில் கைதேர்ந்தவர்கள். அப்படியானால் இந்நாள்காட்டியின் நம்பகத்தன்மை எவ்வகையது எனும் கேள்வி நம்முள் எழுவது சாத்தியமாகிறது. ஆரம்ப கால வாழ்க்கையில் மனிதன் ஏதோ ஒரு வகையில் இயற்கையை சார்ந்தே வாழ்ந்திருக்கிறான். ஆதலால் இயற்கையை போற்றும் வண்ணம் இம்மாதிரியான மாய மந்திர வேலைகள் ஏற்பட்டிருக்கலாம்.

கொடெக்ஸ், கணிதமும் சிறுசிறு சின்னங்களும் பொறிக்கப்பட்டிருக்கும் புத்தகம். அச்சிறுசிறு எழுத்து வகைகளை ஹிரோகிலிஃப் எழுத்துகள் என அறிகிறோம். அந்த எழுத்துகள் எப்படி அமைந்திருக்கின்றன? பூமியில் உள்ள மனிதன் ஆகாயத்தில் இருக்கும் உயிரினங்களோடு தொடர்பு கொள்வது போலும், அவர்களுடைய கடவுளர்களோடு பேசுவது போலவும் உள்ளன.

இந்நாள்காட்டி கி.மு. 20 செப்ரெம்பர் 3113-ஆம் திகதியில் தொடங்குகிறது. இக்காலகட்டம் மாயாக்களின் காலமென அழைக்கப்படுகிறது. அவர்களின் நம்பிக்கைப்படி இவ்வுலகம் புதுபிக்கப்படும். அப்படி புதுபிக்கப்படும் நாளானது மனித சரித்திரத்தில் முக்கிய நாளாக அமையும்.

கோள்களின் இட மாற்றமும் பூமியின் கால மாற்றமும் மனித வாழ்க்கையில் ஏற்படும் நன்மை தீமைகளுக்கு பாதிப்பை விளைவிக்கின்றன என்பது இவர்களின் கருத்தாகும். பூர்வகால எகிப்திய மக்களிடையேயும் இவ்வகை நம்பிக்கை இருப்பதை நாம் காண முடிகிறது. Asy Syi'ra நட்சத்திரம் நைல் நதியை கடக்கும் வேளையில் தீமைகள் விளையும் எனும் நம்பிக்கையை அவர்கள் கொண்டிருந்தார்கள்.

21 டிசம்பர் 2012 End of Times என சில ஆய்வாளர்களால் குறிப்பிடப்படுகிறது. இந்த End of Times எனும் சொல்லுக்கான விவாதங்கள் இன்னமும் மல்லுக்கட்டிக் கொண்டுதான் இருக்கின்றன. எடுத்த எடுப்பில் அதுதான் பூமியின் இறுதி நாள் என சொல்லிவிடுவோர் பலர் உண்டு. ஆனால் ஆய்வாளர்கள் மற்றும் அறிஞர்களின் பார்வையில் அச்சொற்களுக்கான ஆய்வுகள் ஆழமானவை. அவற்றில் வேடிக்கையான சில சேதிகளும் உண்டு.

பூமி சுற்றுவது நின்றுவிடும் (கால நேர மாற்றம் இருக்காது), உலகம் வெள்ளி நூற்றாண்டில் இருந்து தங்க நூற்றாண்டிற்கு மாற்றம் காண்கிறது, அதீதமான இயற்கைச் சீற்றம் ஏற்பட்டு உலகில் மாற்றங்கள் உருவாகும், உலகைக் காக்க கடவுளர் எழும் நாள், காலம் பின்நோக்கி நகரும், வேற்றுக் கிரக வாசிகளோடு தொடர்பு உண்டாகும் நாள்.

அத்திகதியை பற்றிய மேற்காணும் விடயங்கள் நகைப்புக்குரியவை. தமிழில் செலுத்தப்பட்ட சில ஆரிய கதைகளைப் போலவே மனிதர்களின் மனதில் மடத்தனத்தை உட்புகுத்துபவை.

**தொகுப்பு - கமலாகரன்**

இன்று எழுதப்படுபவனவற்றில் சில வேளைகளில் உண்மைகள் கேள்விக்குறியானதாக இருக்கிறது. 1999-ஆம் ஆண்டு முடிந்தவுடன் உலகத்தின் கதி முடிவடையும் என நாஸ்ட்ராடாமஸ் குறிப்பிட்டதாக ஒரு புத்தகத்தில் எழுதியுள்ளார்கள். ஆனால் இன்றோ ஆண்டு 2010 ஆகிவிட்டது. நாஸ்ட்ராடாமஸ் சொன்னது பொய்யா இல்லை புத்தகத்தில் எழுதிய விடயம் பொய்யா?

உலக சரித்திரத்தின் அடிப்படையில் மாயாக்கள் மாய மந்திர வேலைகளில் கைதேர்ந்தவர்கள் எனக் குறிப்பிடப்படுகிறது. திறமையான சிந்தனை வளத்தினால் அருமையான நாகரிகத்தை உருவாக்கி இருக்கிறார்கள். அதைப் போலவே அவர்களின் நாட்காட்டியும் முழுமையான நிலையில் கணிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

இந்த மாயாக்களின் ஒரு பிரிவினர் தென் மெக்சிக்கோவின் Guetmala, Belize மற்றும் Honduras போன்ற பகுதிகளில் வாழ்ந்திருப்பதாக குறிப்பிடப்படுகிறது. பூர்வகால கட்டிடங்களும், பிரமிட்டுகளும், மற்றும் கோவில்களும் இங்கு இருக்கிறன.

1517-ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டின் படையெடுப்பின் போது மாயாக்களின் கலை மற்றும் இதர தொழில்நுட்ப வேலைப்பாடுகள் பலவும் பரவலாக அழிந்து போனது. அவற்றில் முக்கியமாக மாயாக்களின் நூலகமும் அழிந்தது. அவ்வகையில் காண்போம் என்றால் இந்த நாட்காட்டியிலும் பிசகு ஏற்பட்டிருக்க வாய்ப்பு இருக்கிறது.

Dr. Jose Argulles ஓர் அமெரிக்கர். அவர் சரித்திர ஆய்வாளர். Zhou Yi எனும் சீனக் குடியினரின் கணக்கியல் முறையும் மாயாக்களின் கணக்கியல் முறையும் ஒத்துப் போகிறது என்பது இவரது கருத்தாகும்.

தொடர்ச்சி 37ம் பக்கம்

# விருது விருது Oscar விருது! - 2

ஆஸ்கார் விருது வழங்கும் நாள் அன்று, சிறந்த நடிக நடிகை விருதுகளுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளவர்கள் என்று சொல்லிவிட்டு ஒவ்வொருவர் பெயராக வாசிக்கப்படும் போது அவர்கள் நடிக்காமல் நானா, நானா என்று படும் அவஸ்தை ஒரு வகையில் பரிதாபகரமானது. அக்கணத்தில் கேமரா அவர்கள் முகம் பார்க்கும் போது, வெளிவரும் முடிவுகளுக்கு அவர்கள் நடிப்பதில்லையோ?

சில வேளைகளில் இதென்ன பெரிய விடயம், இந்த முறை இல்லையென்றால் இன்னொரு முறை இவர்களுக்குக் கிடைக்கப் போகிறது என்று நான் நினைப்பதுண்டு.

ஆனால் ஆஸ்கார், சிலர் விடயங்களில் அவர்களை ரொம்பவே அழ வைத்து விட்டுத்தான் விருது கொடுத்தது. பிரபல இயக்குனர் Martin Scorsese, Raging Bull, The Last Temptation of Christ, The Age of Innocence (Adapted Screenplay Award), Good Fellas, Gangs of New York, The Aviator போன்ற படங்களுக்காக நியமனம் செய்யப்பட்டார். ஆனால் ஒவ்வொரு முறையும் அவருக்குப் "படம்" காட்டியது ஆஸ்கார்!

கடைசியில் என்ன நினைத்தார்களோ, சிறந்த இயக்குனர் விருது "Departed" படத்துக்காக அவர் வாங்கினார், (திரும்ப வாங்கி விடுவார்களோ என்ற சந்தேகத்தோடு!)

**- கிறிஸ்ரி-**

சிறந்த நடிகை விருதை ஏறக்குறைய Natalie Portman (Black Swan) தான் கொத்திக் கொண்டு போவார் என்பது உறுதியாகி விட்டது. (Golden Globe விருது இவருக்குத்தான் கிடைத்திருக்கிறது) முடிந்தால் இந்தப் படத்தைத் திரையரங்கில் பாருங்கள். Ballet ஆட்டக்காரியாக(!?), தன் கலையில் முழுமையான கணம் காணத் துடிக்கும் இளம் பெண்ணாக "கதிகலங்க நடிக்கிறார்!

இவருக்கு நேரடிப் போட்டி Nicole Kidman. Rabbit Hole படத்தில் இவர் தன் இளம் மகனை கார் விபத்தில் இழந்த தாயாக மனதில் கனம் ஏற்றுகிறார்.

இழப்புகளைக் கடந்து வாழ வேண்டும் என்றால் அதன் முதல் படி, அதைத் தாண்டி வர வேண்டும். உயிரே வலிக்கும் அந்த முதல் படியை எப்படி அந்தத் தாய் தாண்டுகிறார் என்பதை வலிக்க வலிக்கச் சொல்லி இருக்கிறார் இயக்குனர் John



Cameron Mitchel. பல குடும்பங்களில் குழந்தைகளே கணவன் மனைவிக்கு இடையிலான அன்பின் பாலமாக இருக்கிறார்கள். அந்தப் பாதை சிதையும் போது தெறித்து விழும் உணர்ச்சிக் குவியல் தான் படம். The only way Out is through -இதுதான் படத்தின் tag line. இருபத்தியெட்டு நாட்களில் எடுத்து முடிக்கப்பட்ட கண்ணீர்க் காவியம் இது.

பிள்ளைச் செல்வங்களின் மரணங்களைச் சிலர் பகிர்ந்து கொள்கின்றனர், அப்போது ஒரு தாய்:
"என் குட்டி மகள் இறந்து விட்டாள், என்னால் தாங்க முடியவில்லை, கடவுளுக்கு ஒரு குட்டி தேவதை தேவைப்பட்டது போலும், அதுதான் அவளை எடுத்து விட்டார்.
அப்பிடிச் சொல்லித்தான் என்னைத் தேற்றிக் கொள்கிறேன்"

அந்தக் கூட்டத்தில் வெறித்த பார்வையுடன் இருக்கும் Nicole:
"ஏன்...ஏன் உன் மகள்... அவர் கடவுள்...அவருக்கு இன்னுமொரு குட்டித் தேவதையை உருவாக்க முடியாதா?" என்று கண்ணீருடனும் வெறுப்புடனும் சொல்லும் காட்சியில், அந்த உண்மை சுட மனம் அதிருகிறது!

துணை நடிகை விருது நியமனத்தில் காணப்படும் Jacki Weaver கவனிக்கப்பட வேண்டியவர். "Animal Kingdom" படத்தில் இவர் ஏற்று நடித்த கதாபாத்திரம் படு வித்தியாசமானது. அவர் பெற்ற ஆண் பிள்ளைகள் அனைவரும் குற்றச் செயல்கள் மூலம் வரும் வருவாயில் வாழ்ந்து வர, அவர்களை அதட்டி மிரட்டி அதிகாரம் செய்யும் "Gangster Mama"வாக பந்தா பண்ணியிருக்கிறார்! இதற்கிடையே அவர் மகள் போதை மருந்துப் பாவனையில் உயிரிழந்து விட, பதின்ம வயதுப் பேரன் பாட்டியுடன் வாழ வருகிறான். அவனை எப்படி அந்தக் குடும்பம் தங்கள் லாபத்துக்காக உபயோகிக்கிறார்கள் என்பது மீதிப் படம். அமைதியான சிரிப்போடும், குரூரமான உள்ளத்தோடும் தன் பேரனின் எதிர்காலத்தைத் தன் கொலைகாரப் பிள்ளைகளுக்காகப் பலியிட தயங்காமல் வரும் போதெல்லாம் தன் அட்டகாச வில்லி நடிப்பால் பதற அடிக்கிறார்!

ஆஸ்திரேலிய நடிகையான Jacki Weaver க்கே இந்த விருது கிடைக்க வேண்டும் என்று நான் விரும்பினாலும் துணை நடிகைப் பிரிவில் 'Golden Globe' விருதைக் கடத்தி இருப்பவர் Melissa Leo (The Fighter)! ஆஸ்கார் விருதும் அவருக்கே கிடைக்கும் சந்தர்ப்பம் பிரகாசமாகவே இருக்கிறது. இவரும் ஒரு சுயநல அம்மாவாக இயல்பாக நடித்திருந்தார். "உன் நலம் தான் எனக்கு முக்கியம்" என்று தன் மகனான குத்துச் சண்டை வீரன் மிக்கியிக்குச் சொல்லிக்கொண்டு தன் காரியங்கள் நடக்கிறதா என்பதிலேயே கரிசனையாக இருக்கும் தாயாக நன்றாகவே நடித்திருந்தார்!

எந்தப் பிரபல நடிகர் இருந்தாலும் சுவையான திரைக்கதை இல்லாத பட்சத்தில் அந்தப் படம் மண்ணைக் கவ்வும்! இதற்கு ரஜினி முதல் விஜய் வரை யாரும் விதி விலக்கில்லை. திரைப் படத்திற்காகவே எழுதப்பட்ட (Original Screenplay) திரைக்கதைக்கான விருது அநேகமாக 'King's Speech' படத்திற்கே கிடைக்கலாம். அதே பிரிவில் நியமனம் செய்யப்பட்டுள்ள இன்னுமொரு படம் 'Another Year'. மறையும் ஒவ்வொரு வருடமும் அதனோடு சேர்ந்து மறையும் வாழ்க்கையுமாக வாழும் சில முதியவர்களின் அன்றாடத்தை தொடரும் கதை. "பொழுது விடிந்தால் ஏன் விடியுது என்பார் ஒரு கோடி, பொழுது போனால் ஏன் போகுது என்பார் மறு கோடி" என்ற பாடல் வரிகள் தான் இந்தப் படத்தின் கதை சுருக்கம்!

வெளிநாட்டுப் பட நியமன விருதுப் பிரிவில் கனடியப் படம் 'Incendies' இடம்பெற்றுள்ளது. படம் பார்க்க இரும்பு இதயம் வேண்டும்! உலகங்கும் நடைபெறும் போராட்டங்களும் புரட்சிகளும் பெண் போராளிகளின் தியாகத்தினால் இன்னும் சிவந்திருக்கின்றன. அவர்கள் பட்ட வேதனைகளும் விட்ட கண்ணீரும் பல நாடுகளில் தடை செய்யப்பட்ட பக்கங்களாகி விட்டன. அப்படியான ஒரு பெண் போராளியின் இதயம் உடைக்கும் கதை தான் படம்.

***'When You Go Home, Tell Them Of Us And Say, For Their Tomorrow, We Gave Our Today'***

"நீங்கள் வீடு திரும்பும் போது எங்களைப் பற்றிச் சொல்லுங்கள், எப்படி உங்கள் நாளைகளுக்காக எங்கள் இன்றைகளைத் தியாகம் செய்தோம் என்று... "



221

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



முடிசார்ந்த மன்னரும் ஈற்றில் பிடிசாம்பல்....



ரூபனும் ரூபியும் பமிலி டே க்கு என்ன செய்வதென்று திட்டமிட்டுக்கொண்டிருந்தனர். அதாவது ரூபன் ரூபி மட்டும்........(வெளிநாடுகளைப் பொறுத்தமட்டில் பமிலி அதாவது குடும்பமென்பது கணவன்-மனைவி 18 வயதுக்குட்பட்டவர்கள்) ரூபன் மூவிக்குப்போவமா அல்லது சைனீஸ் ரெஸ்ரோரன்ருக்குப்போவமா? என்று கேட்க செக்கண்ட்புளோர் செல்லம்மா கடைக்கண்ணால் உப்புச்சப்பில்லாத சாப்பாட்டை பகிர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்த உலகரையும் முருகேசரையுமும் பார்த்தா.


ரூபனும் ரூபியும் 2, 3 தடவை உலகரை சைனீஸ் ரெஸ்ரோரண்டுக்குக் கூட்டிக்கொண்டுபோய் உலகர், பச்சத்தண்ணி மட்டும் குடித்துவிட்டு பட்டினியாகவந்து, உப்பில்லாத பருப்பும்சோறும் சாப்பிட்டது நல்லஞாபகம்



சைனீஸ் ரெஸ்ரோரன்ஸில் எண்ணையும் கொழுப்புமில்லாத உணவு ஏது? அதற்குப்பிறகு உலகர் ரூபன் ரூபியுடன் வெளியே சாப்பிடப்போவதில்லை.



உலகண்ணை பமிலி என்றால் குடும்பம் எங்கடை குடும்பமெண்டால் அம்மா அப்பா அம்மம்மா அப்பப்பா பாட்டன் பாட்டி பூட்டன் பூட்டி சித்தப்பா சின்னம்மா சீனியப்பு சீனியாச்சி குஞ்சியம்மா குஞ்சியப்பு பெரியப்பா மாமா மாமி மச்சாள் மச்சான்...




என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே ஓ! மை கோட் ஓல் தீஸ் றிலேற்றிவ்ஸ் என்று ரூபி கேட்க உலகர் ரூபனை கடைக்கண்ணால் பார்த்தார். அவர் மனதில் 'சொந்தம் எப்போதும் தொடர்கதைதான் முடிவேயில்லாதது' பாடல் வந்துபோனது

ஊரைப்பொறுத்தமட்டில்... ஆட்டிலறி அன்னம்மா நீண்டபெருமூச்சுவிட்டபின் சொல்லத்தொடங்கினா ரூபி நன்மை தீமைகளுக்கு அழைத்தாலும் அழைக்காவிட்டாலும் சம்பிரதாயத்திற்கு நெருங்கிய உறவினர் தூரத்து உறவுகள் அயலவர்கள் வீடுகளுக்கு நாம் சென்றேயாக வேண்டும். அல்லது அவர்கள் நமது குடும்பங்களில் நடைபெறும் நன்மை தீமைகளில் கலந்துகொள்ள மாட்டார்கள்.



ஊரோடு ஒத்துவாழ். தனிமரம் தோப்பாகாது. வாழ்வது வனமாக இருந்தாலும் சேர்வது இனமாக இருக்கவேண்டும். என ஒருபிரசங்கமே செய்துமுடித்தா.



ரூபி ஜேர்மனியில் இருக்கும்பொழுது பிராங்பேட் பேரம்பலம் பல உறவுகளைப்பற்றி சொன்னது ஞாபகம் வந்தது. இடம்பெயர்ந்தோம் புலம்பெயர்ந்தோம். உறவுகளை இழந்தோம் தொலைத்தோம்.

உலக அதிசயம் எகிப்திலுள்ள பிரமிட்டுக்கள். அதைவிட அதிசயம் 30 வருட ஜனாதிபதி ஆட்சியை மக்கள் புரட்சிமூலம் 18 நாட்களில் தூக்கியெறிந்தது. இளமை நிலையாது.



## ஞாபகம்.. வருகிறதா



பெப்ரவரி 18. மாசி மகம்

18. மாட்டின் லூதர் கிங் நினைவு தினம்

21. பமிலி டே

22.காதல் மன்னன் ஜெமினி கணேசன் நினைவு தினம்

# மாயன்...

35ஆம் பக்கத்தொடர்ச்சி

1973-ஆம் ஆண்டு வெளிவந்த "The Mayan Factor" எனும் தமது நூலில் பல விடயங்களை அவர் குறிப்பிட்டிருக்கிறார். தற்போதைய நிலையில் இப்பிரபஞ்சத்தில் "The Great Cycle" எனும் மாபெரும் சுழற்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் கால

இந்த மாபெரும் சுழற்சி முடியும் தறுவாயில் உலகில் மாறுதல்கள் உண்டாகும் சாத்தியங்கள் இருப்பதாக மாயாக்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். இக்கணித முறை சிறு கூறுகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு காலகட்டத்திற்கும் குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவை இருபது இருபது ஆண்டுகளாக பிரிக்கப்படுகிறது.



அளவு ஏறக்குறைய 5000 ஆண்டுகள் என குறிக்கப்படுகிறது. அதன் அடிப்படையில் மாயாக்களின் கி.மு. 3113 முதல் கி.பி. 2012 வரையிலான நாள்காட்டி அமைந்திருக்கக் கூடும் என கருத்துரைக்கிறார்.

அக்கணித முறையின் இறுதிக் காலகட்டமாக கருதப்படுவது 1992 முதல் 2012 ஆண்டுகளாகும். இது மொத்தம் 20 ஆண்டுகளைக் கொண்டிருக்கிறது. இதை 'The Earth Regenaration Period எனக் குறிப்பிடுகிறார்கள்.


Ontario Vegetarian Food Bank

Employment Training & Skills Resource Centre

**Certified Food Handlers**

Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handlers Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.



**Food Handler Training available for:**
PSW's, Food service Workers, ECE /ECA Workers, Day Care Providers, Dietary Aides, Cooks, , Home Care Workers, Nannies, Restaurateurs.
*Financial assistance may be available to those who qualify

**CALL TO REGISTER: (416) 744 (HELP) 4357**

**Winter Food and Fund Drive**
"No One Should Go Hungry"
Started from Nov.15, 2010 Mar.15, 2011

**HELP US TO HELP THE HELPLESS!**

North York: 3005 Islington Ave. (Islington / Steeles)
Scarborough: B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)

# வாழும் மனிதர்கள்



வாழ்க்கைக்கணக்குகளோ ஆயிரம்
பார் காணும் பேதங்களோ ஓராயிரம்
வாழும் மனிதகணக்குக்குள்
ஆழப்போய் இணக்கத்தைக்கண்டவர்
பிணக்கின்றி வாழ்கிறார்கள்
மற்றவரோ பற்றோடு கணக்கிடுகிறார்கள்
கற்றது சரிதான் வழி பிழை என்கிறார்கள்
ஆறும் இரண்டும் எட்டு என்றால் என்ன?
நாலும் நாலும் எட்டு என்றால் என்ன?
மூன்றும் ஐந்தும் எட்டு என்றால் என்ன?
ஐந்தும் மூன்றும் எட்டு என்றால் என்ன?
ஒரு குடைக்குள் வாருங்கள் என்றாலோ
பலவழிகள் எமக்கும் தெரியும்
எம் வழியே சரி என்கிறார்கள்
ஆனாலும்
மனதுள் குமுறுகிறார்கள்
உரக்கக்கூறினால் பொய் மெய்யாகிவிடுமா?
இரக்கத்துடன் காக்கும் அமைதி வீணாகிவிடுமா?
முக்குண மனிதர்களை இனம் கண்டே
எக்கணமும் கோபத்தைக்காத்து, குணம் காணும்
வாழும் மனிதர்கள்
கோபதாபம் கடந்த மாமனிதர்கள்
நாளை உலகை ஆளும் சிறார்களே
சமநோக்கால் உலகை வெல்லுங்கள்

---ரஞ்சி கதிர்---
ranji24.kathir@gmail.com

# மனித குலத்தினை...

23ஆம் பக்கத்தொடர்ச்சி

நிரந்தரமாக வாழ்வில் காயப்பட்டவர்களுக்கு இத்தானம் ஏதோ ஒரு வழியில் மீட்சியினை கொடுக்கிறது.

**கண்** (Eyes)
'கண்விழ படலம்' கிடையாதா? அது பொருத்தப்பட்டு கண் பார்வை கிடைக்காதா? என ஏங்கும் பார்வையில்லாதவர்கள் உலகில் ஒன்றா? இரண்டா? அது சொல்லவே தேவையில்லை.

**உறுதியான ஒரு முடிவு!**
உங்களின் மரணத்தின் பின்பு, ஏதோ ஒரு வழியில் மனித குலத்தினை வாழவையுங்கள்.

இறந்த பின் நெருப்பிலும் மண்ணிலும் சிதையும் இவ்வுடலின், சில பாகங்களுக்காக ஏங்குபவர்களுக்கு உங்கள் உறுப்புகளை தானமாகக் கொடுக்க முன்வாருங்கள்.

**"மரணத்தின் பின்பு அழிந்துபோகும் உங்கள் உடல் உறுப்புக்களை தானமாக கொடுப்பதனால் இறந்தும் இறவாமை பெறுகிறீர்கள்"**
**இன்றே முடிவெடுங்கள்.**

# காதலன்பு ஞாலத்தில் ஒரு வரம்



கன்னியும் காளையும்
கருத் தொரு மித்தால்
அதன் பெயர் காதல்

கண்ணொடு கண்ணும்
கலந்துறவாடினால்
காதல் பிறக்கு மென்பர்

கண்கள் பேசும் போது
வாய்ச் சொல் வலுவிழந்துவிடும்
என்றார் வள்ளுவர்

உடலழகும் உறுப்பழகும்
காதல் மெல்ல கருக் கொள
காரணமாகி விடுகின்றன

காதல் செய்வோர் பின்னுள
காலத்தை கணக் கெடுப்பதில்லை
கண்டதே காட்சியாகின்றது

குலம் கோத்திரம் குடும்பத்தின்
பொருள் வளம் யாவும்
கொள்கையில் தூசாகின்றன

தாய் தந்தையரை பிரிந்து
உடன்போக்காய் மாறுகின்றது
உயிர்த்துடிப்புள்ள காதல்

காதல் ஒரு மாயையென்பர்
கணநேரத்தில் கால்கொள்கின்றது
உண்மைக்காதல் ஊமையாவதில்லை

ஒழுங்கு படுத்திய திருமணம் கொலை
காதல் திருமணம் தற்கொலை
எது உண்மை யாரறிவார்?

நிறை வேறாத காதலை
காப்பியம் காட்டும்
நிலைத்த காதலை வாழ்வியல் காட்டும்

முற்றிய காதல் தான்
கற்கண்டாய் சுவைக்கும்
பற்றிய இணைப்பு பழுதுபடாது

இளமைக் காதல் நன்கு
முறுக்கேறி யிருக்கும்
முதுமைக் காதல் முடங்கிவிடும்

காதல் சின்னம் காட்டுவாருண்டு
சாதலுக்கு பின்னும் சரிதையை
சாற்றி நிற்கும் சால்புடையது

தாய் தந்தை அன்பு
உற்றார் உறவினர் அன்பு
காதலின் மறுவடிவமேயாகும்

இறைவன் மீதுள பக்தியும்
காதலின் ஒருவகை இதுதான்
கடவுட்காதல் நற்கதி நல்கும்

காதல் செய்வீர் காதல் செய்வீர்
காசிணி மாந்தரே வாழ்க்கை சுவைக்க
வாழ்நாள் இறுதிவரை செய்வீர் காதல்

காதல் போயிற் சாதல் என்று
சடுதியில் உயிரை விடுபவருண்டு
வீழ்வதும் வாழ்வதும் விதியின் பயனே!



நா. க. சிவராமலிங்கம்

# 2011 ஒஸ்கார்

31ஆம் பக்கத்தொடர்ச்சி

வைத்தியர். இவர் ஆபிரிக்காவில் உள்ள அகதிகள் முகாமில் சேவையாற்றுகின்றார். இவர் இரண்டு பெரிய உலகில் வலம் வருகின்றார். ஒன்று மிகவும் மோசமான பொருளியல் சூழல் உள்ள ஆபிரிக்கா. மற்றையது வளர்ச்சியடைந்த டென்மார்க். இவரின் இரு உலக சூழல் இவருக்கு வீட்டில் குழப்பத்தை ஏற்படுத்துகின்றது. மனைவி இரண்டு பிள்ளைகளுடன் பிரிந்து செல்ல விரும்புகின்றார். இவர்களது மூத்த மகன் பாடசாலையில் அங்கத சேட்டைகளுக்குள்ளாகின்றான். இவனை பாடசாலையில் புதிதாக சேர்ந்துள்ள லண்டனைச் சேர்ந்த மற்றொரு மாணவன் காப்பாற்றுகின்றான். இவர்களிடையே ஒரு நல்ல பிணைப்பு ஏற்படுகின்றது. பழிக்கு பழிவாங்குதல் என்ற விடயத்தை படம் மீள்பார்வைக்குட்படுத்துகின்றது.

## 5. *Biutiful* (மெக்சிக்கோ)

Uxbal பார்சிலோனாவில் பல தரப்பட்ட வியாபாரங்களின் முகவர். இவரது சீன நண்பர்கள் சட்டத்திற்கு புறம்பான வகையில் டிவிடிக்கள் போன்றவற்றை தயாரிக்கின்றார்கள். இவரது ஆபிரிக்க நண்பர்கள் இவற்றை வீதிகளில் விற்பனை செய்கின்றார்கள். கட்டிடம் கட்டும் வேலைக்கு பதிவு செய்யப்படாத பத்திரங்களற்றவர்களை வழங்குவது இவரது மற்றொரு வேலை. இவை எதுவும் செய்யாத நேரங்களில் இவர் தனது இரு பிள்ளைகளை வளர்க்க வேண்டும். விவாகரத்து பெற்ற மனைவிக்கு இப்பிள்ளைகளை பராமரிக்க நேரமில்லை. இதற்கிடையில் தனது உயிரையும் காப்பாற்ற வேண்டும். ஆம் இவருக்கு புற்றுநோய். வளரும் பிள்ளைகளுக்கு தான் இறந்த பின் அவர்கள் வளர ஆவன செய்ய வேண்டும். இப்படத்தின் இயக்குனர் Alejandro González Iñárritu. இவரது முந்தைய படங்கள் உலக பிரசித்தி பெற்றவை. மணிரத்தினத்தின் ஆய்த இவரது Amores perros இன் பிரதி. 21 கிராம் என்ற மற்றொரு படம் இப்பொழுது இதே பெயரில் தமிழில் பிரதியெடுக்கப்படுகின்றது. 21 கிராம் என்பது ஒரு மனித உயிர் இறப்பதற்கு முன்னரும் இறந்த பின்னரும் ஏற்படும் நிறை மாற்றம். Babel ம் இவரது இயக்கத்தில் வெளிவந்த படம். இயக்குனர் ஒரு பேட்டியில் இப்படம் நம்பிக்கையை பிரதிபலிக்கின்றது. நம்பிக்கையில்லையெனில் வாழ்வில்லை. இரண்டாவதாக மனித வாழ்வில் ஏற்படும் வெறுப்பு என்பது எயிட்ஸை விடவும் கொடூரமானது என்கிறார் (I think is a key word to what we are missing in this world, because I think that the big disease is not AIDS, not anthrax or terrorism, but the illness that is killing us is hate.)

விமர்சகர்களால் இவ்வருடத்தின் சிறந்த படங்களுள் ஒன்றாக கருதப்படும் Exit Through the Gift Shop" விவரணத் திரைப் படவரிசையில் போட்டியிடுகின்றது. ஒஸ்காரின் அரசியல் என தனிக் கட்டுரையே



எழுதலாம். சார்லி சப்ளின் போன்ற பலர், அவர்களது படைப்புக்கள் ஒஸ்காரினால் நிராகரிக்கப்பட்டுள்ளன. இவ்வருடமும் நாம் பல ஆச்சரியங்களை பார்க்கலாம். பிறமொழிப் படங்களனைத்தும் தீவிர சமூக பிரச்சினைகளை வெளிப்படுத்தியுள்ளன. பிரதான வரிசையில் தேர்வு செய்யப்பட்ட படங்களில் இரண்டைத் தவிர மற்ற படங்கள் அனைத்தும் சமூகப் பிரச்சினைகளை வெளிப்படுத்தவில்லை. இப்பொழுதெல்லாம் ஒஸ்கார் நடிக நடிகைகள் அணியும் உடைகளுக்கும் அணிகலன்களுக்குமே பிரசித்தி பெற்றது. இங்கு குறிப்பிட்டுள்ள அனைத்து பிறமொழிப்படங்களும் ரொரண்ரோ திரையரங்குகளில் காட்சியளிக்கப்படுகின்றன.

# அம்பேத்கர்

22ஆம் பக்கத்தொடர்ச்சி

பெய்த காட்சிகள் மிகப் பொருத்தமாய் இங்கு இணைகிறது.



அம்பேத்கர் மறு உருவெடுத்து வந்தது போல மம்முட்டிக்கு அத்தனை கச்சிதமாகப் பொருந்துகிறது வேடம். தன்னுடைய தகுதிகளையெல்லாம் சொல்லிவிட்டு, "என்னிடம் பாடம் கற்க விரும்பாதவர்கள் வகுப்பறையை விட்டு வெளியேறலாம்" என்று கம்பீரமாகச் சொல்லும்போதும், உடன் பணியாற்றும் பேராசிரியர்கள் தான் குடிக்க தண்ணீர் எடுக்கும் பானையில் இருந்து தண்ணீர் எடுத்து குடிக்க மாட்டோமென்று சொல்லும் போது, "உங்களுக்குத்தான் தீட்டுப்பட்ட நீரை புனிதமாக்கும் மந்திரம் தெரியுமே திரிவேதி" என்று தீர்க்கமாகப் பார்த்துக்கொண்டே மந்திரத்தை உச்சரிக்கும் போதும், மனைவியிடம் பரிவு காட்டும் போதும், எப்போதும் கேலி இழையோடும் காந்தியுடனான உரையாடலிலும், "சங்கராச்சாரியின் இடத்தில் ஒரு தாழ்த்தப்பட்டவரை அமர்த்தி அவர் கால்களில் பிராமணர்கள் விழுவார்களா?" என்கிற கேள்வி கேட்கும்போதும் மம்முட்டி, அம்பேத்கராகவே வாழ்ந்து காட்டியிருக்கிறார்.

ரமாபாயாக வரும் சோனாலி குல்கர்னி தன் நுணுக்கமான முகபாவங்களால் தன் பாத்திரத்திற்கு வலு சேர்த்திருக்கிறார். காந்தியாக நடித்திருக்கும் மோகன்கோகலேவிற்கும் காந்தியின் பாத்திரமுணர்ந்து மிகப் பொருத்தமாக காந்திக்கு தமிழில் குரல் கொடுத்தவருக்கும் முக்கியமாய் பாராட்டுதல்களை தெரிவிக்க வேண்டும்.

இவர்களைத் தவிர படத்தில் மற்றவர்கள் யாரையும் அடையாளம் காண முடிய வில்லை. பெரும்பாலானவர்கள் புதுமுகமாக இருக்க வேண்டும். ஆனால், எல்லோருமே மிகச் சிறப்பாக நடித்திருக்கிறார்கள்.

மொழியாக்கம் சில இடங்களில் சற்றே நெருடுகிறது. என்றாலும், தமிழ் பேசும் அம்பேத்கரைப் பார்க்க மகிழ்ச்சியாகவே இருக்கிறது.

அஷோக் மேத்தாவின் ஒளிப்பதிவு, எந்த இடத்திலும் உறுத்தாதபடி அளவாக இருக்கிறது. உணர்வுகளுக்குத் தகுந்த ஆனந்த் மோடக்கின் இசையும், அக்காலகட்டத்தை கண்முன் நிறுத்தும் நிதின் சந்திரகாந்த் தேசாயின் கலை இயக்கமும் மிகச் சிறப்பான முறையில் அமைந்திருக்கின்றன. பரோடா, நாக்பூர், பூனா, கொலம்பியா, லண்டன், டெல்லி, மும்பை என்று பல இடங்களையும் சுற்றி வந்தாலும் நிஜத்திற்கு அந்தக் கால வாழ்க்கையை வடிவமைக்க கலை இயக்குநர் ரொம்பவே மெனக்கெட்டிருக்க வேண்டும். சவுதார் குளத்தில் இறங்குவதற்காக அம்பேத்கர் படகில் வந்திறங்கும் காட்சியின் பின்னணியில் வரும் பாடலும், அம்பேத்கர் தபேலா வாசிக்க, அவர் வாழும் பகுதியிலிருக்கும் மக்களிடையே பாடப்படும் பாடலும் மொழி புரியாவிட்டாலும் கூட மனதைக் கவர்கின்றன. காந்தி படத்திற்காக சிறந்த ஆடை வடிவமைப்பு பிரிவில் ஆஸ்கர் விருது பெற்ற பானு அதையா இதில் பணியாற்றியுள்ளார். சட்ட மாமேதை என்ற அளவிலேயே அறியப்பட்டிருக்கும் அம்பேத்கரின் அறியப்படாத பக்கங்களையும் காட்டுகிறது இத்திரைப்படம். இந்தியர்கள் அனைவரும் கட்டாயம் பார்க்க வேண்டும், இந்தியர்கள் அல்லாதவர்களும் பார்க்கலாம்.




# இறை, அவதார மகிமை

எனக்குத் தருவதாக வாக்களித்த எல்லாவற்றையும் இறைவன் நிச்சயம் தருவார் என்பது எனக்குத் தெரிந்தபடியால் நான் பயப்படாது நம்பிக்கையுடன் வாழ்கிறேன்.

எல்லாம் வல்ல ஆண்டவனின் நாமமகிமை அவரது வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றும் எனப் புனித வேதாகமத்தின் 138 ஆம் சங்கீதம் எடுத்துரைக்கின்றது. ஆமாம்! பக்தன் விரும்பிடும் உருவிலே தோன்றி இறைவன் அருள்மழை பொழிகின்றார். தன்னிடம் முற்று முழுதாய் சரணடைந்த பக்தனுடன் முன்னும் - பின்னும், உள்ளும் - புறமும் நீக்கமற நிறைந்திருக்கிறார். இவ்வாறு மனத்தென்பூட்டி ஆறுதல் அளித்திட ஒருவர் எமக்கு இருக்கிறார் என்பதே எமக்குப் பெருமிதம் தருகின்றது. இத்தகைய வெறும் வார்த்தைகளைக் கேட்பதை, அவை எடுத்துச் சொல்வதை நாம் நன்கு விளங்கிப் புரிந்து கொள்ளவேண்டும். அண்டசராசரங்களுடன் என்னையும்



சிருஷ்டித்த இறைவன் எனக்காக எப்போதும் என்னுடன் கூட முன்னும் பின்னும் இருக்கிறார் எனும் உண்மை எனக்குப் புத்துணர்ச்சி அளிக்கின்றது. இதனால் நன்மை பயக்கும் பல சந்தர்ப்பங்களும் நிகழ்வுகளும் எனக்கு முன் நிச்சயம் விரியப் போகின்றன. கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பது எனது மனப்பாரத்தையெல்லாம் விரட்டி அடிக்கின்றது. இறைவன் எனக்கு நிச்சயம் தருவேன் என வாக்களித்தவற்றுள் எனக்கு மிகவும் பிடித்தது என்ன தெரியுமா? ஒருபோதும் உன்னை விட்டு நான் பிரியமாட்டேன்! ஒருபோதும் உன்னை நான் கைவிடமாட்டேன்! அப்பாடி! எவ்வளவு ஆறுதலை இந்தவார்த்தைகள் எனக்குத் தருகின்றன.

இன்றுவரை உன்னைப் படைத்தவர் உனக்குத் தருவதாக வாக்குறுதி அளித்தவற்றை நீ மறந்திருக்கலாம். அல்லது அவ்வாறு இறைவன் வாக்குறுதியளித்திருப்பதே உனக்குத் தெரியாமல் கூட இருக்கலாம். ஆண்டவன் உன் வாழ்வில் உனக்கு அருள்வதாக வாக்களித்திருக்கும் சகல நன்மைகளிற்கும் நன்றி கூறிப் பிரார்த்தித்துக் கொள்.

**எனக்குத் தருவதாக இறைவன் வாக்களித்திருக்கும் நன்மைகளை நினைவுகூர்ந்து இன்றுமுதல் நான் நன்றியுடன் அவர் சொற்படி தார்மீகமாக வாழப்போகின்றேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 184

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி

ON THE SPOT
HOME INSPECTIONS INC.
Danny Sripath, B.Sc.
Qualified Home Inspector
Mold Specialist
416.823.3552 / 416.289.0033
onthespothome@yahoo.ca
880 Ellesmere Road, Unit# 203B
Toronto, ON, M1P 2W6
IAC2 CERTIFIED Mold CERTIFIED
InterNACHI
CanNACHI

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
Virus Removal
Internet Sharing
Computer Tune Up
Computer Repair
அனைத்து கணணி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES

